# தமிழ்ப் பொழில்

## தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௫<br>குரோதி, கார்த்திகை, மார்கழி.<br>1964 நவம்பர், டிசம்பர் | மலர் |
| --- | --- | --- |
| ௪௰ | | ௮. ௯. |


## ஞாலப்பற்று

**புலவர். தி. நா. அறிவுஒளி**

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று வேண்டும் என்பர். நான், நாட்டுப்பற்றைக் கடந்த 'ஞாலப்பற்று' வேண்டும் என்கிறேன். 'நம்நாடு' என்றும் பிறநாடு என்றும் வேற்றுமை பாராட்டுவது சீரிய பண்புடைமையன்று. "எந்நாடும் என்நாடே!" என்ற எண்ணமும் அன்பும் வேண்டுவதே தலைசிறந்த அறிவுடைமை யாகும். உலகப்பற்று அமையும்போதுதான் விரிந்த உள்ளம் அமையும். குறுகிய கொள்கைகளுக்குச் சிறைப்பட்டு அரிய எண்ணங்களை வளர்த்துக்கொள்ள இயலாமல் மக்கள் 'இருளாளர்'களாகக் கிடக்கும் இரங்கற்குரிய இழிநிலை கண்டு துன்புறுகிறேன். எளிய நிலையினராக மக்கள் வாழ்வது அவர்களின் அறிவு வளத்தின் வெற்றியைக்காட்டாது.

நடைமுறையில் உலகநாடுகளில் அமைந்திருக்கும் அரசியல் முறைகளும், சட்ட அமைப்புக்களும், ஆட்சிப் போக்குகளும் முற்றும் மாறுபட வேண்டும். தற்போதுள்ளவை அழிந்து போகவேண்டும்; புதிய அன்பறக் கொள்கை உருவாக வேண்டும்.

உலக நாடுகள் அறிவுநிலை நோக்கி வளர்வதற்கு அன்பு வழியில் நடக்க முற்பட்டால், சட்டங்களையும், அரசியல் கொள்கைகளையும வழிகளாகக் கொள்வது பேதைமைக்குரியதாகும்.

தொன்முதைப் புலவர் பூங்குன்றனாரின் போற்றுதற்குரிய புகழ்க் கொள்கை நிகழ்கால உலக வாழ்வாக ஆக வேண்டுமாயின், அடிப்படையாக உள்ள தற்காலப் போலி அரசியல் கொள்கைளும், வெறியூட்டும் அரசியல் திட்டங்களும் மாறியே தீரவேண்டும். மாறுவதற்கு முன், அதனை மாற்றுகின்ற அகப்புரட்சி—உணர்ச்சி விழிப்பு உண்டாக வேண்டும். அச் செயலைக் கலை—இலக்கியத் தொண்டுகளே உருவாக்க வேண்டும்.

கல்வித்திட்டங்கள் நாட்டரசுப்பற்றை ஊட்டுங் கருவியாக உருவாக்கப்பெறுவது பெருமடமையாகும். ஞாலக் காதலை ஊட்டும் கோவிலாகக் கல்வியகங்கள் அமைவது அறிவும் சால்பும் சான்றதாம். ஞாலக் காதலை ஊட்டும் தொண்டில் பல்லாயிரவர் நல்லறிஞர் பல்லாண்டுகள் கடும்பணியாற்ற வேண்டும். தோல்விகளும்

துன்பங்களும் துவக்கந் தொட்டே அமையும். அத்துணை இடரையும் ஏற்று, பொறுத்து, எதிர்த்து, ஏறுநடையிடும் ஏந்தலர் மட்டுமே இத்துறையில் பணியாற்ற முடியும். ஆயின் எக்காரணத்தாலும் பூங்குன்றன் கொள்கை வற்புறுத்திப் புகட்டப்படுவதாகத்-திணிக்கப் படுவதாக—இருக்கவே கூடாது.

ஒற்றையிழைக் கயிற்றின்மீது நடப்பதைப் போன்றதுதான் நேர்மையான நோக்கோடு கொள்கைகளையுணர்ந்து நடுநிலையோடு வாழ்வது. அணுவளவு பிறழ்ந்தாலும் வீழ்ச்சி திண்ணமே. மிகவும் அரிய கொள்கையை ஏற்றுக்கொள்வது ஒரு பேராண்மையேயாகும். பூங்குன்றன் கொள்கையைக் கோழையர் ஏற்று ஒழுகவியலாது. உள்ளத் திண்மையும் உணர்வுச் செம்மையும் உறுதித் தெளிவும் உடையோர் மட்டுமே அதன் ஒட்பநுட்பமுணர்ந்து ஒழுகவியலும். உலகில் மிகப்பலர் தம் திறமை காட்டவே பலநூல்களைப் பயில்கின் றனர்; அப்படிப்பை விற்று வயிற்றைக் கழுவவும், வகையாக வாழ வுமேஅரிய கருத்துக்களைப் படித்தும், பேசியும், எழுதியும் உணர் கின்றனர். ஆயின் கற்றவண்ணம் ஒழுக விரும்புகின்றவரும; விரும்பியொழுகுபவரும் மிகச்சிலரே. அச்சிலர் மட்டுமே இன்று ஞாலப்பற்றைப் போற்றுபவர்களாக உள்ளனர்.

நேர்மை என்பதையும் வாணிகப் பொருளாக ஆக்கிவிடும் மன்னிக்க முடியாத கொடுமை—குற்றம்—மன்பதையில் இடம் பெற் றிருப்பதைக் காண்கிறேன். அந்தோ 'உலக வாழ்க்கை ஒரு வாணிகம் தான்' எனக் கருதும் இழிதகை மடமை என்று ஒழி யுமோ!

வாணிகம், காசு என்பவை மக்களில் சிலர் ஏதோ சில தன்ன லத்திற்காக இடையில் கண்டுபிடித்தவை என்பதை உலகினர் ஒரு சிறிதும் உணரவே இல்லையே! உணர்ந்தாலும் நம்பவில்லையே!

ஈதென்ன மடமை! வாழ்க்கையைக் காசால் அளப்பதும், மதிப்பிடுவதும் மன்னிக்க முடியாத கொடுமை என்பேன்.

செல்வம் என்பது ஒருகருவி என்பதை யாவரும் நன்கு தெளிய வேண்டும். இக்கருத்தை உலகம் உணரக்கூட இன்று துணியுமோ; துணியாதோ! இவ்வாறு கூறுவதால் மாந்தரனைவரும் ஓட்டாண்டி களாக இருக்க வேண்டும் எனக் கூறுவதாகப் பிறழ உணரக்கூடாது. செல்வத்தைக் கோயில்கட்டி வழிபடும் குருட்டுத்தன்மையை—மடமை யையே—நான் ஒழிக்க விரும்புகிறேன்.

காசின் மதிப்பு மக்களின் மதிப்பைவிட, ஒழுக்கத்தின் மதிப்பை விட, உயிரின் மதிப்பைவிட, அறிவின் மதிப்பைவிட, அறம்—அருள் — இயற்கை ஆகியவற்றின் மதிப்பைவிட, உண்மையின் மதிப்பைவிடச் சிறப்புடையதாக வளர்ந்து வருகிறது நடைமுறை யுலகில்! இதைக் காணும்போது நல்ல உள்ளங்கள் பதறுவதி யற்கை தானே? சான்றோர் உணர்வு துடிக்குமாறு செய்யும் இந் நிலை மேலும் வளர்ந்தால், ஞாலம் சுடுகாடாகிவிடும்.

உணர்ச்சியின் ஆற்றல் குறைந்து வருகிறது. உணர்வின் ஆற்றல் குறைந்தால் உலகம் செழிக்காது.

அறிவு, அறிவாக இருக்க வேண்டும். உணர்வு, உணர்வாக இருக்க வேண்டும். இரண்டும் முரண்படக் கலந்து குழம்பினால் அங்குத் திண்ணமாகச் சிக்கல் உருவாகியே தீரும்.

ஆகவே மக்களை உணர்வுடையோராய் ஆக்க வேண்டும். நல்லுணர்வுப் பிழம்பாக மக்கள் ஆவதோடு, உணர்வு உருக்கம் உடையோராக உருவாகத்தக்கத் தொண்டு பூத்தலர வேண்டும்.

'அரசியல் தெளிவு' மக்களுக்கு நல்ல வகையில் (தமிழகத்தில்) அமையவில்லை. சிறுநோக்கச், சிறுபோக்குகளுக்கு இரையாகி எளியராகிவிடும் இழிநிலையில் உள்ளனர் மக்கள். அறிவைக்கண்டு அஞ்சும் கயவர்கள், அறிவை அழிக்க முயல்வது உலகவியல்பாக விருக்கிறது. ஆனால் உண்மையறிவு அழியாதது என்பதைக் கயவர் உணராதது அன்னார் அறியாமையையே காட்டும்! அழியாத அறிவு, வளரும் என்பதையும் அவ்வளர்ச்சியைத் தடுத்தல் இயலாது என்பதையும் புல்லியர் அறிவதில்லை.

அரசியல் துறையில் முதலாளிகளும், செல்வ வணிகர்களும், தன்னல நோக்கினரும், கயவரும் ஆட்சி செலுத்துவது மாபெருங் கொடுமை மட்டுமல்ல; பண்பேயற்ற இழிநிலையுமாகும். இந்நிலையை முற்றிலும் மாற்ற வேண்டிய பொறுப்பு நேர்மையுள்ளமுள்ள—ஒழுக்க வாழ்வினர்க்கும், அறநம்பிக்கையுள்ள அரசியலாளர்க்கும், ஆன்ற அறிஞர்க்கும் உரிய கடமையாகும்.

தனி நாட்டுப்பற்றெனும் வெறி வளரவளரப், பிறநாட்டுப் பகை வளர—வேர்க்கொள்ள வாய்ப்பாகிறது. இதனால்தான் உலக நாடுகட்கிடையே முரண்களும, பிளவும் மிகுந்து வருகின்றன. நாடுகடந்த ஞால உணர்வு பெறும் அகச்செம்மை மக்கட்கமையவில்லையெனின், அதனை இனிவருங் காலமேனும் ஊட்டி உண்டாக்க வேண்டியது தனி இன்றியமையாததாம்.

நாடுகளுக்கிடையே—மோதல்—முரண்—விளையாது தவிர்க்கப்படவேண்டுமாயின், சான்றாண்மை சான்ற நாட்டுத் தலைவர்கள், ஆட்சித் தலைவர்கள் மிக வேண்டும். இன்று அத்தகுத் தலைவர்கள் பெரும்பாலும் இலர் என்றே கூறவேண்டும். ஆயின், இந்நிலை வளர்வது சிறப்புடையதா என்பதை நடுநின்று எண்ணினால், இந்நிலையால் வளரும் அஞ்சத்தக்கக் கொடுமைநிலை தெற்றெனத் தெளிவாகும். இத்தகு சிக்கலைக் களைய ஓர் 'ஞால இயக்கம்' தொடங்கப் படுமாயின் மிகமிகச் சிறப்பாகும்.

'ஞாலப்பற்று' வளர்க்க முனையும் அந்த நல்ல அடிப்படையை வைத்துச் சிலர் தனிப்பட்ட ஓர் இனத்தையோ, நாட்டையோ கெடுக்கவோ, அழிக்கவோ, பின்னுக்குத்தள்ளவோ முயல முற்பட்டால்; அப்போது தன்னைத்தான் தற்காத்துக்கொள்ள வேண்டிய முழுமுதற் கடமை நேரும். அது காலை 'ஞாலப்பற்றையும்' கைவிட வேண்டியதுதான். தமிழன் பொதுமை மனப்பான்மையை

# கானற்பாணியும் கனகவிசயரும்

K. S. மகாதேவன் M. A. B. Sc.,

காவிரிக்கரையிலே மாதவி கானற்பாணி பாடுகிருள். கங்கைக் கரையிலே கனகவிசயர் தம் காவா நாவைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். இமயக்கணிகை வழிவந்த மாதவி ஒரு தவறு செய்தாள் அதன் விளைவைச் சுமந்தாள். இமய மன்னர் வழிவந்த கனக விசயர் ஒரு தவறு செய்தனர்; அதன் விளைவைச் சுமந்தனர்! காவிரிக்கரையில் நிகழ்ந்த தவறுக்கும் கங்கைக் கரையில் நிகழ்ந்த தவறுக்கும் அடிப்படை ஒன்றே என்பது பெரிதும் சுவைதரும் ஒரு செய்தியாக உள்ளது. இரு தவறுகளும் பொதியில் பண்பு உருவாக்கி வைத்திருந்த பொருள் இலக்கணத்தைப் புரிந்து கொள்ளும் தகுதியில்லாமையால் எழுந்தவையே யாகும்! தமிழர் போற்றும் அகப்பொருள் இலக்கணத்திற்குத் தான் ஒருத்தியே இலக்கியம் என்று சுருக்கி மாதவி கானல்வரி பாடினுள். கனகவிசயரோ தமிழர் தம் வீரத்தின் விளைவான புறப் பொருள் இலக்கணத்தையே குறைத்து எடை போட்டு விட்ட நிலையில் காவா நாவினராகிப் புறம்பேசத் தொடங்கினர்.

## திருமணத்தில் தோற்றுவாய்

'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட' மணமக்கள் தீவலம் செய்யும் முறையில் கண்ணகி கோவலர் திருமணம் நடந்தேறியது. பொதியில் மண்ணிலே இமயப்பண்பு இடம் பெறுவதைக் கண்ட தமிழ்ச் சான்ருேர் என்ன எண்ணினுர்கள் என்பதை இளங்கோவடிகளார் விவரிக்கவில்லை. ஆனுலும், வேற்றுப்பண்பின் மோதலாலே வீட்டின் பெருமை தாழ்வதோடு நாட்டின் வெற்றிப் புகழும் இறங்கி

---

[227-ம் பக்கம் தொடர்ச்சி]

வளர்த்துக்கொண்டே வந்ததால்தான் தன் தனிமையியல்புகளையும், உரிமை விழுப்பத்தையும் பல துறைகளிலும் படுகொலை செய்து விட்டான்.

உயரிய கொள்கையைக் கடைப்பிடிக்கிறவர்களை, மிக எளிதாக, அக்கொள்கையை வைத்தே வீழ்த்திவிட முனைவார்கள். அந் நல்லோரின் நயவஞ்சகப் பகைவர்கள்! அதற்கு இடந்தருதல் தன் தலையைத் தன் கையாலேயே அறுத்துக் கொள்வதாகும்! அந்த நிலைக்கு நம் நாடும் ஆளாகக் கூடாது.

அனைத்துலகம் வாழ எண்ணி, வளர்ந்த அறிவின் எல்லையிலே ஒத்த உரிமை சான்ற ஞாலப்பற்றை உருவாக்குவோம். அப்பற்று எல்லாரையும் வாழவைக்க வேண்டும்; வளரச்செய்யு வேண்டும்; முன்னேறச் செய்யவேண்டும்.

விடுமோ என்ற அச்சம் இல்லறச் செல்வியர் தம் உள்ளங்களிலே இடம் பெற்றிருத்தல் வேண்டும்! வீட்டில் இல்லறம் சிதைந்து விடக் கூடாதே என்ற அவர்கள் கவலை

"காதலற் பிரியாமற் கவவுக்கை நெகிழாமல்
தீதறுக"

என அவர்கள் வாழ்த்துவதாலும் நாட்டின் வெற்றிப் புகழ் நலிந்து விடக் கூடாதே என்ற அவர்கள் கவலை

இப்பால் இமயத்து இருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட்டு உழையதா

என்று அவர்கள் வேண்டுவதாலும் வெளிப்படுதை நாம் அறியலாம்.

அச்சம் வீண் போகவில்லை!

வீடும் நாடும் ஒளிமாழ்கி விடுமோ என்று பெண்டிர் கொண்ட அச்சம் ஏனோ பொருளற்றதாகப் போய் விடவில்லை! பூம்புகாரில் வந்து புகுந்த மறைவழி மணமுறையால் வேரூன்ற முடியாது மெலிந்த இல்லறம் உருப்பசி மரபினோர் உருவத்தில் எழுந்த புய லால் நிலைகுலைந்து ஆடியது. பூமபுகாரின் பழம்பெருமைமிக்க இடங் களில் இருள் படர்ந்தது. வீட்டிற்கு வீடு

"காதலர்ப் பிரிந்த மாதர் நோதக
ஊதுலைக் குருகின் உயிர்த்தனர் ஒடுங்கி"

என்ற செய்தியும் ஒரு வரலாற்று உண்மையாகப் போய்விட்டது! இந்த நிலையில் இல்லறத்திற்கு இன்றியமையாது வேண்டப் படுகின்ற

"அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்"

ஆகிய கடமைகளை நாம் எங்கே எதிர்பார்க்க முடியும்? பூம்புகாரின் இத்தகைய அவலநிலைமையைத் திருத்த நாட்டையாளும் மன்னன் முன் வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் வரவில்லை. இந்த நிலையில்

"அருந்திற லரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது"

என்ற பண்டைச் சான்றோர் உரைத்த தண்டமிழ் நல்லுரையை அரசனுக்கு எடுத்துச்சொல்லப் போகும் 'பார்தொழு பத்தினி' யாராக இருக்கப் போகிறாள்? வாய் பேசாது தீயை வலம் வரும் இந்தக் கண்ணகிதானா அந்தப் பத்தினி?

அகம் குழம்பும் நேரத்தில் புறம் பொலியும் என்று எவர்தாம் எதிர்பார்க்கக் கூடும்? பொதியில் பண்பு உருவாக்கியிருந்த புறப் பொருள் திறன்

"குமரியொடு வட இமயத்து
ஒருமொழி வைத்து உலகாளும்"

பெருஞ்சிறப்பை தமிழ் இனத்திற்குத் தேடித் தந்திருந்தது. பரந்து கிடந்த இந்தியத் துணைக்கண்டத்தினைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தமிழர்களே முன்னின்று ஏற்றிருந்ததால் இமயமலை •

" முடிமன்னர் மூவருங் காத்தோம்பும் தெய்வ
வடபே ரிமயமலை "

என்று பேசப்பட்டது. இமயத்தின் நெற்றியில் சுடர்விட்டு நின்ற மூவேந்தரின் இலச்சினை இந்தியத்துணைக்கண்டத்தில் அடிவைக்க நினைக்கும் அயலாரை அஞ்சி ஊக்கமழியச் செய்தது. ஆனால், வந்து நுழைந்த புதுப்பண்பால் வீட்டின் பெருமை குழம்பத் தொடங்கிய நேரத்தில் மூவேந்தர் பாதுகாப்பில் வளம் பெற்று வாழ்ந்து வந்த இமயமன்னர்கள் நன்றி மறந்து கலகக்கொடி ஏந்தத் தொடங்கிவிட்டனர். தம்மில் ஒன்று கூடும் இடங்களிலெல்லாம் தமிழர் வீரத்தை இகழ்ந்து பேசத் தலைப்பட்டனர்!

சரிந்து கொண்டிருக்கும் தாயகத்தின் வெற்றிப்புகழை மீண்டும் நிலைநிறுத்துவதற்குத் தாய்குலத்தின் சார்பில் தமிழகத்தின் பெருமன்னனுக்கும் கட்டளையிடப்போகும் 'பார்தொழுதேத்தும் பத்தினி' யாராக இருக்கப் போகிறாள்? வாய்திறவாது தீயை வலம் வரும் இந்தக் கண்ணகிதானா அந்தப் பத்தினி?

### அகத்தில் தோற்ற மாதவி

கண்ணகியின் அகவாழ்க்கையில் குறுக்கிட்ட மாதவி ஆடல், பாடல், அழகு ஆகிய ஒப்பற்ற மூன்றினையும் படைக்கலன்களாகக் கொண்டிருந்தாள். அவளை அணைந்த பொழுதே 'குன்றாக் கொள்கைக்' கோவலன் விடுதலறியா விருப்பினனாகிக் கண்ணகியை மறந்து விடுகிறான்! எடுத்த எடுப்பிலேயே ஏற்பட்ட இந்த வெற்றியை மாதவி தனக்குக் கிடைத்த இறுதி வெற்றி எனத் தப்புக் கணக்குப் போட்டு விடுகிறாள்!

பத்துத் துவரினும் ஐந்து விரையினும்
முப்பத்திருவகை ஓமா லிகையினும்

வாசமூட்டப்பட்ட தன் குறுநெறிக் கூந்தலின் மணத்தில் கட்டுண்ட கோவலனது உள்ளத்தில் சிறிதும் சலிப்பு ஏற்பட்டு விடாதபடி 'நிலவுப் பயன் கொள்ளும்' முற்றத்திலே கலவியும் புலவியும் அளித்து அவனைத் தன் கண்ணில் வைத்துக் காத்து வருகிறாள். ஆனால், கண்ணகி என்ன நினைப்பாள் என்ற எண்ணமே அவன் உள்ளத்தில் எழவில்லை! கோவலன் கண்ணகியை மறந்தான் என்று கூறும் அடிகளார் மாதவி கண்ணகியை நினையாது போனதற்குரிய விளக்கம் காணும் பொறுப்பை நம்மிடமே விடுத்துச் செல்கிறார்! உண்மையிலேயே ஆடலரசியாகவும், பாடலரசியாகவும், அழகரசியாகவும் இருந்த மாதவி தான் ஒருத்தியே அன்புக்கிலக்கி

யமாகத் தோன்றிய அன்பரசி என்றும் எண்ணியிருக்க வேண்டும். மண்தேய்த்த புகழ்கொண்ட கோவலன் உள்ளத்தைக் கோவிலாகக் கொள்ளும் தகுதி கலையரசியான தன் ஒருத்திக்குத்தான் உண்டு என்று அவள் நினைத்திருக்க வேண்டும். தான் அகப்பொருளின் செவ்வியறிந்து தலைப்படும் அளவிற்குக் கண்ணகி உள்ளிட்ட எவருமே தலைப்படுதல் இயலாது என்ற முனைப்பும் அவள் மனத்திலே வேரூன்றியிருத்தல் வேண்டும். முடிவாகச் சொல்ல வேண்டுமானால் பொதியில் கண்ட அகப்பொருளின் எல்லையையே தொட்டு விட்டதாக அவள் மனப்பால் குடித்து மயங்கிக் கிடந்தாள்! அந்த மயக்கத்தோடு தான் ஊரையும் உலகையும் பொருட்படுத்தாமல் கண்ணகியின் கணவனோடு பலர் அறியக்கடல் விளையாட்டுக் காணச் சென்று 'புன்னை நீழற் புதுமணற் பரப்பில்' இருந்தனள். இந்த நிலையில் 'பூம்புகார்ப் பொற்றொடி' மாதவிக்குப் பூம்புகார்ப் பாவை கண்ணகி பற்றிய நினைவு எங்கே எழப் போகிறது?

## கண்ணகி முன்னர் மாதவி

கண்ணகிக்குக் கோவலன் செய்த சிறுமை கடலினும் பெரிது. ஆனால் அவன் மாதவிக்குச் செய்த குறையைத் தேடித்தான் பார்க்க வேண்டும்! பொதுவாக உலகத்தில் காதலனைக் காணாதவிடத்துக் காதலி தவறே காண்பதும் காதலனைக் கண்டபொழுது தவறல்லாதவற்றையே காண்பதும் இயற்கை. ஆனால் கண்ணகியோ தன் கணவனைக் காணாவிடத்தும் கண்டவிடத்தும் தவறல்லாதவற்றையே கண்டாள்! அகப்பொருளின் ஆழத்தைக் கண்டு விட்டதாக மயங்கிக் கிடந்த மாதவியின் நிலை என்ன? கண்ணிறைந்த காதலன் எதிரிலிருக்கும் போதே அவள் காதலனிடத்துத் தவறு காணத் தொடங்கி விட்டாள்! கோவலன் கலைநயத்தோடு பாடிய பாடலைப் புரிந்து கொள்ளாமல்

> "மன்னு மோர் குறிப்புண்டு;
> இவன் தன்னிலை மயங்கினான் எனத்
> தானுமோர் குறிப்பினள் போல்"

கானற்பாணி பாடத் தொடங்குகிறாள்! இங்கு உண்மையில் மாதவி கொண்ட செருக்கே அவள் அறிவுக் கண்களை மறைத்து விட்டது. மாதவி என்ற ஒருத்தி உலகில் இருக்கும் பொழுது கோவலன் வேறொரு பெண்ணை மனத்துள் கொண்டு பாடுவதா? இதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை அகப்பொருளுக்கே இலக்கியம் என்று தன்னைக் கருதிக் கொண்டவள் ஏனோ. 'கொண்ட கொழுநர் உறுங் குறை' தாங்குவதே அகப்பொருளின் அடிப்படைப் பாடம் என்பதை அறியாது போனாள்!. தன் கணவன் மனத்தில் மற்றொருத்தி இடம் பெற்றதைப் பல்லாண்டு பொறுத்து வந்த பொதியிற் செல்வி எங்கே? காதலன் செய்த 'தவற்றைக்' கண நேரம் கூடத் தாங்க முடியாது பாட்டிற்கு எதிர்ப் பாட்டு பாடிவிட்ட இமயக்கணிகை வழிவந்த மாதவி எங்கே? கோவலனின் போற்றா ஒழுக்கத்தைப் பொறுத்து மாற்றா உள்ள வாழ்க்கையளாகப் பல்

லாண்டு தனியே வாடிய கண்ணகி அகப்பொருட்கே இலக்கியமாகி விட்டாள். கணவனோடு பிரியா வாழ்க்கையைப் பெறுவதில் இறுதி வெற்றியும் கண்டாள். ஆனால் தான் என்ற செருக்கில் காவா நாவினளாகக் கானல் வரி பாடிய மாதவி கண்டதெல்லாம் பெருந் தோல்வியே !

## புறத்தில் தோற்ற கனகவிசயர்

இமய மன்னரான கனகவிசயர் "வடபேரிமயத்தில் தென் தமிழர் இலச்சினையா ?" என்று குமுறினர். இலச்சினை அவர்களுக்கே பாதுகாப்பாக இருந்து வருவதையும் ஆணவத்தால் உணரத் தவறி விட்டனர் ?

உத்திரன் விசித்திரன் உருத்திரன் பைரவன்
சித்திரன் சிங்கன் தனுத்திரன் சிவேதன்

ஆகிய வடபுல மன்னர்க் கூட்டத்தை நம்பி இந்தியத்துணைக் கண்டத்துத் தலைமை தமக்கே உரியது என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டனர்; காவா நாவின ராகித்

தென் தமிழ் நாடாளும் வேந்தர்
செரு வேட்டுப் புகன் றெழுந்து
மின் தவழும் இமய நெற்றியில்
விளங்கு விற்புலி கயல் பொறித்தநாள்
எம்போலும் முடிமன்னர் ஈங்கில்லை போலும்

என்று வாய்வீரங் காட்டினர். வாள் வீச்சால் பெறவேண்டிய வெற்றியை வாய் வீச்சால் அடைந்து விட்டதாக மனப்பால் குடித்தனர். ஆனால் இமயத்தில் இடம்பெற்ற விற்புலிகயல் இலச்சினை பொதியில் பண்பாடு 'பொய்யகல நாளும் புகழ் விளைத்து' உருவாக்கிய புறப்பொருளின் சின்னம் என்பதை அறிந்து கொள்ளத் தவறி விட்டனர் !

## கல் நின்ற கண்ணகி

தான் பிறந்த மண்ணில் அகவாழ்க்கையின் சிறப்பை நிலை நிறுத்தி, மதுரையை எரித்துப் புடமிட்டுப் பொன்னாக்கியதோடு தன்பணி முற்றுப் பெற்றதாகக் கண்ணகி எண்ணி விடவில்லை. செய்து முடிக்க வேண்டிய வேலை மேலும் இருக்கிறது என்பதை மன்னன் செங்குட்டுவனுக்குச் சொல்வது போன்று வஞ்சியில் வந்து அடிவைத்து நின்றாள் கற்புக்கரசிக்குச் சிறப்புச் செய்ய இமயத்தில் கல்லெடுக்கச் செங்குட்டுவன் முடிவு செய்கிறான். அந்த நேரத்தில் இமயத்திலிருந்து வந்த தாபதர் சிலர் கனகவிசயர் தமிழராற்றலை இகழ்ந்து பேசியதை அவனிடம் தெரிவித்தனர். இமிழ்கடல் வேலியில் தமிழ்மணங் கமழச் செய்யக் கண்ணகி மேற்கொண்ட பணியைத் தான் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருப்பதைச் செங்குட்டுவன் உணர்கிறான். ஆம், சரிந்து கொண்டிருக்கும் புறப்பண்பின் புகழை மீண்டும் நிறுத்த வேண்டுமென்பது

தென்தமிழ்ப்பாவை செய்தவக் கொழுந்தாக வந்த கண்ணகிக் கடவுளின் கட்டளை ! செங்குட்டுவனின் சிந்தனை ஒரு கணநேரம் கண்ணகியின் கடந்த கால நிகழ்ச்சிகளில் சென்று படிகின்றது....

கண்ணகி மடம்படு சாயலாளான மாதவியைக் கடம்படாது வெற்றிகண்ட நிகழ்ச்சிக்குப்பின் அவள் வாழ்வில் 'விடு விடு' என்று பல்நிகழ்ச்சிகள் நடந்தேறி விடுகின்றன. கண்ணகி 'உலகுக்கோங்கிய திருமாமணியாக ஆகிவிட்டாள். அவளது பெருங்குணத்துச் சிறப்பில ஆயிரத்தில் ஒன்றும் பெற்றிராத் தன் சிறுமையை உணர்ந்து மாதவி தருக்கழிகிருள் பூம்புகார் என்ற அடைமொழி கொள்ளத் தான் தகுதியில்லாதவள் என்பதை உணர்கிருள். நெஞ்சால் நினைக்காமலும், வாயால் உரைக்காமலும் இருந்த கொடுமைக்குக் கழுவாய் தேடும் வகையில் பூம்புகார் பாவையாம் கண்ணகியைக் 'குலப்பிறப்பாட்டி' என்று கூறிக் கைதொழுகிருள். உருப்பசி மரபைத் துறவுப்பாதையில் திருப்பி விடுகிருள். கோவலன் குடியிருந்த தனது உள்ளக் கோவிலில் கண்ணகிக்கு உருவம் சமைத்து வழிபடுகிருள். மாதவி தன் நெஞ்சில் சுமந்த கண்ணகியின் திருவுருவத்தை ''யானறிகுவன் அதுபட்டது'' என்று தொடங்கிய சாத்தனுர் வேறு எப்படித்தான் கூறியிருக்கப் போகிருர் !

> மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்பக்
> கண்ணீ ராடிய கதிரிள வனமுலை
> திண்ணிதில் திருகித் தீயழல் பொத்திக்
> காவலன் பேரூர் கனையெரி மூட்டிய
> மாபெரும் பத்தினி " (மணிமேகலை: ஊரலர்)

என்று சாத்தனுர் வருணிப்பது செங்குட்டுவன் உள்ளத்தில் நீங்காத ஓவியமாக நிலைபெற்றுவிடுகிறது. மாமன்னன் கண்களிலே நீர்த்திரை படர்கின்றது.... அகத்துறையில் குறுக்கிட்ட மாதவி கண்ணகியின் உருவத்தை நெஞ்சத்திலே சுமக்கிருள்... ஆம்! புறத்துறையிலேகுறுக்கிடும் கனகவிசயர் கண்ணகியின் உருவத்தைத் தலையிலே சுமப்பார்கள்.. !

செங்குட்டுவனின் கண்கள் சிவப்பேறின.

> '' வடதிசை மருங்கின் மன்னர்தம முடித்தலைக்
> கடவுள் எழுதவோர் கற்கொண்டல்லது

வறிது மீளேன்" என்று வஞ்சினங் கூறிப் புறப்படுகிருன். வாய் வீரம் பேசிய வடபுல மன்னர்கள் சிங்கம் புகுந்த சிற்றுனைக் கூட்டமாகச் சிதறியோடினர். பொதியில் வகுத்த அகப்பொருளின் பெருமையுணராது கானற்பாணி பாடிய மாதவியின் நெஞ்சத்தில் நின்ற கண்ணகி புறப்பொருளின் பெருமையறியாது மலைந்த கனகவிசயரின் கதிர்முடியில் ஏறினுள். '' மாதவி மடந்தை கானற்பாணி கனகவிசயர் தம் முடித்தலை நெறித்தது !" இல்லை; இமயக்கணிகை. மாதவிக்குக்கிட்டிய பொதியிற்செல்வியின் அருள் இமயமன்னர் கனகவிசயருக்கும் கிட்டியது !

---

# வற்றுச் சாரியை

வித்துவான் (மோ. இசரயேல் எம். ஏ. டிப், (செர்மன்);)
(சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ் ஆய்வுத்துறை)

## இலக்கண நூற்கள்

தொல்காப்பியனார் ஒன்பது சாரியைகளைத்[1] தொகுத்துத் தருகின்றார். அவை பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபை ஏற்கும் போதும் (எழு. 117, 118) தொகைச் சொற்களின் இடையிலும் (எழு 132) வழங்கும் என்று குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிடும் ஒன்பது சாரியைகளுள் வற்றும் ஒன்றாகும். நன்னூலார் இதே சாரியையை "அற்று" என்னும் வடிவால் குறிப்பிடுகின்றார் (நன். 244). இலக்கண நூலார் இச்சாரியை வழங்கும் இடங்களையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.[2]

## வழங்கும் இடங்கள்

### பெயர்ச்சொல் வேற்றுமை உருபேற்குங்கால்

அ. பன்மைப் பொருளைக் குறிக்கும் பெயர்களின் இறுதி நின்ற அகரம் வற்றுச் சாரியையொடு பொருந்தும் (தொல். எழு. 174) இதற்கு உரையாசிரியர்கள் பல்லவற்றை, பலவற்றை, சில்லவற்றை, சிலவற்றை போன்ற எடுத்துக்காட்டுகளைத் தருகின்றனர். பிறவற்றின் (தொல். பொ. 91), கிளந்தவற்றியலான் (தொல். சொல். 117), மொழிந்த வற்றியலான் (தொல். பொருள் 403) என்பன போன்ற வழக்குகளையும் இதனுள் அடக்குதல் இயலும்.

ஆ 'யா' என்னும் வினைப் பெயரும் வற்றுச் சாரியை பெறும் (தொ. எ. 175) யாவற்றை

இ அவை, இவை, உவை என்னும் சுட்டுப் பன்மைப் பெயர்கள் வற்று ஏற்று வரும் (தொ. எ. 177) இவ்விடங்களில் வற்றின் வகரமெய் கெட்டுவிடும் (தொ. எ. 122) என்கிறார் தொல்காப்பியனார்.

---

1. (அ) " ஆன் " சாரியையாக வழங்குதல் உண்டா ?
(தமிழ்ப் பொழில் துணர் 40 மலர் 5 — மோ. இசரயேல்.)

ஆ. "சாரியையாவது சொல் தொடர்ந்து செல்லும் நெறிக்கண் நின்று அதற்குப் பற்றுக் கோடாகச் சிறிது பொருள் பயந்தும் பயவாததுமாய் நிற்பது"
(சிலப்பதிகாரம் பதிகம் 61—62 உரை) — அடியார்க்கு நல்லார்

இ. "சாரியை யென்றதன் பொருள் வேறாகி நின்ற இருமொழியும் தம்மிடைச் சார்தற்பொருட்டு இயைந்து நின்றது"
(தொ. எ. 118 உரை) — நச்சினார்க்கினியர்.

2. தொல். எழுத்து 174, 175, 177, 178, 183, 189, 220, 281, 322, 378 நன். 245, 250.

அவையற்றை, இவையற்றை, உவையற்றை

ஈ. யாவை என்னும் சொல்லும் வற்றுச் சாரியை ஏற்று வரும். அப்பொழுது யாவை என்னும் சொல்லின் ஈற்று வை கெட்டு விடும் (தொல். ஏ. 178) யாவற்றை

உ. அவ், இவ், உவ் என்னும் சொற்களின் பின்னர் வற்று வருங்கால், அச்சொற்களில் உள்ள ஈற்று வகரம் கெட்டுவிடும் (தொல். எ. 183)

அ (வ்)வற்று + ஐ + அவற்றை

ஊ. எல்லாம் என்னும் சொல் அஃறிணையாயின் அதன் முன்னர் வற்றென் சாரியை வரும் (தொ. எ. 189) இதிலுள்ள ஈற்று மெய் கெட்டுவிடும் (தொ. எ. 133)

எல்லாம் + வற்று + ஐ = எல்லாவற்றை

2 தொகைச் சொற்களில் வருங்கால்

அ "பல" போன்ற சொற்கள் பிற பெயரோடு வருங்கால் (தொ. எழு. 220) வற்று வரும்

பலவற்றுக்கோடு

ஆ. அவை, இவை, உவை பிறபெயரொடு வருங்கால் வற்று இடையில் வரும் (தொ. எழு. 281)

அவையற்றுக் கோடு

இ. எல்லாம் என்னும் பெயர் பிற பெயரோடும் வரும்பொழுதும் "வற்று" வரும் (தொ. எழு. 322)

எல்லா வற்று ஞாணும்

ஈ. அவ், இவ், உவ் என்னும் பெயர்கள் பிற பெயரொடு வருங்காலும் வற்று வரும் (தொ. எழு. 378)

அவற்றுக்கோடு

இவண் கூறப்பட்டவற்றினின்று, வற்றுச் சாரியை அஃறிணைப் பன்மை பெயர்களோடு மட்டுந்தான் இணைந்து வருகின்றது. என்பதும், அது பெயர்க்கும் வேற்றுமை உருபுகளுக்கும் இடைப்பட்டு அல்லது தொகைச்சொல்லின் இடைப்பட்டு வருங்கால், அதன் வடிவம் அல்லது இணையும் பெயரின் வடிவம் மாற்றம் அடைகின்றது என்பது தெரிய வருகின்றது.

### வற்றும் அற்றும்

தொல்காப்பியனர் "வற்று" என்ற வடிவைக் குறிப்பிட்டிருக்க நன்னூலார் "அற்று" என்ற வடிவே அவ்விடங்களில் வழங்குவதாகத் தருகின்றார். இவற்றுள் எது பொருத்தமான வடிவம் என ஆராய்வோம். முன்னர் கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுக்களைப் பகுத்துப்பார்த்தல் இவ்வாராய்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியும். அவைகளைப் பின்வருமாறு பிரிப்பதில் தவறு இல்லை.

1. சிலவற்றை = சில + அற்று + ஐ (வ்)
2. பிறவற்றை = பிற + அற்று + ஐ (வ்)
3. யாவற்றை = யா + அற்று + ஐ (வ்)
4. எல்லாவற்றை = எல்லாம் + அற்று + ஐ (வ்)
5. அவையற்றை = அவை + அற்று + ஐ (ய்)
6. அற்றை = அவ் + அவற்று + ஐ (ஐ)

இவற்றில் வருகின்ற பல, பிற (தொ. சொ. 168), எல்லாம் (தொ. எழு. 189, 190; தொ. சொ.186), யா (தொ. சொ. 167) அவை, அவ் (தொ. சொ. 167)[3] யாவும் அஃறிணைப் பன்மைப் பெயர்களே யாகும். புணர்ச்சியில் பல, பிற, எல்லாம், யா என்பவற்றின் பின்னர் வகரம் உடம்படுமெய்யேயாகும் (தொ. எழு 140; நன. 162) அவையற்றை என்பதில் வருவது யகர உடமபடுமெய்யேயாகும். வற்று என்னும் வடிவம் சாரியை எனக் கொள்ளப்படுவதாயின், இவண் யற்று என்னும் வடிவே சாரியை எனச் சொல்லற்குரித்து அவ், இவ், உவ் என்பன அஃறிணைப் பன்மைப் பெயர்களாகும இவண் வகரம் அஃறிணைப் பன்மைக்குறியாகும (Neuter plural marker). இதனை டாக்டர் அ. சி. செட்டியார் அவர்களும தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் தெளிவாக்கி உள்ளனர்.[4]

எனவே இவண் வருகின்ற சாரியையின் வடிவம் 'அற்று' என்று கொள்வதே சாலப்பொருத்தம் உடைத்து. 'அற்று' எனக் கொள்ளப்படுவதாயின் தொல்காப்பியத்தில் சில நூற்பாக்கள் (எழு. 122, 134, தேவைப்படாமலே போகலாம்.

**இலக்கணச் சிக்கல்**

ஆனால், இவண் ஒரு சிக்கல் ஏற்படுகின்றது. நன்னூலார் "வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே" (நன் 250) என்று கூறு கின்றார். எனவே அவர் கருத்துப்படி அவ் + அற்று + ஐ = அவற்றை, இவ் + அற்று + ஐ = இவற்றை, உவ் + அற்று + ஐ = உவற்றை என்றுகின்றன. சிலர் அகரம், இகரம், உகரம் ஆகிய சுட்டின பின்னர் அற்றுச் சாரியை (வற்று) வருவதாகக் கருதுகின்றனர். அது பொருத்தம் உடையதாகாது. ஏனெனில் சாரியை பெயர்க்குப்

---

3. அவ், இவ், போன்ற சொற்கள் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் பன்மைப் பொருளிலேயே ஆளப்பட்டுள்ளன.

அவ் (தொ. எழு. 7, சொல். 67; புறம் 95)
இவ் தொ. எ. 107, 109; சொ. 4; புறம் 95)

4. The Dravidian Neuter plural
Journal of Annamalai University Vol XIV 1—4 (1949)
— Dr. A. C. Chettiar

பின்னரே வரும் (தொ. எழு. 117, 118, 132) அ, இ, உ என்பன பெயர்களல்ல மேலும் அற்று அஃறிணைப் பெயர்களுக்குப் பின்னரே வரும். அவ், இவ், உவ், அவை, இவை, என்பனவே அ, இ, உ என்னும் சுட்டியாகப் பிறந்த அஃறிணைப் பன்மைப் பெயர்களாம். எனவே அ + அற்று, அ + வற்று; இ + அற்று, இ + வற்று; உ + அற்று, உ + வற்று எனப் பிரித்தல் தவறேயாகும்

ஆனால், அவ், இவ், உவ் என்பவற்றின் பின் அற்றுவரின் இலக்கணநூலார் கொள்கைப்படி, அவ்வற்றை, இவ்வற்றை, உவ்வற்றை என அமைய வேண்டும். ஏனெனில் "குறியதன் முன்னர்த் தன்னுருபு இரட்டலும்" (தொ. எழு 160) எனத் தொல்காப்பியரும், "தனிக்குறில் முன்னொற்று உயிர் வரின் இரட்டும்" (நன் 205) என நன்னூலாரும் கூறுகின்றனர். அவ்வாறு இரட்டாத இடங்களாக "நெடுமுதல் குறுகும் மொழிமுன்" [5] நான்கும் ஆறும் ஆகிய வேற்றுமை உருபுகள் வருகின்ற எடுத்துக்காட்டுக்களை மட்டும் (தொ. எழு 161, 162; நன். 247) இலக்கணநூலார் குறிப்பிடுகின்றனர். எனவே அவ் + அற்று = அவற்று; இவ் + அற்று = இவற்று என்று ஆதற்கு இலக்கண நூற்கள் இடந்தரவில்லை. மேலும் இவையே போன்று 'இல் + அன், இலன் உளன் (உள் + அன்), அலர் (அல் + அர்), நினை (நின் + ஐ) இலை (இல் + ஐ), பலர் (பல் + அர்), நிலம் (நில் + அம்) நலம (நல் + அம்) என்பன போன்ற மெய்இரட்டிக்காத புணர்ச்சிகளுக்கு இலக்கண நூற்கள் விதி வகுக்கவில்லை. இல்லன், உள்ளன், அல்லார், நின்னை, இல்லை, வல்லன் என்று வழக்குகளுக்கே இலக்கண நூற்கள் இடந்தருகின்றன.

மேற் கூறிய இரட்டிக்காத புணர்ச்சி வழக்குகளைக் கூற ஏற்ற நூற்பா இலக்கண மரபில் அமையாத காரணத்தால் தான் தொல்காப்பியனார், அவ், இவ், உவ் என்னும் பெயர்களின் வகரம் கெட்ட பிற்பாடு வற்றுச்சாரியை வந்து புணரும் என்று கூறும்நிலை ஏற்பட்டிருக்கலாம் என்று ஐயுற இடம் உண்டு. நன்னூலாரும் அவ், இவ், உவ் என்பவற்றோடு அற்று வரும் என்று கூறி இருப்பினும், அவை இரட்டாது அமையும் வகை கூறாது சென்றுவிட்டார்.

எனவே அவ், இவ், உவ் என்னும் அஃறிணைப் பெயர்களோடு இணைவது அற்றுச் சாரியையே என்றும், அற்று இணையுங்கால் அங்குள்ள அஃறிணைப் பன்மைக் குறியீடு வகரமெய் இரட்டுவதில்லை என்றும் கொள்ளுவது சாலப் பொருந்தும்.

### பிறழ் பிரிப்பா?

பல, யா, எல்லாம் என்பவற்றின் பின்னர் உயிர்வரின் வகர உடம்படுமெய் (glide) தோன்றுதல் இயல்பே. அவ்வுடம்படுமெய்

---

5. நீ, தான், யான், தாம், நாம், யாம் என்பன.

யையும் பின்வரும் புணரியல் நிலையிடைப் பொருணிலைக்குதவும் (தொ. சொல். 250) அற்றுச் சாரியையின் உறுப்பாக அமைத்துத் தவருகப் பிரித்துள்ளனர்.

பல + வற்று + ஐ = பலவற்றை < பல + அற்று + ஐ
யா + வற்று + ஐ = யாவற்றை < யா + அற்று + ஐ
எல்லா(ம்) + வற்று + ஐ
= எல்லாவற்றை < எல்லா(ம்) + அற்று + ஐ

அவை, இவை, உவை என்பவற்ருேடு அற்று என்னும் வடிவமே இணையும் (தொ. எழு. 122) என்பதைத் தொல்காப்பியனுரே ஒப்புக்கொள்ளுகிருர்.

அவ், இவ், உவ் என்பவற்ருேடு உயிர்வரின் இரட்டாமையாகிய விதிமுறை அமைக்கப்படுமாயின், அற்று வடிவம் இணைத்தால் போதுமானதேயாகும். தொல்காப்பியனுர் அவ், இவ், உவ் என்பவற்றின் இறுதி கெட்டுவிடும் (தொ. எழு. 133, 183) என்பதை ஒப்புக்கொண்டு [6] அற்று என்னும் வடிவம் வரும் எனக் கூறின், மொழியின் பொது இயல்புப்படி,

அ(வ்) + அற்று = அவற்று
இ(வ்) + அற்று = இயற்று

என்பன போன்று சொற்கள் அமைதல் இயலும். இயற்று போன்ற அமைப்பு மொழி வழக்கில் இல்லை. எனவே, இங்கு மொழிவழக்கை பொருத்தமுறச்செய்ய "வற்று" என்னும் வடிவம் தேவைப்பட்டது எனலாம்.

## வகரத்தின் பொருள்

வற்றுச் சாரியையிலுள்ள வகரத்தின் பொருள் யாது? வற்றின் வகரம் பல, பிற, யா, எல்லாம் என்பவற்றினேடு வருங்கால் உடம்படுமெய்யேயாகும். ஏனெனில் இவை யாவும் பன்மைச் சொற்களேயாம். அவை, இவை, உவை என்பவற்றின் பின்னர் எவ்வாறு இன்னெரு பன்மைக் குறியீடு தேவையில்லையோ, அவ்வாறே பல, பிற, மொழிந்த, யா, எல்லாம் எனபவற்றின் பின்னரும் இன்னெரு பன்மைக் குறியீடு தேவை இல்லை. அவையற்றை, இவையற்றை என்பவற்றில் அவை, இவை என்னும் சொற்களுக்குப் பின்னர் யகரம் எவ்வாறு உடம்படுமெய்யோ அவ்வாறு பல முதலிய சொற்களுக்குப் பின்னர் வகரம் உடம்படுமெய்யேயாகும். ஆனுல் அவற்றை, இவற்றை, உவற்றை என்பவற்றில் உள்ள வகரம்

6. தொல்காப்பியனுர் அ, இ, உ ஆகிய சுட்டடிகளுக்குப் பின்னர் வகரம் வரும் எனக் கூறிஉள்ளார் (தொ. எழு. 205—207, 238, 255) அது இங்கு பொருந்தாது.

அஃறிணைப் பன்மைக்குறியீடாகும். எனவே திராவிடமொழியியல் அறிஞர். எல். வி. இராமசாமி ஐயர் அவர்கள் வகரம் பன்மை அடிச் சொற்களின் (பிற்) பகுதி (part) என்று கருதுவது[7] அவ், இவ், உவ் என்னும் சொற்களோடு தொல்காப்பியனார் கூறும் விதிமுறைக்கு ஏற்ப இணைக்கப்படும் வற்றுச் சாரியைக்குத்தான் பொருந்தும். பல, பிற மொழிந்த, யா, எல்லாம் போன்ற அடிச்சொற்களோடு பிறி, தோர் வகரமாம் அஃறிணைப்பன்மைக் குறியீடு சேரத்தேவை இல்லை.

**அற்றின் பொருள்**

அற்றுச் சாரியை பெயருக்கும் உருபுக்கும் இடைப் பட்டு வருங்கால் பொருளற்ற வெற்றுருபேயாகும் (empty morph) அவ்வெற்றுருபு தன்னை ஏற்றுவரும் ஏனைய உருபுகளின் (morphemes) துணையால் கண்டுகொள்ளுந் தன்மையது[8] ஆனால் தொகைச் சொற்களின் இடைப்பட்டு வருங்கால் அதனை அடுத்து வரவேண்டிய வேற்றுமை உருபு மறைந்து நிற்கிறது.

எ—டு பலவற்றுக் கோடு
அவையற்றுக் கோடு
எல்லாவற்று ஞாண்
அவற்றுக் கோடு

இவண் மறைந்து நிற்பது கிழமைப் பொருளதாம் ஆறும் வேற்றுமை உருபாகும். ஆறும் வேற்றுமை உருபாகிய "அது" இவண் வருதல் இயலாது என்றும் "இன்" ஆறும் வேற்றுமைப் பொருளில் வருதல் இயலும்.

எ—டு பலவற்றின் கோடு
அவையற்றின் கோடு

எனவே மேற்காட்டப்பட்ட எடுத்துக்காட்டுகளில் ஆறும் வேற்றுமை உருபு மறைந்து உள்ளமையால் "அற்று" அப் பொருளைத் தந்து நிற்கிறது என்பதில் தவறில்லை.

**ஒருமையும் பன்மையும்**

அஃறிணை ஒருமைப் பெயர்களோடு இணைந்து வரும் அற்றுச் சாரியைக்கு இணையான சாரியை "அன்" எனலாம்.

எ—டு யாவற்றை யாதனை (தொ. எ. 201)
அவற்றை அதனை (தொ. எ. 177)

அற்றுச் சாரியை இணைந்து வரும் பல பன்மைப் பெயர்களுக்கு இணையான ஒருமைப் பெயர்கள் இல்லை என்பது கவனித்தற்குரித்து (சில, பல, எல்லாம்)

---

7. Collected papers by L. V. Ramaswamy Aiyar — Vol I page 61

8. An empty morph assigned to no morpheme must have no meaning, and must be predictable in terms of non-empty morphs
(Language Vol23/1957 page 242 C. F. Hockeet)

பிற்கால வழக்கு

இன்றைய மொழியில் எவற்றை, எவற்றால் என்பது போன்ற வழக்குகள் உள்ளன. இவற்றில் காணப்படும் அடிச் சொல் யாது? எகரத்தை தொல்காப்பியனார் வினாக்குறியாகப் பயன்படுத்தி இருப்பினும் [9] அதனை வினாக்குறி எனக் கூறவில்லை. நன்னூலார் அதனை வினாக்குறி எனக் (நன். 67) கூறி உள்ளார். அது வினாக்குறியேயாயினும் அதனோடு சாரியை இணைதல் இயலாது. தொல்காப்பியனார் மேலும் "வகரக் கிளவி நான்மொழி ஈற்றது (தொல். எழு. 81) என்று கூறுவதும், அவை அவ், இவ், உவ், தெவ் என்பன (தொ. எழு 378, 382; சொல். 167, 346) என்பதை அவரே தெளிவுபடுத்துவதும் அவர் காலத்தில் "எவ்" என்னும் சொல் வழக்கில் இல்லை என்பதை உறுதிசெய்து நிற்கின்றது. எவற்றை, எவற்றால் என்னும் வழக்குகள் "எவ்" என்னும் சொல்லி னின்றுதான் தோன்றுதல் வேண்டும். தொல்காப்பியனார் காலத்தில் யாவற்றை, யாவற்றான் என்ற வழக்குகள் இருந்திருக் கின்றன. ஆனால் அவை இன்றைய மொழியில் இல்லை. எனவே காலப்போக்கில், அவ், இவ் உவ் என்னும் சுட்டடியாகப் பிறந்த அஃறிணைப் பன்மைப் பெயருக்கு இணையான "எவ்" என்னும் வினா வடியாகப் பிறந்த அஃறிணைப் பன்மைப்பெயர் பெயர் ஒப்புமை யாக்கத்தால் (analogy) தோன்றி, அற்றுச்சாரியை ஏற்று வழங்கி இருக்கலாம். இத்தகைய மாற்றத்திற்கு தமிழ் மொழியின்கண் காணும் யகரம் எகரமாகத்திரிகின்ற ஒலித்திரி இயல்பும் (phonetic tendency) துணை புரிந்திருக்கலாம்.

தற்காலத்தில் "எவ்" என்னும் சொல் பண்டைக்காலத்தில் வழங்கிய "யா" என்னும் சொல்லின் இடத்தைப் பெற்றுள்ளது. சங்க காலத்தமிழில் மிகுதியாகக் காணப்படும் யாவற்றை, யாவது, யாவள், யாவன், யாங்கு என்பன போன்ற வழக்குகள் எவற்றை, எது, எவள், எவன், எங்கு என்றே தற்காலத் தமிழில் வழங்குகின்றமை யும் இதனை உறுதி செய்து நிற்கின்றது.

முடிவுரை

எனவே வற்றின் வடிவம் அற்று என்பதும், வகரம் அவ், இவ், உவ், (எவ்) என்னும் சொற்களுக்குப் பின்னர் அல்லாமல் பிற இடங்களில் உடம்படுமெய்யே என்பதும், இலக்கண மரபில் தனிக் குறில் முன்னொற்று இரட்டா வழக்குகளுக்கு விதிகள் அமையாமை யால் தொல்காப்பியனார் வற்று என்னும் தவறான வடிவத்தின் துணைக்கொண்டு புணர்ச்சியைப் பொருத்திக்காட்ட முயலுகிறார் என் பதும், "எவ்" என்னும் சொல் பிற்காலத்தில் தோன்றியது என்ப தும் இவண் அறிகின்றனம்.

---

9. எவ்வயின் (தொ. எழு. 334) எவ்வழி (தொ. சொ. 71)

[சென்ற மாத இதழ் தொடர்ச்சி]

# கல்வி அமைப்பு

மா. இரத்தினம்.

உலகத்தொடர்பிலிருந்து தனது தேவைக்கும் அறிவு வளர்ச்சிக்குமுரிய வகையில் விஞ்ஞானம், கலை ஆய தொடர்புகளிலிருந்தும் மொழி உறவுகளிலிருந்தும் கல்வி முறையில் தனிப்பட்ட பிரிவுகளை அமைத்துக்கொள்ள வேண்டும். கல்வி முறையின் வளர்ச்சியானது காலத்திற்கேற்ப நாட்டில் ஏற்படும் அறிவு, ஆராய்ச்சிகள், உண்மைகள், அறிஞர்களின் அறிவு சிந்தனைப் படைப்புக்களிலிருந்தும் வளர்ந்துகொண்டு போகும் தன்மை வாய்ந்தது. கல்வி முறையின் வளர்ச்சியைக் கல்வித்துறை ஆசிரியர்களைக் கொண்டே வளர்த்துக்கொண்டு செல்லக் கூடியதல்ல. கல்விமுறை நாட்டின் ஒவ்வொரு அசைவு—இயக்கங்களிலிருந்தும், உருவாகி ஒளிரும் படைப்புகளிலிருந்து உண்மைகளிலிருந்து அறிஞர்களின் மாமேதைகளின் புகழ்மிக்க ஆராய்ச்சி அனுபவங்களிலிருந்து வளர்ந்தோங்கி விரியும் நிலையுடையது. கல்வித்துறை ஆசிரியர்களைக் கொண்டு அறிவு — சிந்தனை—புதுமை, கலைப்படைப்புகளை உருவாக்கி அறிவுப் பெருக்கத்தை ஈடுகட்ட முடியாது. வெளித்தொடர்புள்ள பல்வேறு துறைகளில் ஈடுபட்டு ஆராயும் செயல்புரியும மாமேதைகளின் அறிவாற்றல்களை — படைப்புகளைக் கொண்டுதான் முழுமையாக அறிவு வளர்ச்சியை ஈடுகட்ட முடியும. நாட்டின் மக்கள் வாழ்வியல் செழிப்பிற்கேற்ப வரலாற்றின் ஒவ்வொரு குறிப்பிட்ட காலக்கட்டங்களிலும் கல்வி முறை வளர்ச்சியடைந்து கொண்டே போகும் தன்மை வாய்ந்தது.

(3) பயன் : கல்வி முறையினால் விளையும் பயன் அந்நாட்டையும் இனத்தையும வாழ்க்கையையும் வளர்ச்சியடையச் செய்விக்கும் சிந்தனைத்திறத்தையும் கற்பனைத் திறத்தையும் படைப்புத் திறனையும் உழைப்பாற்றலையும் தோற்றுவிக்க வேண்டும். இந்த நன்மைகளை விளைவிக்கும் கல்வி முறைதான் நாட்டிற்கு பயன் விளைவிக்கும் கல்வி முறையாகும். கல்வியின் பயன் என்பது நாட்டையும் இனத்தையும் இனத்தின் வாழ்க்கையையும் பொறுத்ததே தவிர தனித்து ஒவ்வொரு மாணவ மாணவியின் தனிப்பட்ட வாழ்க்கையில் விளைவிக்கும் பயனல்ல. அவர்கள் எல்லாம் சிந்தனையும் கற்பனையும் படைப்புத்திறனையும் உழைப்பாற்றலையும் கொண்ட வன்மை வயமான தொண்டர்களாகி அத்தொண்டின் பயனாகக் கிடைக்கும் ஊதியமும் புகழுந்தான் அவர்களின் தனி வாழ்கையின் பயனாகும். நாட்டின் கலவி முறை பொதுவாக நாட்டிற்குப் பயன் விளைவிக்கக் கூடிய முறையில் மக்களை ஆற்றல் மயமாகக உருவாக்கி அவர்களிடத்திலுள்ள பலதரப்பட்ட திறமைகளை வெளி கொணர்வதாகுமே யல்லது கற்பவர்களுக்கு நேரிடையாக எவ்வித பயனும் கொடுப்பதல்ல. கற்றவர்கள் அடையும் பயன் நாட்டிற்கும் இனத்திற்கும்— இன்வாழ்விற்கும் தங்கள் திறமைகளை வெளிகாட்டி வளர்ச்சியடையச்

செய்வித்துப் பெறும் ஊதியமும் உவகையும் புகழுந்தான் அவர்களுடைய செலவாகும்.

நாட்டின் கல்விமுறையின் பயன் கற்றவரின் கோழைத்தனம், திறமையின்மை, வாளாமை இவற்றிற்கு வழிவகை செய்து கொடுப்பது அல்ல என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். கல்வி முறையின் பயனைக் கற்பவர்கள் தனிப்பட்ட முறையில் பட்டம், வேலைவாய்ப்பு நல்ல ஊதியம் தேடிக்கொள்வதற்குக் கருவியாகக் கொண்டு அப்பொருளுக்குரிய சொல்லாக அதனைக் கூறலாம். அதனால் நாட்டைப் பொறுத்த வரையில் அதனுடைய தொழில் செழிப்பிற்கும் பொருளியல் வளர்ச்சிக்கும் கலைத்துறைகளின் வளர்ச்சிக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் பயனுள்ள, திறமைகளை—ஆய்வு வன்மைகளை-படைப்புத் திறமைகளை கற்றவரிடையே தோற்றுவிக்க வேண்டும்.

கல்வி அமைப்பில் கல்வி முறையில்தான் நாட்டின் எல்லாத் தொழில் துறைகளையும் கலைத்துறைகளையும் வளர்த்து நாகரிகத்தைப் பாதுகாக்கும் முக்கியத்துவம் நிறைந்துள்ளது. நாட்டிலுள்ள எல்லா வகை தொழில், கலை, அறிவியல் துறைகளும் பன்னெடுங் காலத்திலிருந்து நூல்கள் வடிவில் இருந்தால்தான் அவைகளைப் பற்றி கல்வி முறை அமைக்க முடியும். இல்லையேல் வேற்று நாட்டவரிடமிருந்து நூல்கள் வடிவிலிருக்கும் அத்துறைகளை அப்படியே ஒரு நாட்டில் அமைத்துக் கற்பித்து விடலாம் என்று எண்ணுவது தவறான எண்ணமாகும். ஒவ்வொரு நாடும் மக்களும் இயற்கையில் வேறுபட்டு நின்று மக்களும் மாறுபட்டு அவர்களின் தொழில்களும் வாழ்க்கை முறைகளும் முற்றிலும் வெவ்வேறு முறையில் இருக்கும். ஒவ்வொரு நாட்டு இயற்கையின் வளத்தைக் கொண்டு தொழில் துறைகள் பல அவர்களின் அறிவு, ஆற்றல், ஆராய்ச்சிகளுக்கேற்ப வளர்ச்சியுற்று நூல்கள் வடிவில் கருத்துக்களும் உண்மைகளும் அனுபவங்களும் பயன்களும் உருவாக்கப்பட்டிருக்கும். கலைத்துறை அறிவியல் துறைகளும் அவ்வாறே அவர்களின் சிந்தனைத் திறத்தால் கற்பனைத் திறத்தால் படைப்புத் திறத்தால் ஆய்வு முறைகளால் நூல்கள் வடிவில் குவிந்து கிடக்கும். இவற்றையெல்லாம் மற்றொரு நாடு பார்த்து அப்படியே இறக்குமதி செய்து தாய்நாட்டில் வேற்று நாட்டினரின் கல்வி முறையை அமைத்துத் தன்னாட்டிற் கொவ்வாத தொழில்—கலைத்துறை கல்விப் பிரிவுகளைக் கற்பித்து வாழ்க்கைக்கும் அனுபவத்திற்கும் புதியவைகளாகப் புகுத்தித் தன்னுடையவைகளைப் புறக்கணித்துவிட்டு தாய் நாட்டில் அறிவு தொழில் துறைகளே இல்லை என்று சொல்லித் தன்னாட்டு இயற்கையை—இயல்பை ஆழ்ந்த முயற்சியுடன் பற்றுடன் பார்க்க முனைவதில்லை

ஒவ்வொரு நாடும தன்னுடைய நாட்டின் இயற்கைநிலை-மக்கள் வாழ்க்கைநிலை இவைகளைக் கொண்டு பல இன்றியமையாத தொழில் துறைகளையும் அறிவுத் துறைகளையும் நூல்கள் வடிவில் இல்லாவிட்டாலும் செயல்பட்டு உருவங்களாக வளர்த்து வந்திருக்கின்ற

ளர். ஒவ்வொரு நாட்டிலும் தொழில்களும் சமயக்கருத்துக்களும் வழிபாட்டு முறைகளும் மருத்துவ முறைகளும நீதி முறைகளும் நாகரிகமும இவைகள செயல்பாட்டு உருவங்களாக பல உண்மை களோடு கருவிகளோடு வளர்ந்து வந்திருப்பதைக் காணலாம். கல்வி நிலையங்கள் அமைத்துப் பல அறிவுத் துறைகளை — பிரிவுகளை உருவாக்கும் போது அந்நாட்டு அறிஞர்களும தலைவர்களும செயல் பாட்டு உருவங்களாக இருககும வாழககைத் துறைகளை நூல் வடி வங்களாக தங்களுடைய சொந்த உண்மைகள, பயன்கள், முறைக ளோடு அமைத்து தனிதது வளமிக்க கல்வியாக வளர்ச்சியடையச் செய்கின்றனர். தனித்துவ கல்வி முறையோடு ஆராய்ச்சி, பகுத் தறிவு, சிததாந்தம் தத்துவவயமான ஆய்வுகளால் காலப் போக்கில் கல்வி முறை செழிப்பும வளமும் அடைகிறது. இதை விடுத்து வேற்று நாட்டில் உள்ள நூல் வடிவான கல்வி முறையை ஒரு நாட்டில் இறக்குமதி செய்து வளர்ப்பதனுல் தாய் நாட்டின் தொழில, அறிவு, கலை, நாகரிகம், பண்பாடு, உண்மைகள் யாவும் இருக்கு மிடந்தெரியாமல் போய் மறைந்துவிடும. தன்னுடைய தனித்துவ மிக்க கலைச்செல்வங்களும் முன்னேர்கள் வளாதது வந்த தொழில், பண்பாடு, வாழ்வியல் முறைகள் எல்லாம அழிந்து முற்றிலும் வேருன வேற்று நாகரிகத்தை தாய் நாட்டில் உருவாக்க வேணடிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. தாய் நாட்டின் தனித்துவ புகழ்மிக்க கலைகளையும தொழில்களையும அறிவியலையும் வளர்க்க விருமபினுல் அமைப்பு, முறை, பயன் என்ற மூன்று விதிகளையும் கலவி அமைப் பின் உண்மைகளாக நினைவில் கொணடு கல்வியினுல் நாட்டின் தனி மரபியல் வாழ்வியல் துறைகளைக் காத்து வளர்க்க வேணடும்.

கல்வி அமைப்பை இருபிரிவுகளாகப் பிரித்துத் தொடக்கக் கல்வி, கலைக் கல்வி என்ற வகையில் தொடக்கக் கல்வி இளம் குழந்தை ளின் உள்ளங்களில் செமமையும் ஆர்வத்தையும் தாயகப்பற்றையும் இன உணர்ச்சியையும ஊட்டும் முறையில் அரசு, நாடு, இனம், வரலாறு, சுதந்திரம் என்ற இவ்வைந்தின் உண்மைகளில் ஆழ்ந்த முறையில் தோய்ந்தவையாக இருக்க வேண்டும். இதை விடுத்து வேற்றுநாட்டு அரசு, நாடு, இனம், வரலாறு, சுதந்திரம் இவை களில தோய்ந்த கல்வி முறையாக இருந்தால் அதனுல் நாட்டிற்கும் மககள் வாழ்க்கைக்கும் கொடிய துன்பங்களும் இடர்ப்பாடுகளுமதான் பயனுக விளைய முடியும். தாயக வரலாற்று உண்மைகளிலிருந்து குழந்தைகளை அறவே பிரித்து வேற்றுலக வாழ்விற்கு அவர்களை உருவாக்கும் கொடுஞ் செயல்கள் நிகழ்ந்தால் அதில் வேற்றின அரசியல் ஆதிக்க வெறியும் பேராசையும புதைந்திருந்து தேசியம் சுதந்திரம் என்ற கோட்பாடுகளைக் கொன்றெழிக்கும் நச்சரவாக வளரக்கூடும்.

உயர்நிலைக் கல்வியாக—வாழ்வியல் கல்வியாக கலைக் கல்வி முறை தாய்நாட்டின் நாகரிகப் புகழையும் கலைச்செல்வத்தையும் தனித்துவத்தையும் வளர்த்து அறிவு வயமான பாதுகாப்பைத் தேடிக் கொடுக்கும் வன்மையும் உண்மையும் நிறைந்தவையாக இருக்கிறது

இந்தக் கலைக் கல்வி முறையின் வளமையும் செழுமையும் கொண்டு தான் தாய்நாட்டின் நாகரிகத்தை வளர்த்துப் பாதுகாக்க முடியும். கலைக் கல்வியில் வேற்றின வாழ்வியல், தொழிலியல், அறிவியல் முறைகள் முழுதுமாக இடம் பெற்றால் தாயக நாகரிகம் படுவீழ்ச்சி யடைந்து விடும்.

வளமை மிக்க கல்வி அமைப்பு ஒரு நாட்டின் வரலாற்றின் வளர்ச்சிப் போக்கிலும் நாகரிகத்தின் உயர்ச்சியிலும் மக்கள் வாழ்வியல் உயிர்ப்புத் தன்மையிலும் புகழையும் மதிப்பையும் பெருமையையும் வளர்க்கிறது. நாட்டின் மக்கள் யாவரின் மூளை மையங்கள் எல்லாம் கல்வி அமைப்பின் சீரிய கோட்பாடுகளினால் உண்மைகள், சிந்தனைகள் இவற்றைப் பொறியாகக் கொண்டு சுழல்கின்றன. மக்களின் மூளைமையங்களை தேசிய சுதந்திர அச்சில் சரியான வழியில் சுழன்று கொண்டிருக்கும் வகையில் கல்வி அமைப்பு உண்மையான உயிர்ப்புத்தன்மை வாய்ந்தவையாக இருக்க வேண்டும். செழுமையான கல்வி அமைப்பில் வளரும் பற்று என்னும் பனி ஈரத்தால் உள்ளம் பண்படைந்து சிந்தனை, கற்பனை, ஆய்வு உண்மைகளை தன் தாய்நாட்டிற்காக விளைவிக்கச் செய்ய வேண்டும்.

கல்வி அமைப்புத் தொண்டிலும் கடமையிலும் அறிவிலும் அத்துறையில் ஈடுபட்டிருக்கும் மேதைகள் உள்ளம செம்மையும் சீர்மையும் தாயகப் பற்றும் நினைந்து பல்லாயிரக்கணக்கான குழந்தைகளைத் தாயக மண்ணிற்காக உயிரையும் உழைப்பையும் அறிவையும் அர்ப்பணிக்கச் செய்யும் உணர்ச்சியைத் தூண்டி வளர்க்கும் முறையில் பணியாற்ற வேண்டும். அவர்கள் இந்த சீரிய உயர்ந்த கடமையிலிருந்து வழுவி தவறான கொள்கைகளுக்கும் குறிக்கோளுக்குமாட்பட்டு கல்வி அமைப்பை உருவாக்குவார்களானால் தாயகத்து நாகரிக வீழ்ச்சிக்கும் பழிக்கும் பொறுப்பேற்று விலங்கினங்களுக்கும கீழாக உலகத்தில் வாழ வேண்டியவர்களாவார்கள். கல்வித்துறையின் மேதைகள் நீதி சுதந்திர நெஞ்சத்தோடு உருவாக்கும் கல்வி முறையே தாய்நாட்டை உய்விக்கும் உயரிய கோட்பாடாகும். அவர்கள் அதற்காகப் பெறும் ஊதியம் தாய்நாட்டைக் காப்பதற்குப் பெறும் பரிசாகும். அதற்கு மாறுபட்டு வேற்றான் நாட்டுக் கல்வி முறையை நாட்டில் புகுத்தினால் புதுஇளம் குழந்தைகளை கல்வி முறையின் வாயிலாக விற்றுக்கொடுக்கும் கொடிய செயலும் பழியுமாகும். இளம் உள்ளங்களை வேற்றானின் ஆதிக்க வலையில் வீழ்த்தி ஒப்பு கொடுக்கும் கயமைச் செயலாகும்; தாயக மக்களின் உணர்ச்சிகளை விலைக்கு விற்கும் இழிச் செயலாகும் என்பதைக் கல்வித்துறை மேதைகள் உணர்ந்து தொண்டாற்றுவதன் வழியே தாயகத்தின் மேன்மையும் புகழும் ஓங்கி வளரும்.

கல்வி அமைப்பு என்பது அமைப்பு, முறை, பயன் ஆகிய மூன்று விதிகளும் முக்கியத்துவம் பெற்று அரசு, நாடு, இனம், வரலாறு, சுதந்திரம் என்ற ஐந்தின் உண்மைகளோடு தோய்ந்து வளர்ந்து தாய்நாட்டிற்கு வன்மை மிக்க அரணாக விளங்கவேண்டும்.

---

# வாழ்க்கைத் துணை

சித்தாந்தச்செல்வர். அ. தா. ப. திருஞானசம்பந்தன்.

இயற்கையாம் இறைவன் இன்னருட் படைப்பில் தோன்றியுள்ள உயிரினங்கள் யாவும் உணர்வுடையவையே! சுருங்கப்புகலின், உயிர் நாடி பெற்றொன்று வாழின், அது உணர்வுடையதென்று முடிவு கட்டலாம். ஒரு சில விதி விலக்காயும்மைப். பகுத்தறிவு பெற்றிலங்குவது மக்களினம். மக்களினத்துள் இருபகுப்புள. ஒன்று ஆண்பாலார்; மற்றொன்று பெண்பாலர். இவ்விரு வகைப்பட்டோரும் உலகிற்றோன்றி, ஒரு காலவெல்லை வந்தவுடன் உடற்றுன்பம் பெற்று அதனால் வலியுறுத்தி வாட்டப் பெறுகின்றனர். இதைத் தடுப்பது எளிதல்ல; நியாயமும் அல்ல! உடற்றுன்பம் தோன்ற, உடலுறுப்புக்கள் சரியுற வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். அதற்கு முன்னமே, வாழ்க்கைக்குரிய கல்வி நிலைகளைத் தெளிவுற அறிய வேண்டுமென வரையறைசெய்து வைத்துள்ளனர், பண்டையோர். உடற்கட்டு மிகுந்துள்ள ஆணும், எழில் மிகுந்த கட்டழகிப் பெண்ணும், பின்னர் தனித்து வாழும் நிலையைக் கொள்வதில்லை. ஒத்த நலன், ஒத்தபண்பு, ஒத்தகல்வியும், பிறவும் கொண்ட ஆணும், பெண்ணும் ஒருங்கியைந்து வாழ்வதுதான் அறமெனப்படும். அதைத்தான் இல்லறம் என்று சிறப்பு வகையான் கூறலுற்றனர். 'இல்லற மல்லது நல்லற மன்று' என்பது ஔவை மூதாட்டியின் அமுத மொழி.

வளர்ந்த கொடிப்படர கொழு கொம்பை நாடுகின்றது. இது இயற்கையின் நியதி. அங்ஙனே வளர்ந்த பெண்—மடந்தை—தான் சிறந்து பெருமைப்பட வாழ்வதற்குக், கொழு கொம்பாக மணாளனொருவனைத் தேடுகின்றாள். இருமுது குரவரின சொல்வழி நின்ற மகள் தன் பருவக்காலம் வந்தடைந்த காலத்துத், தனக்குரிய கணவன் ஆணைவழி நிற்க விரும்புகின்றாள். எவை எக்காலத்தில் நிகழ வேண்டுமோ, அவை அங்ஙனம் நிகழாமல் மாறுற நிற்கின் அன்றி நிகழின், வாழ்க்கை வெறுப்படைந்ததோரிட் குரம்பையாக மாறி விடுகின்றது. உரிய காலத்தில் மணம் நிகழப் பெறின் வாழ்க்கையின் தென்றல் மணம் வீசுகின்றதை யாண்டும் காணலாம். இது பற்றியே முந்தையோர். மணவினைகளைக் காலத்தில் செய்து முடித்தனர். காலத்தினருமை யோர்ந்து நிகழ்த்தும் செயல்கள் என்றும் நன்மையைப் பயப்பன. காலங் கடந்து நிகழ்த்தும் செயல்கள் நன்மை விளைவிப்பன போன்றிருப்பினும், அவற்றால் பெறுந் தீமைகள் பலவாம். உலகின் ஒள்ளிய போக்கில் காணுங் காலத்து, ஆணும், பெண்ணும் இயைந்து வாழும் வாழ்க்கையைவிட உயரிய அற வாழ்க்கையில்லையெனலாம். இவ் வாழ்க்கையைப்பற்றி வெகுவாக சிறப்பித்துள்ளார் தெய்வத் திருவள்ளுவர்.

இயல்பாகவே பெண் மென்தன்மையுடையவள்; ஆண் வலித் தன்மையுடையவன். ஆணிடம் காண்பது மறம்; பெண்ணிடம் காண்பது நாணம். இதை நன்கு வலிவுறுத்திக் கூறியுள்ளார் தொன்மைப் புலவர் தொல்காப்பியர்

'அச்சமு நாணு மடனு முந்துறத
ளிச்சமும் பெண்பாற்குரிய வென்ப.'

[— தொல்—பொருள்—களவியல்—95]

அத்தகைய அச்சத்தால் அரவணைக்கப் பெற்ற பெண், இலகுவில் பேசவும் தலைப்படாள். அவள் பால் களவில் கூடி, இன்புற்று, தலைவியெனவேற்று, தனிப்பெருந் திறன்பூண்ட இல்வாழ்வேற்றல், எல்லா வகைத்தானும் சிறப்புடையதாகும். கழிபெருங் காமக் கண்ணோட்டத்திலுந்தப்பட்டுள்ள தலைவியின் நிலையையறிந்த தலைமகன், பெரு விருப்பால், சேர நினைந்துழி, தலைமகளும் காமக் குறிப்புடையளாயினும், இயற்கை முகத்தானுந்தப் பெற்ற நாணமு மச்சமும் மீதூர, பேசுந் தன்மைற்று விளங்குவள். அதுகாலைத் தலைவன் தான் சொல்லுகின்ற சொல்லின் வழி அவளை நிற்குமாறு செய்தும், அவளது நலத்தைப் பெரிதும் பாராட்டியும், அங்ஙனம் தன்னையும் உரைத்தலைக் கேட்ட தலைவிக்கு இயல்பாக உள்ளத்திற் றோன்றும் மகிழ்ச்சியை யோராற்றானறிந்த தலைவன், தன்னகத்து நோயாற் புறத்தே நிகழும் தளர்வினைக் குறிப்பான் எடுத்துக்கூறி, ஒத்த பண்புடைய விருவர் மாட்டும் மெத்த தெளிவு தோன்றுங்காலை தலைவனறிந்து, தெளிவு பெற்று, இயற்கைச் சேர்க்கையால் இன்பந் தேர்கின்றனன்.

'முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுத்த
னன்னய முறைத்த னகைநனி யுறூஅ
லந்நிலை யறிதன் மெலிவுவிளக் குறுத்த
றன்னிலை யுரைத்த றெளிவகப் படுத்தலென்
றின்னவை நிகழு மென்மனார் புலவர்.

[—தொல்—பொருள்—களவியல்—98]

தொல்காப்பியரும் பண்டைய நிலையை யோர்ந்து, நிகழ்ந்தவற்றை நன்கறிந்து, களவியல் இலக்கணத்தில் சேர்க்கையின் சீர்மையைப் பேசிச் சென்றிருக்கின்றார். அதன்பின் இயற்கையாக நடைமுறைப்பட வேண்டியது இல்லறம்.

இக் கருத்தின் வழிவந்த பாரதியாரும், இல்வாழ்க்கையின் சிறப்பைக் கூறியுள்ளதை ஈண்டு நினைந்தின்புறற் பாலதாகும். வசிட்ட முனிவரும், கோசலம்புரந்த கோமகனும், திருவள்ளுவரும் மனைவியுடன் வாழ்ந்தவர்களே! ஆயிரமாண்டுகள் தவங்கிடக்கினும் அவர்களுக்கு ஒளியெனவமைந்த பத்தினிகளைப் போல், பிறரெவருக்கும் அமைவது கடினம். உண்பது நல்ல தேவலோகவமிர்தம் என்றெண்ணிப், புலையர்கள் விற்கும் கள்ளை வாங்கியுண்டல் தன்றோ? அசுத்தப்பட்டவர்கள் சொலவழி நில்லாமல் வீரம் நிறைந்த பேராண்மை கொண்ட ஆடவர்களாகப் பிறந்தோர் மணஞ்

செய்து சிறத்தல் சிறப்புடையதாகும் என்றியம்புகின்றார் பாரதி.

வசிட்டருக்கும் இராம னுக்கும் பின்னொரு
வள்ளுவருக்கும் முன் வாய்த்திட்ட மாதர்போல.
பசித்தோ ராயிரம ஆண்டு தவஞ்செய்து
பார்கதினும் பெறல் சால வரிதுகாண்
புசிப்ப தும்பரின் நல்லமு தென்றெனப்
புலையர் விற்றிடும் கள்ளுண லாகுமோ ?
அசுத்தர் செய்வது கேட்கலீர். காளையீர் !
ஆண்மை வேண்டின் மணஞ் செய்தல் ஓம்புமின் !

[— பாரதி—சுய சரிதை]

பிற்கால மணம் 'கொடுக்கல் வாங்கல்' என்ற முறையிலமைந்தது. இதைக் கற்பெனக் கண்டனர். முற்கால மணம் களவில் நடந்தது. முற்பட்ட மணத்தைப் பற்றி இறையனார் அகப்பொருளுணர்த்துவதை ஈண்டுணர்வாம். இயற்கைப்புணர்ச்சி ஈண்டு இயல்பாய் நிகழ்வது ஒருவர் இடை நிற்கப் புணர்தல் என்பது எவ்வகைத்தானும் களவிற்கில்லை என்பதாம்.

அவ்வியல் பல்லது கூட்டக் கூடல்
எவ்விடத்தானும் களவிற் இல்லை

[ இறையனார்—சூத்திரம் 4]

சிறப்பியல்புகளான் மீதூர்ந்த பெண்ணின் நிலைபற்றிப் பிரபுலிங்கலீலையில் கூறப்படுவதைக் கண்டின்புறுக ! தெய்வமகளிரையொத்த பெண்கள், மணம் செய்தற்குமுன் தாய் தந்தையர் கட்டளைப்படியும், மணம் செய்தபின்பு தன்பக்கல் நன்மை புரிந்திடும் கணவன் வாய்ச்சொல் வழிநின்றும் வாழ்வர். எக்காலத்தும் பெண்கள் தங்கள் வழிநடக்குமியல் பினரல்லர்.

'மணம் புரிவதன் முன்குர வராணையினு
மணவினை முற்றிய பின்னர்
இணங்குற வருள் செய்கொழுநனு ணையினு
மிருப்பர்தம் வயமில ரென்று. — பிரபுலிங்கலீலை,

ண்டு, இத் தெய்வத் திருநாட்டின்கண் வாழ்ந்து மனையறம் நிகழ்த்திச் சிறந்தவர்களை, தெய்வச் சேக்கிழார் அருளிய புராணத்தின் மூலம் நன்குணரலாம் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்பது மூதாட்டியாரின் அருள்வாக்கு, கொழுநன் கூறும் சொல் வழி நின்று, செயற்கரிய செயல்களைச் செய்து, என்றும் சிறக்கப் பெயரெடுத்த பெருமைக்குகந்த பெண்மணிகளைப் பெரியபுராணம் கூறுவதன் மூலமுய்த் துணரலாம்.

மனைவியார் கொழுநர் தந்த
மனமகிழ் கறிக ளாய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க
புனித பாத்திரத்துக் கைமை,

வினையினில் வேறு வேறு
　கறியமு தாக்கிப் பண்டை
நினைவினுற் குறையை நேர்ந்து
　திருவமு தமைத்து நின்று. [— இளையான்குடி மாறர்]

ஆங்க வன்றனில் வாழ்க்கை
　யருந் துணையா யமர்கின்ற
பூங்குழலா ரவர் தாமும்
　பொரு விடையார் திருவடிக்கீ
ழோங்கி யவன் புறுகாத
　லொழி வின்றி மிகப்பெருகப்
பாங்கில் வருமனையறத்தின்
　பண்பு வழாமைப் பயில்வார். [—காரைக்காலம்மையார்]

குடும்பத்தின் விளக்கியைய விளங்குபவர்கள் குலக்கொடிகளே! நற் பெண்டிரற்றமனை இடுகாடெனினு மொக்கும். ஒருவர் வாழ்க்கையில் முயன்று பெறவேண்டு மென்று எண்ணுகின்ற நலன்கள் பல; அவையெலாம் சிறப்புற அடைதற்கு நற்குணமும், நற்செய்கைகளும் பூண்டமனையாளே ஒருவர்க்குத் தேவை. வாழ்க்கையின் துன்பத்தைப் போக்கும் இன்பவூற்ருயும், அறியாமையைப் போக்கும் அருந் தோன்றலாகவும் விளங்குபவள் மனையாளே! இதனுனே, தெய்வத் திருவள்ளுவரும் வாழ்க்கைக்குத் துணையாயிணைந்து நிற்கும் மனையாளைப் பற்றிப் பெருமை பேசுகின்றனர்.

எவ்வளவு செல்வம் பெற்று வாழ்ந்திடினும் சிறப்புடையதாகாது; ஒரு குடும்பத்திலுள்ள மனையாள் நற்குண நற்செய்கைகளில் சிறப்புடையவளாக விளங்க வேண்டும் இல்லாள நல்லாளாயின் ஒரு குடும்பத்திலுள்ள தலைவனுக்கு இல்லாத தொன்றுமில்லை கற்பென்னும் கலங்கா நிலை யொருத்தி மாட்டுண்டாயின். அவள் பெண்மையை விட மதித்தற்கு எவையுள? தெய்வத்தைத் தொழுது பின் கணவனையும் வணங்கும் பெண்ணுணையின் சொல்வழித்தாய் மழை பெய்யும். தன்னைக் காத்துத், தன்னைக் கொண்டவனையும் பேணி, இருவரிடையே நிலவும் புகழ் நீங்காமற் காத்து, வாழும், நற்குணச் செய்கையுடையவளே பெண் மகளிர்க்குச் சிறைகாவல் என் செய்யும்? நிறையே காவல்! என்றுணர்க! பெண்டிர், தாங்கள் கொண்ட கணவனை வழிபட்டு வருவராயின். தேவருலகிற் சிறப் பெய்துவர். புகழை விரும்பாத வில்லாளைப், பெற்ருேர், பகைவர், முன் சிங்கம் போல் நடக்கவியலாது. மனையாளின் நற்குண நற்செய்கைகளை மங்கலம் என்பர் அறிந்தோர்; ஆனுல் அதன் நன்கலன் மக்கட்பேறுதான்! மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளையுடையளாய்த் தன்னைக் கொண்டானது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையுடையாள் வாழ்க்கைத்துணை.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. — குறள்—அறம்—51

(சென்ற இதழின் தொடர்ச்சி)

# மனையறத்தில் கண்ணகி

(புலவர் ந. செகதீசன்)

[வேறு]

சாயலில் சிறந்த தோகை தையலுன் சாயல் கண்டு
போய்க்குளிர் காட்டில் நின்று புழுங்கிய துளமு டைந்து!
தூய்மலர் அடிபெ யர்த்துச் சுடர்நுதல் நீந டக்க
மாய்ந்துளம் நடுங்கி யன்னம் மலரிடைப் பதுங்கிற் றேடி! ௧௦

குழல தரும் இனிய பண்ணும் குறைவிலா யாழின் பாட்டும்
பழகுதென் அமுதும் ஒன்றாய்ப் பாரினில் குழைத்துச் சேர்த்தே
அழகுற யாரே தந்தார்! அணங்குநீ வாய்தி றந்து
மழலையால் எனக்குத் தந்தாய்! மனத்தின்ப மாரி பெற்றேன்! ௧௧

என்னைப்போல் பேச வல்லார் எவரிவண் உள்ளார் என்று
தன்னைத்தான் தருக்கிக் கொண்ட தத்தையுன் சொல்லைக் கேட்டுப்
பின்னுற்றுத் தோல்வி யாலே பேசாமல் நினது சொல்லை
நன்றாகக் கற்றுக் கொள்ள நல்லையுன் கையில் வாழும்! ௧௨

புடமிட்ட பசும்பொன் னுக்குப் பொய்முலாம் பூசல் போலத்
தடத்துள்ள தாம ரைக்குச் சாயத்தைத் தீட்டல் போல
அடடாவோ அறிவி லாதார் அழகிவண் பெற்றெ டுத்த
மடல்வரல் உன்னை எய்தி மகிழ்ச்சியால் அலங்க ரித்தார்! ௧௩

சுருண்டுருள் கூந்த லுக்குத் தோகையர் அகிலெ ரித்து
வரும்புகை ஊட்டி னார்கள்! மகிழ்ச்சிதான்! அதுபோ தாதோ?
விரும்பியே கத்தூ ரியை வீணாக ஏன்அ ணிந்தார்?
பெருகிய காதல் அந்தக் கத்தூரி பெற்ற தாலோ? ௧௪

உன்னருங் கூந்த லுக்கோ ஒருசில மலரே போதும்!
பின்னெதற் காக இந்தப் பெரிதான மாலை வேண்டும்?
அன்பினால் மாலை மேலே அவர்கொண்ட உறவி னாலே
இன்புறச் சூட்டி னாரோ ஏற்றவோர் இடத்தைத் தேடி? ௧௫

திருமுலைத் தடத்தின் மேலே தீட்டினார் தொய்யில் நன்று!
பொருத்தமென் றமைதி கொள்வேன்! புக்கிந்த முத்து மாலை
விருப்புற் றளித்த துன்மேல் விருப்புற்ற தாலா? இல்லை!
விருப்பந்த மாலைக் காக்கி மேன்மைகொள் இடத்திற் சேர்ந்தார்! ௧௬

சிறியபல் முத்து வேர்வை செழுநிலா முகத்த ரும்ப,
நறியபூங் கொடிநு சுப்பு நலிவுறக், கண்டும் கூடச்
செறிந்தபல் அணிகள் யாவும் சேர்த்துனை நகைசு மக்கும்
எறிசுடர்த் தேராச் செய்தார்! என்னதான் செய்யார் பித்தர்! ௧௭

மாசிலாப் பொன்னே! நல்ல வலம்புரி முத்தே! வீசும்
காசிலா மணமே! துன்பக் கணுவிலாக் கரும்பே! இன்பம்
மூசுநற் றேனே! கூடி மொய்த்தவோர் எழிற்பி ழம்பே
ஏசலில் அமுதே! தூய இயற்குடிப் பாவாய் உன்னை, ௧௮

**(எண்சீர் விருத்தம்)**

**மலையிடைப் பிறந்திடாத மணியெனச் சொல்லு கேனோ !**
**அலைகடல் இடத்துத் தோன்றா அமுதெனச் சொல்லு கேனோ!**
**இலையொரு யாழிற் தோன்றா இசையெனச் சொல்லு கேனோ!**
**அலைந்துதாழ் கூந்த லேயோ அறிகிலேன சொல்லு மாறே!** ௩௯

இப்படித்தான் கோவலன்தன் மனமு வந்தே
எழுகாதல் மயக்கமெனும பசும்ப ரப்பில்
ஒப்பறவே செழித்தவிளம் ஆசை யென்னும்
ஒருகொடியில் முகையவிழ்ந்த பூக்க ளாலே
மைப்படிந்த கண்ணாளைக் கண்டு கண்டு
மாலைகட்டி நயந்தணிந்து வருமந் நாளில் !
செப்பருசீர்க் கண்ணகியோர் கோவில் ஆனாள் !
தெய்வமெனக் கோவலனே குடிபுகுந்தான் ! ௪௦

வருநாளில் வாழ்வாங்கு வாழு கின்ற
வழியறிந்து நடந்துயர்வு நண்ணு மாறு
திருமணத்தின் பின்சின்னாள் சென்ற பின்னர்ச்
செழித்தநிதிப் பெருங்கிழத்தி ஒன்று பட்ட
இருவரையும் ஓரில்லில் இருத்தி யாங்கே
இல்லறத்தை இயற்றுவணஞ் செய்தாள் ! இன்பம்
பொருந்தியவர் வாழ்வுயர உதவி யாவும்
போற்றியவள் செய்துமன மகிழ்ச்சி பெற்றாள் ! ௪௧

நலத்தகுசீர் உறவினரை நயந்து பேணி
நாடியற வழிச்செல்வோர் தம்மைப் போற்றி
இலம் என்று வந்தவர்க்கு வாரி வாரி
இலையென்று கூறாமல் கொடைபு ரிந்து,
பலராக விருந்தினர்கள் வந்தி ருந்து
பலநாட்கள் தங்கிடினும் குழைந்து தாங்கிக்
குலக்கொடியக் கொழுகொம்புக் கோவ லன்பால்
கூடிமனை யறத்தினிலே சிறக்க லானாள் ! ௪௨

முடிப்பு :—

முழுநிலவுக் கவிஞர்கள் நிறைய ரங்கில்
மூன்றாம்நாள் பிறையென்னைக் கலந்து கொள்ள
விழுமியநல் லன்பாலே அழைத்த வர்க்கு
விருப்புடனே நான்நன்றி செலுத்து கின்றேன் !
எழுதமிழின் இன்சுவைக்கு மனங்கொ டுத்தே
இதுவரையும் கேட்டவர்க்கும் நன்றி ! கற்புக்
கொழுந்தான கண்ணகியின் வாழ்வு ரைத்த
குணக்குன்றாம் இளங்கோதாள் போற்றி ! போற்றி ! ௪௩

**வணக்கம் ! வாழிய செந்தமிழ் !**

# மயக்கம்

பண்டித. சித. நாராயணசாமி,
*அறுபத்துமூவர் மடம். திருவையாறு.*

"தேருந்தொறு மினிதாந்தமிழ்" "என்றுமுள தென்றமிழ்" என மெய்ப்புலவர்கள் வாயாரப் புகழ்ந்து உரைக்கப்பெறும் மொழியாகிய நந்தமிழ் மொழியினைப் பயினற பழம்புலவர் ஒருவரும் புதுப்புலவர் ஒருவரும் எழுத்து நூல் பற்றிக்கலந்து உரையாடுங்காலத்துப் புதுப்புலவர், எழுத்துக்கள் தனித்து மொழியாதலன்றித் தொடர்ந்து மொழியாகும்பொழுது எவ்வெவ்வெழுததொடு எவ்வெவ்வெழுத்து மயங்கும் என எழுத்தின் மயக்கம் பற்றிப் பல கடாக்கள் கடாவினர். பழம்புலவர், கடாக்களுக்குத் தக்கவிடை இறுத்தனர். அக்கடா விடைகள் நல்ல பயன்தருவனவாகக் காணப்பட்டமையாலும், அவற்றின் முன்னுரையாக அவர்கள் வினவியும் விடை பகர்ந்தும் நின்ற உரைகளும் பயன்படுவனவாகக் காணப்பட்டமையாலும் அவற்றை ஈண்டு எழுத முற்பட்டனன்.

புதுப்புலவர். (பழம் புலவரை நோக்கி) ஐய! தொல்காப்பியம் நன்னூல் முதலிய நூல்களைப் பொதுவாக என்ன பெயரிட்டு வழங்குதல் வேண்டும்? பண்டைக்காலச் சான்றோர்கள் எவ்வாறு வழங்கியுள்ளார்கள்?

பழம்புலவர். "இலக்கண விளக்கம்" "இலக்கணக் கொத்து" எனப் பெயரிட்டு வழங்கி இருத்தலால் அவர்களால், இலக்கண நூல் என்றுதான் அந்நூல்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

புது: இலக்கணம் என்பது இலக்ஷணம் என்ற ஆரியமொழி திரிந்த வடமொழியாகும்: தமிழ் நூலுக்கு அவ் வடமொழிப் பெயரையா பெயராகச் சூட்டுவார்கள்? பிற்காலத்தினர் அவ்வாறு சூட்டினும் ஆரியமொழி வடமொழியாக வந்து மருவாமையால் அதனை அறியாத பண்டைக்காலச்சான்றோர் அவ்வாறு சூட்டினர் என்றல் எங்ஙனம் பொருந்தும்? ஆரியமொழியை அறிந்தவராக இருந்தாலும் எவ்வாறு சூட்டுவர்? ஆரியமொழிதிரிந்த வடமொழியைத் தமிழ்மொழி போலத் தம்மொழியாகக் கருதியகாலத்து வேற்றுமை இன்றித் தமிழ் நூலுக்கும் பிறவற்றிற்கும் வடமொழிப் பெயரைப் பெயராக இட்டு வழங்கினர் என்றல் பொருந்தும். வடமொழியே மருவாத காலத்து அம் மொழியைத் தம் மொழியாகக்கொண்டு தமிழில் தோன்றிய நூல்கட்கும் பிறவற்றிற்கும் அவற்றால் பெயரிட்டு வழங்கினர் என்றல் பொருந்தாதன்றோ? வடமொழி தமிழ் மொழியோடு மருவாதகாலமும் உண்டன்றோ? அக்காலத்தில் தமிழில் தோன்றிய நூல்கட்கும் தமிழகத்தில் தோன்றியபிற பொருள்களுக்கும தமிழ்ப் பெயரையே பெயராக இட்டுவழங்கினர் என்பதை நீவிரும் அறிவீர். ஆனதால், தொல்காப்பியம் முதலிய நூல்

களுக்கு "இலக்கண நூல்" எனப் பெயரிட்டு வழங்கினர் என்பதும் அவ்வாறு வழங்குதல் பழங்காலப் பெயர் என்பதும்பொருந்தா. ஆய்ந்து உரைப்பீராக.

பழம் : "இலக்கணம்" என்ற சொல்லும் தமிழ்ச் சொல்லெனவே சில புலவர் நிலைநாட்ட முயல்கின்றனரே. அவர் கருத்துப்படி அது தமிழ் மொழியே யாகும் என அமைந்தால் என்னை ? வடமொழி எனக்கொண்டு மறுத்தல் வேண்டாமே.

புது : தமிழிற்கலந்து வழங்கும் எல்லாமொழியும் தமிழ்மொழியே என வலிந்து கூறுவார் அவ்வாறு கூற முயல்கின்றனர். அவரும், 'தமிழ்' எனற பெயரும்கூட ஆரியும் சிதைந்த வடமொழி என்று ஆரியமொழி மருட்கொண்டார் கூற்றுக்கு எதிர்கூற்றாகக் கூற முயன்றாரன்றி உண்மையிற் கூற முயன்றவராகார். உண்மையாக நோக்கின் அது வடமொழியே ஆகும். வலிந்து கூறப்புகின் எல்லா மொழியும் தமிழ் மொழியே ஆகும் என்று கூறிவிடலாமன்றோ காய்தல் உவத்தல் இன்றி ஆய்ந்துரைப்பார் கூற்றே பயனுடையதாகும். எல்லாவற்றையுமெய்க்கூற்றென நம்பின் உண்மை புலப்படாதன்றோ.

பழம் : 'இயனூல்' என வழங்கலாம். இயல் என்பது பண்டைக்காலச் சான்றோர்கொண்ட வழக்குமாகும். இதற்கு இடைக் காலப்புலவர் நூல்களில் "இயலறிவ திசையறிவ தினமறிவ துளவாம்" (தத்துவராயர்) "பருந்தொடுநி ழல்சென்றன்ன வியலிசைப் பயன்றுய்ப்பாரும்" (கம்பர்) என வழங்கி இருத்தலும் சான்று பகரும் என்க.

புது : தொல்காப்பியர் முதலியவர் தந்நூல்கட்குப் பொதுவாக இயல் நூல்கள் எனக் கூறாமல் நூலினுள் அமைந்த ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வொன்றன் இயலைப் பற்றிக் கூறுவதால் "புணரியல்" 'உயிர் மயங்கியல்' 'புள்ளிமயங்கியல்' 'குற்றியலுகரப் புணரியல்' 'வேற்றுமையியல' என இவ்வாறு பல உறுப்புகட்கும் பெயரிட்டுச் சென்றனர். இவ்வாறு உறுப்புகட்குப் பெயரிட்டமை கொண்டு அவ்வுறுப்புக்களையுடைய நூல்களை இயல் நூல்களென வழங்கலாமெனில் அரசியல் அங்கவியல் என்பனபோலத் திருக்குறள் முதலிய நூல்களின் கண்ணும் உட்பிரிவுகட்குப் பெயரிட்டிருத்தலால் அந்நூல்களையும் இயல் நூல்கள் என வழங்கலாமன்றோ ஆதலால் தொல்காப்பிய முதலிய நூல்களை இயல் நூல்கள் என வழங்கலாம் என்பதும் பண்டைக்காலச் சான்றோர்கள் அவ்வாறு வழங்கினர் என்பதும் எவ்வாறு பொருந்தும்? "இயலறிவதி சையறிவதின மறிவது" "இயலிசை நாடகம்" என்பனவற்றுள் வரும் இயல் என்பது தொல்காப்பியம்போன்ற நூல்களைக் குறிப்பதன்று என்பது நுண்ணுணர்வுடைய நுமக்குத்தெரியும். பொருந்தக் கூறுவீராக.

பழம் : 'இயல்' என்பது இயற்றமிழைக் குறிக்கின்றது எனக் கருதுகின்றீர் அஃதொக்கும். அவ்வியற்றமிழைப்பற்றிக் கூறுகின்ற

தொல்காப்பியம் போன்ற நூல்களை, அவை அவ்வாறு கூறுதலால் இயல் நூல்களென வழங்குதல் பொருந்துமன்றோ? பொருந்துமாதலின் அவ்வாறு வழங்கலாம் என்க.

புது. பண்டைச்சான்றோர்கள் அவ்வாறு வழங்கினாரா? அவர் எவ்வாறு வழங்கினர் என்பதை அறியவே விரும்புகின்றனன் ஆய்ந்துரைமின் ஐய!

பழம்: நன்று நும்உரை. தொல்காப்பியமும் அதை ஒத்த நூல்களும் சொல்லைப் பற்றி ஆய்ந்து உரைக்கப்புகுந்து, சொற்கள், எழுத்தின் நிலைகுலையாமல் எழுத்தின் செய்தியாக இருத்தலால், எழுத்துக்கள் தனித்த நிலைக்கண் பெறுந்தன்மைகளையும் அவை தனிமொழி தொடர்மொழிகளாக நிகழும் நிலைக்கண் பெறுந்தன்மைகளையும் ஆய்ந்து உரைத்துப் பின்னர்ப் பொருள்களையுணர்த்தும் நிலையில் அம்மொழிக் கணிகழுந் தன்மைகளையும் கூறிப் பின்னர் அம்மொழிகள் உரை வழக்காகவே நில்லாமல் செய்யுளாகவும் அமைதலால் அச்செய்யுளின் கண்ணடக்கும் அகப்பொருள் புறப்பொருள்களாகிய திணைகளையும் அவற்றின் பாகுபாட்டினையும் அச் செய்யுள்களின் இயல்பினையும் அவற்றின்கண் அமையும் உவமக்கவின் முதலியவற்றையும் வழக்கிலும் செய்யுளிலும் மரபு பிறழாமல் வழங்கும் நிலையினையும் கூறி முடிதலின், அவற்றை எழுத்து நூல்களெனவே வழங்குதல் வேண்டும். இவ்வாறே பண்டையோரும் வழங்கினர் என்ப.* இதனை "மயங்கா மரபினெழுத்து முறைகாட்டி" (தொல்-பாயிரம்) "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப" (வள்ளுவர்) "எண்ணுமெழுத்துங்கண் ணெனத்தகும்" (ஔவையார்) "எழுத்தறியத் தீருமிழிதகைமை" (பழைய பாட்டு) "ஏரணங்காணென்ப ரெண்ணரெழுத்தென்ப ரின்புலவோர்" (கோவையார்) "எழுத்தறியார் கல்விப் பெருக்க மெழித்தறிவார்க் காணிநிலையாம்" (நீதிநெறி விளக்கம்) எனப் பண்டைக்காலச் சான்றோரும் அவர்வழி வந்த சான்றோரும் கூறிய மெய் உரைகளால் தெளிக.

புது: இப்பெயர் அந் நூல்களுக்கு மிகப் பொருந்துவதாகும். பண்டைப்பெரியோர்களும் இப் பெயரையே இட்டு வழங்கினர் என்பதும் பொருந்தும். வடநூலாரும் பாணினீய முதலியவற்றை "சத்தசாத்திரம்" எனவே பொதுவாக வழங்குகின்றனர் என அறிகின்றனம். எழுத்தையும் அதன் செய்தியாகிய சொல்லையுமட்டும் கூறும் நன்னூல் முதலியனவும், எழுத்தின் செய்தியாகிய சொல்லை மட்டும்கூறும் இலக்கணக் கொத்துரை முதலியனவும் எழுத்து நூல் என்றற்கும் பொருந்துவனவாரும் என்பதும் தானே விளங்குகின்றது. தொல்காப்பியம் முதலியவற்றை இயல் நூல் என வழங்கினும், முன்னோர் ஒழியப்பின்னோர் காரண இடுகுறிப் பெயராக இலக்கண நூல் என வழங்குதலும் குற்றமின்றேனும் பண்டையோர் எவ்வாறு வழங்

* வழங்கினர் என்ப, என்றது வடமொழி தென்மொழிகளில் அறிவுசான்ற மாதவச் சிவஞானசுவாமிகள் முதலிய மெய்ப்புலவர்களைக் குறிப்பதாகும்.

கினர் என்பதை அறியவே யான் வேண்டினேன்; அறிந்தனன்; அமைகின்றனன். இனி எழுத்து நூல்களுள் எழுத்து, மொழியாக அமையும் நிலைக்கண் 'மயக்கம்' என்று வழங்குவது எதனை?

பழம்: தொல்காப்பியத்தில் நூன் மரபு, மொழி மரபுகளிலும் நன்னூலில் எழுத்தியலிலும் மயக்கம் என வருவதைப் பற்றித் தானே கேட்கின்றீர் எழுத்துக்கள் ஒன்றோடு ஒன்று கூடும் கூட்டத்தையே (சேர்க்கையையே; தொடர்ச்சியையே) மயக்கம் என வழங்குகின்றனர்

புது: அவ்வெழுத்துக்கள், ஒன்றோடொன்று கூடுதற்கு வரையறை ஏதேனும் உண்டோ? உண்டெனில் விளக்குக.

பழம்: க, ச, த பக்களாகிய நான்கு மெய்களும் தம்முடனேயே மயங்கும்; பிறவற்றோடு மயங்கா ர; ழ என்னும இரண்டு மெய்களும் பிற மெய்களுடனேயே மயங்கும்; தம்முடன் மயங்கா. எல்லா உயிர்களும் எல்லா மெய்களுடனும், எல்லா மெய்களும் எல்லா உயிர்களுடனும் மயங்கும். உயிர்களும் மெய்களும் மாறி மயங்குவதற்கு ஓர் வரையறை இல்லை இவ்வாறு மயங்குதலும் மயங்காமையும் எழுத்துக்கள் மொழியாதற் கண்ணேயாம் என அறிக.

புது: இம் மயக்கம் மொழியின் கண்ணே எங்கே நிகழும்

பழம்: இம் மயக்கம் *தனிமொழி தொடர் மொழிகளாகிய இரு மொழிகளினிடையே நிகழும். (என்று உரைத்துப் புன்னகை தாங்கினர்.

புது. (குறிப் புணர்ந்து) ஐய! தெரிந்தனவற்றையே அறிவினாவாக வினவுகின்றனன் எனக்கொள்ளற்க. மயக்கம் பற்றிய ஐயங்கள் பல இருக்கின்றன. ஆதலின், அவ்வையங்களைக் களைவதற்குரிய வினாக்கள் பலவற்றைப் பின்னர், இசைப்பதற்காக, முன்னர், அறிந்தவற்றையே வினவுகின்றனன் ஒழுங்குபடும் எனக் கருதி (என அடக்கத்துடன் தன் குறிப்பை வெளிப்படுத்தி மீண்டும் வினவத் தொடங்கி) அருந்தமிழ் வல்லீர்! ஆசிரியர் தொல்காப்பியர் ஒரு மொழியினிடையே (தனிமொழியினிடையே) நிகழும் இடை நிலை மயக்கத்தையே மயக்க நிலைக்களத்துக் கூறினரன்றித் தொடர்மொழியினிடையே மயங்கும் இடைநிலை மயக்கத்தைக் கூறினாரில்லையென உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் கருதுகின்றனரே அவர் கருத்துக் கொள்ளத்தக்கதோ? தள்ளத்தக்கதோ?

பழம்: அவர் கருத்து, உரையாசிரியர் (இளம் பூரணர்) முதலிய உரையாசிரியர் கருத்துக்களுடன் மாறுபட்டது. மாறுபட்டதாயினும் விறுபட்டதன்று; ஆதலால், கொள்ளத் தக்கதன்று.

புது: ஏன் விறுபட்டதன்றாயிற்று?

---

* தனிமொழி என்பது இங்கே ஒரெழுத்து மொழியைக் குறிப்பதன்று, ஒரு சொல்லைக் குறிப்பதாகும். தொடர்மொழி என்பதும் ஈரெழுத்து முதலியனவாகத் தொடர்ந்த மொழியைக் குறியாமல் இருமொழித் தொடர் முதலிய தொடர் மொழியைக் குறிப்பதாகும்.

பழம் : சில நூற்பாவிதிக்குத் தாம்கொண்ட கொள்கைக்கு ஏற்பக் காட்டுக் காட்டமாட்டாது போயதால் என்க.

புது : நச்சினார்க்கினியரேயன்றி வேறு உரையாசிரியர்களும் சில நூற்பாவிதிக்குக் காட்டுக் காட்டமாட்டாமை நேரின் 'வந்த வழிக் கண்டுகொள்க என எழுதிச் சென்றனர் ; செல்லினும் அது பிழை எனக் கொள்ளாது அவ்விதிக்கு இலக்காம் வழக்கு முன் வழங்கி ஒழிந்ததெனவோ யாண்டோ பனுவல்களில் நிகழுமெனவோ கொள்ளல்போல நச்சினார்க்கினியர் கருத்தும தவறுடையதன்று. அக்காலத்து, அவர் கருத்துக்கியைய அவ்வந் நூற்பாவிதிக்கு இலக்காய் நிகழ்ந்த ஒரு மொழிகள் இக்காலத்து இறந்தன எனக் கொண்டால் என்னை ? எல்லா நூற்பாக்களுக்கும் எவரே தவறாது காட்டுக் காட்டவல்லவராவர் ?

பழம் : எழுத்து நூலாசிரியர் எல்லாரும் மயக்க நிலைக்களத்து எழுத்துக்கள், ஒரு மொழியின்கண் இடைமயங்கும் மயக்கமேயன்றித் தொடர்மொழியின்கண் இடை மயங்கும் மயக்கமும் பெறப்படவே கூறினர் எனக் கொள்ளல் பொருந்துவதாக இருக்க ஒரு மொழியின் கண் இடை மயங்கும் மயக்கமே மயக்க நிலைக்களத்து அவரால் கூறப்பட்டதெனக் கோடல் சாலாது என்க.

புது : அவ்வாறு தொடர்மொழியின்கண் இடைமயங்கும் மயக்கமும் பெறப்படவே அவர்யாத்தனர் என்பதை எவ்வாறு உணர்ந்தீர்?

பழம் : ஆசிரியர் தொல்காப்பியர் எழுத்தின் மயக்கம் பற்றிப் பேசும்போது எழுத்து, மொழிக்கண் தொடருங்கால் ஒருமொழிக்கண் தொடரும் எனப் பிரித்துக்கூறாது,

" அம்மூவாறும் வழங்கியல் மருங்கின்
மெய்ம் மயங்குடனிலை தெரியுங்காலை "

எனப் பொதுவாகக் கூறினர். மயக்க நிலைக்களத்துத் தொடர் மொழியின் இடைமயங்கும் மயக்கத்தையும் சேர்த்துக் கூறினாரல்ல ரெனில், தொடர்மொழிக்கண் புணர்ச்சி விதியினால் வரும் திரிபுகளை (விகாரங்களை) இவை மயக்கவிதி இன்மையால் வந்ததிரிபுகள் இவை மயக்கவிதி இருந்தும் அல்வழி வேற்றுமைப் பொருள் நோக்கத்தால் வந்ததிரிபுகள் என எவ்வாறு கொள்ளுதற்கு இயலும் ? இவ்வாறு வரும் திரிபுகளைக்கொண்டே மயக்க நிலைக்களத்து ஒருமொழியின் இடைமயங்கும் மயக்கமேயன்றித் தொடர்மொழியின் இடைமயங்கும் மயக்கமும் பொருந்த யாத்துக் கூறினர் என அறிந்தனன் என்க. ஆதலால் நச்சினார்க்கினியர் கருத்துத் திருத்தமுடையதன்றாகும். இளம்பூரணரும் மேற்கூறிய கருத்து விளங்கும்படி, " மெய்மயக்கம் ஒரு மொழிக்கும் புணர் மொழிக்கும் பொதுவாதலின் மேற் கூறும் புணர்மொழிச் செய்கை யெல்லாந் தலையாய அறிவினோரை நோக்க ஒருவாற்றாற் கூறியவாறாயிற்று " என உரைத்தமையும் காண்க.

புது: நீவிர் நச்சினார்க்கினியர் கொள்கையை மறுத்து நுங் கொள்கையை நிலைநாட்டினீர்: அஃது அலைவற நிற்பதே ஆக்க. இவ்வாறு, பண்டைக்கால முறையிற் கல்வி பயின்ற புலவர்கள் பழைய உரையாசிரியர்களை மருது அவர் கொள்கைகளை நிலைநாட்டவே வழிதேடி நிற்பர். அதற்கு மாருந்தன்மை நும்மிடத்து நிலை பெறுகின்றது என்னை ?

பழம்: உணராது வுரைத்தீர். இக்காலத்துப் புலவர் சிலர் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் போன்ற பேருரை யாசிரியர்களை வாய் கூசாது ஆய்வின்றி இங்கே தவறினார் அங்கே தவறினார் என்று உரைப்பதுபோல் எம் போன்றார் குற்றம் கூற முற்படுவதில்லை அவர்களை நல்லாசிரியர்களாக மேற்கொண்டு அவருரைகளைப் பயிலும் பொழுது " செவ்வன்றெரிகிற்பான் மெய் நோக்கிக்காணகிற்பான், தெய்வத்தைப் போல மதிப்பான்றிரி பில்லான் " மாணவன் என்பதற் கேற்ப, மெய்மையல்லவெனக் காண்கின் அவருரைகளை அவரின் மேம்பட்டார் உரையை மேற் கொண்டு நீக்க முற்படுவர்: அஃது அவரை வெல்வதாகாதென்க இன்னும் என்னை ஒத்தவர், சான்றோர் உரைகளைத் தவறுடையன போலப் புலப்படினும் பொள்ளெனக் குற்றங் கூறி ஒதுக்காமல் பொன்னே போலப் போற்றி ஆராய்ந்து அவை சென்ற செலவு நன்றெனத்தெரியின் அமைத்தும் அன்றெனத்தெரியின் ஒதுக்கியும் செல்வர். சான்றோரெனக் கொண்டமையால் அவர் கூற்றெல்லா வற்றையும் நல்லன என அமைதல் பயன் தராதென்க. எல்லா வற்றையுமாயாதுள்ளவாறு கொள்ளுதல் நன் மாணவரியல்பாகா தன்றோ.

புது: அது நிற்க. " அண்ணலு நோக்கினா னவளுநோக் கினாள் " (கம்பர்) என்பது போலன்றி ஒருவன் நோக்கப் பின் ஒருத்தி நோக்கல் போல எழுத்துக்கள் ஒன்று மயங்கப் பின்னர் அதனோடு மற்றொன்று மயங்குமோ ? "அண்ணலும் நோக்கினா னவளு நோக்கினாள்" என்பது போல இருவரும் சேர நோக்கல் உண்டன்றே ? அதுபோல ஈரெழுத்தும் சேர மயங்குமோ ?

பழம்: சேர மயங்கா ஒன்று மயங்கப் பின்னர் அதனோடு மற் றொன்று மயங்கும் என்க.

புது: 'கங்கன், என்பதில் ' ங ' என்பது முன்மயங்க, ' க ' என்பது பின் மயங்கிற்றோ ? ' க ' என்பது முன் மயங்க ' ங ' என்பது பின்மயங்கிற்றோ ? கூறுக.

பழம்: 'ங்' என்பது முன்மயங்க 'க' என்பது பின் மயங்கிற் றென்க.

புது: இடைநிலை மெய்ம்மயக்கம் எல்லாவற்றிற்கும் இந்நியமம் உண்டோ ?

பழம்: உண்டு.

புது: இங்ஙனம் காலத்தால் முன்னதாகிய மெய், இடத்தால் முன்னதாய மெய்யுடன் முன் மயங்க, பின் இடத்தால் முன்னதாய மெய், காலத்தால் முன்னதாய மெய்யுடன் மயங்குமெனக் கொள்ளாக்கால் வரும் குற்றம் என்னை ?

பழம்: அங்ஙனங் கொள்ளாக்கால் க, ச, த, ப என்ற நான்கும் தம்முடனேயே மயங்குமென்ற கொள்கை மாசுபட்டதாகும் என்க

புது: ஏன் ?

பழம்: 'கங்கன்' என்பதில் "ஙம்முன்கவ்வாம்" ஙஞண நமன என்னும் புள்ளி முன்னர், தத்தமிசைகள் ஒத்தன நிலையே" என்பனவற்றை நுணுகி நோக்காது ஙகரத்தோடு முன் ககரம் மயங்கிற்று என்று கொண்டால் ஙகரம் பிற எழுத்தாகலின், ககரம் தம்முடனேயே மயங்கும் என்னும் அக்கொள்கை மாசுறுவதாகும், பிறவும் இப்படியே மாசுறும் ஆதலால் ஙகரமே முன்னர்க் ககரத்துடன் மயங்கிற்றென்று கொண்டால் ககர முதலியன தம்முடனேயே மயங்குமென்பது மாசுருதென்க.

புது: அவ்வாருயின், "கவ்வொடு ஙவ்வாம் யவ்வொடு வவ்வே" "ஙஞண நமன எனும் புள்ளிகடம்மொடு தத்தமிசைகளொத்தனநிலையே" என்றன்றே அந் நூற்பாக்கள் அமைதல் வேண்டும். அங்ஙனமின்றி, "ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே" "ஙஞண...... புள்ளி முன்னர், தத்தமி...... நிலையே" என அமைந்திருத்தல் எதனுல் ?

பழம்: பொதுவாய நூற்பா அதாவது மயக்கம் பற்றிப் பொதுவாகக் கூறவந்த நூற்பா, "கசதப வொழித்த ஈரேழன் கூட்டம், மெய்மயக்குடனிலை ரழவொழித் தீரெட், டாகுமிவ்விருபான் மயக்கு மொழியிடை, மேவுமுயிர் மெய்மயக்களவின்றே" (நன்னூல்) எனவும் "அம்மூவாறும் வழங்கியல் மருங்கின். மெய்மயங்குடனிலை தெரியுங்காலை" (தொல்காப்பியர்) எனவும் நின்று மயங்கக்கூடிய மெய்களிவையாகு மென்பதும், பிற மெய்களுடன் மயங்குவன இவை யென்பதும், தம் மெய்களுடன் மயங்குவன இவை யென்பதும் உயிர்நின்று மெய்யுடனும் மெய்நின்று வரும் உயிருடனு மயங்குதற்கு வரையறை இல்லை என்பதும் போதர நின்றன. நன்னூலில் பொது நூற்பாவாக வந்த, "கசதப வொழித்த" என்பதனுட் 'கசதப' ஒழித்த என்பதனுல் காலத்தான் முற்பட்ட ஙகரமெய், முதலியனவே (டறஙஞண நமனய ரல வழள என்பனவே) வரும் பிறவோடு மயங்குதற்குரியனவாக நிற்பன என்பதும் ரழ அல்லாத பிற எல்லா மெய்களும் நின்றுவரும் தம்முடன் மயங்குதற்குரியனவாக நிற்கும் என்பதும் வெளிப்பட்டன. "ஙம்முன் கவ்வாம்" என்பது முதலிய சிறப்பு நூற்பாக்களால், பிறமெய்களுடன் நின்று மயங்குதற்குரிய ஙகர முதலியவற்றுடன்

பிறவெனப்பட்ட வெல்லாம் வாரா என்பதும் வருவனவும் "பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம்" போலாது ஒத்து மயங்கு மென் பதும் மயங்காதனவரின் விகாரப்படுமென்பதும் புலப்பட்டன. நிற்பன வன்றி வருவனவும் ஒத்து மயங்குதல் வேண்டும் என்னும் முறையா லன்றோ ரழ அல்லனவாகிய மெய்கள் தம்முடன் மயங்கு மென்பது பொது நூற்பாவால் பெறப்பட்டிருக்கவும் மயங்குந்தம்முடன் வருந் தாமும் ஒத்து மயங்கும் என்பது போதர, "ரழ வல்லன தம்முற் ருமுடனிலையும்" எனச் சிறப்பு நூற்பாவும் கூறப்பட்டதாகும். தொல்காப்பியத்திலும் இக்கருத்தெல்லாம் அடங்கிக்கிடக்கின்றன. நோக்கி உணர்க,

புது: காலத்தால் முந்திய ஙகர முதலியனவே பிறமெய்களு டன் மயங்குதற்குரியன. காலத்தால் முந்திய ரழ அல்லாத ககர முதலிய மெய்களே தம்மெய்களுடன் மயங்குதற்குரியன. என்பன, பொது நூற்பாவால் பெறப்பட்டன. மயங்கும் அவற்றின் முன் ககர முதலியன வந்து ஒத்து மயங்குமென்பது முதலிய முறைகள் சிறப்பு நூற்பாக்களாற் புலப்படுகின்றன. அதனால், "ஙம்முன் கவ்வாம்" என்றல் முதலியவற்றிற்கு நின்று மயங்கும் ஙகர முதலிய வற்றின் முன் (ஙகர முதலியவற்றோடு)ககர முதலியன வந்து ஒத்து மயங்கும் என்று பொருள்கோடல் தக்கதாகும் என்பது நுங்கருத்தா கின்றது: அது பொருந்துவதாகும். நின்று மயங்கும் தம்முடன் தாம் வந்து மயங்குதலையும் கூறுதல் வேண்டுமோ? கூருவிடின் உண்டாகும் பழுதென்னை?

பழம்: தந்தையே மகனுகின்ருன் என்பது நூற்கருத்தன்ருே? அங்ஙனமாகவும் நெஞ்சு கலந்த இரணியனேடு பிரகலாதன் நெஞ்சு கலவாது வேறுபட்டதுபோல ரழவல்லாத மெய்கள் வரும் தம்முடன் மயங்கவும் வரும் தாமும் ஒத்து மயங்குமோ? ஒத்து மயங்காவோ? மயங்காமையால் விகாரப்படுமோ? என்னுமையங்களையச் சொல்லு தல் வேண்டுமென்க. அன்றியும் வந்தனன் வந்தான் என்பன வற்றுள் சந்தித்தகரம் இடைநிலைத் தகரத்துடன் நின்று மயங்கவும் இடைநிலைத்தகரம் வந்து ஒத்து மயங்காமையால் சந்தித்தகரம் நகரமாகத்திரிந்தது எனக்கொள்ளாது வேறு காரணத்தால் திரிந் தது எனக்கொள்ளவும் இங்ஙனமே பிற காரணங்களால் திரிந்தன வற்றையும் ஒத்து மயங்காமையால் திரிந்தன அல்லவென்று கொள் ளவுந் தம்முன் வந்து மயங்குதலையும் கூறுதல் வேண்டுமென்க.

புது: மயக்கமின்மையால் விகாரப்படுவனவெல்லாம் விகாரப் பட்ட நிலையில் மயங்குமோ? மயங்காவோ?

(தொடரும்)

# புகார் முதல் வஞ்சி வரை

சி. கோவிந்தராசனார்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.
(உரிமை ஆசிரியருடையது)

**வளரும் கலை :-**

வரலாறு ஒரு கலை. வரலாற்றுக் கலைக்கும் மற்றக்கலைகளுக்கும் வேறுபாடுண்டு. வரலாறு எதனையும் புனைந்துரை செய்வதில்லை. அதன் இயல்பு, சென்ற கால மனிதன் வாழ்ந்த நிலவியற்கைச் சுவட்டுடன், அவன் விட்டும் இட்டும் சென்ற பழம்பொருள்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், சுவடிகள், நாட்டுப் பாடல்கள், செவிவழிச் செய்திகள், புதை பொருள்களாக அவ்வப் போது கிடைக்கும் பொருள்கள், ஆகியவற்றைக்கொண்டு நுண்ணறிவால் ஆராய்ந்து, சிந்தித்து, காலத்தோடு ஒப்பிட்டு, சென்ற காலத்தின் இயல்பை முறையாகச் சித்தரிப்பதாகவும் அமையும். இதனைச் சென்ற காலத்தில் நின்ற மனிதன், எப்படி வாழ்ந்தான் ; என்ன செய்தான் ; என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் செய்திகளுள் நினைவில் வைக்கத்தகும் செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் காலத்தோடு முறைப்படுத்திக் கணித்துக் காட்டும் கண்ணாடி என்றும் கூறலாகும்.

ஒரு நாட்டின் மக்கள், தமது நாட்டின் பழமையை வரலாற்றின் வழியே அறிவதால் தங்களையும், வருங்காலத்தையும் ஒழுங்கு படுத்திக் கொள்ளலாகும். இத்தகுதியால் வரலாறு ஒரு சமுதாய சீரமைப்புச் சாலை என்றும் பெயர்பெறும். இக்கருத்தைக் கொண்டே வரலாறென்பது "சென்ற காலத்தின் பழம் ; வருங்காலத்திற்கு வித்து." என்றும் சிறப்பித்துக் கூறுவர். பர்சிய நாட்டு அறிஞரும் "History is a mirror of the Past; A lesson for the Present." என்று கூறி வைத்தனர்.

உள்ளதைக்கொண்டு உருவாக்கப்பெறும் பழைய வரலாறு, அவ்வப்போது கிடைக்கும் சான்றுகளால் பெருகியும், மாறியும், தொடர்ந்தும் வளரும் இயல்புடையது. எனவே, உண்மையின் நேர்மையான சான்றாகும் வரலாறு ஒரு வளரும் கலையாகும்.

**வரலாறு பிறந்த கதை :**

தமிழக வரலாறு, உலக நாடுகளின் வரலாறு. தோன்று வதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தோன்றிவிட்டது. தமிழகத்தில் தாய்மை இட்ட அன்புமொழி வளர்ந்து தாலாட்டான போதே அதில் குடும்ப வரலாறு குழைந்து குறிப்பாக முத்திரை யிட்டது. அவளிட்ட அவலச் சுவையாம் இரக்கச் சுவட்டில், உள்ள உணர்ச்சியும் எழுச்சியும் சென்றகால வாழ்வியலோடு இணைந்து வெளிப்பட்டதால் உருக்கமான உண்மைச் செய்திகள் உருப்பெற்று

வரலாற்றின் இலச்சினையாகவும் நின்றன. இவற்றிற்கெல்லாம் ஆசிரியனுண்டா? காலம் உண்டா? இல்லையே. மனிதவாழ்வியலின் முதல் நிலை; நாகரிகத்தின் தொடக்கம் என்ற அளவே கூறலாகும். இவ்வாறு வரலாறுகொண்டு வளர்ந்த சமுதாயத்தின் சீரமைப்புக் கொரு வாய்ப்பாக, கடந்தகால நிகழ்ச்சிகள் வாய்மொழி வழக்கில் சிந்தாகிச் செவிவழிச் செய்திகளாகவும் நின்றன. இம்முறையிலேயே நாட்டில் நிகழ்ந்த வாழ்க்கை நிகழ்ச்சிகள் சமுதாயத்தினிடையே புதிய தகுதியை அடையும்போது, அன்புப் பாடலாகவும், இரக்கப்பாடலாகவும், எழுச்சிப்பாடலாகவும், உழைப்புப்பாடலாகவும் தேவைகட்கேற்ப உருப்பெற்றன. அப்பாடல்கள் ஆர்வமுடையாரால், நினைவில் வைத்துக்கொள்ளத்தக்க இனிய எளிய சொற்களுடன் இயல்பாகவே வளர்ந்தும் தொடர்ந்தும் வந்தன. அறிவு திறம்பெற்ற நிலையில் அவைகள் கற்பனை மெருகிடப்பட்டு கருத்தும் நீதியும் கலந்து நாட்டில் புழக்கத்திலும் நின்றன.

இத்தகைய வீட்டுப் பாடலும் நாட்டுப் பாடலும் செவிவழிப் பாடல்களாகவே, பேச்சுமொழியில் பின்னிக்கிடந்து, காலப்போக்கில் குறைந்தும் வேண்டியவாறு வளர்ந்தும் வந்திருக்கக்கூடும். இந் நிலையிற்றான் அறிவோரும், அறவோரும் நிகழ்ச்சிகளைச் சொற் றுணர்களால் குறித்து வைத்தனர். சென்ற கால மனிதனின் வாழ் வியலில்கண்ட நன்மை தீமைகளைச் சமுதாயம் உணர்ந்து வருங் காலத்தை ஒழுங்கு படுத்திக்கொள்ளும் முயற்சி பிறந்தது. அதன் பயனாக, செய்தித்துணர்களும், நாட்டுப்பாடலாக நின்ற வரலாற்றுத் தொடர்களும், கதைகளும், நாகரிகப்பாதையில் மொழித்திறத்தோடு உணர்ச்சியும் கலையழகும் கற்பனைத்திறனும் இடப்பட்ட இலக்கிய வடிவாகவும் எழுந்தன இத்தகைய வரலாறுகொண்ட புதிய படைப் புக்களில் புலமையும் சமயமும் புகுந்து இடம்பெற்று நின்றன. பழமையும் புதுமையும் பாங்குடன் கலந்துநின்ற இத்தகைய புதிய படைப்புக்கள் தொடர்நிலைச் செய்யுள்களினாலேயே வளர்க்கப்பட் டன. இந்நிலையை வெண்கலம்போன்ற கலப்பு உலோகத் தன்மை எனலாகும். ஆயினும் கலப்பிட்ட கை வல்லானின் திறமையால் களிம்பேறாத தன்மைபெற்று தட்டினால் இனிய ஓசை எழுவதைப் போன்று, நடுவுநிலைமை பிறழாத தன்மையும் வரலாற்று உண்மை யும்உணர்வுக்கு இடம்பெற்றே நின்றன.

இத்தகைய நிலையிலேயே சென்றகால மனிதனின் வாழ்வியலைக் குறிக்கும் வரலாற்றுப் பாடல்களை அடிப்படையாகக்கொண்டு கற் பனைத்தேனும் கலையழகும் நிரம்பிய காவியப் பூங்கா பல தமிழகத்தில் வளர்ந்தன. இவ்வழியிலேயே கோவலன் கண்ணகி வரலாறும் புதியன புகுத்தும் புலமை நடையில் காலத்தால் முதன்மைபெறும் காவியமாகத் திரண்டெழுந்தது, பழமையும் புதுமையும்:

வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு, நிகழ்ச்சிக்குரிய இடங் களையும் மக்களையும் ஏற்புற அமைத்து, பண்டைத்த மிழகத்தை நடுவு

நிலைமையோடு அளவிட்டு, காவியமாக்கிய அறவோர் இளங்கோவடிகளாவர். அடிகள் சேரர்குலத் தோன்றல்களுள் ஒருவரோ, அன்றி தமிழகச் சான்றோர்களுள் ஒருவரோ ; அதுபற்றிய ஆய்வு இன்றியமையாததொன்றன்று. ஆனால், அடிகள் தமிழுக்கென, தமிழ் மக்களுக்கென, தமிழ் நாட்டுக்கென ஆக்கித்தந்த அழியாப் புகழ்பெறு அற்புதக் காவியப் பூங்காவாம் சிலப்பதிகாரம், என்றும் நின்று பண்டை காலத்தின் தமிழக வாழ்வியலை அளவிட்டு அறுதியிட்டு அறிவிக்கும் அளப்பறும் வளம்பெறு கலைக் களஞ்சியமாகும்.

பழந்தமிழ் இலக்கியங்களில் கண்ட இடங்களைப் பார்த்தறியும் ஆர்வத்தினால் பற்பல இடங்கட்குச் சென்று ஓரளவு உண்மைச் சுவட்டைக்கண்ட ஆர்வத்தினால் தமிழ் மொழியின் வண்ணக் களஞ்சியமாம் சிலப்பதிகாரம் கூறும் கோவலன் கண்ணகி வரலாற்றுக்குரிய இடங்களையும் சின்னங்களையும் பழம்பொருள் ஆராய்ச்சியின் வழியே ஆராய்ந்து கண்டறிதல் இன்றைய தமிழகத்திற்கு ஒரு நல்விருந்தாகுமென்று எண்ணினேன் அந்த சிறிய எண்ணமே புகார்முதல் வஞ்சிவரை யான் சென்று ஆராய்ச்சி செய்வதற்கு ஏதுவாயமைந்தது.

கண்ணகி கோவலன் வாழ்ந்த காலம் தொலைவாகக் கடந்துவிட்டது. அக்கால அரசுகள் அழிந்து மறைந்து விட்டன. பழைய நகரங்கள் மருங்கற மறைந்து புதிய வடிவில் நகரங்கள் தோன்றி விட்டன. மக்கள் வாழ்க்கையும் மட்டற்ற மாறுதல்களைப் பெற்று விட்டன. இந்நிலையில பழைய தமிழ் இலக்கியம் கண்ட இடங்களையும் சின்னங்களையும் வரலாற்றாராய்ச்சி என்னும் கண்ணாடியிற்காண முயன்ற என்னிலையைக்கண்டு இரங்கிக் கூறியவரும் உண்டு. ஆயினும், ஆயிரத்து முன்னூறு ஆண்டுகட்கு முற்பட்ட கோயில்களும், சிற்பங்களும், சின்னங்களும் தமிழகத்தில் இன்றும் இருக்கும் போது அதற்கு முன்னர் தோன்றிய சின்னங்கள் சிதைவுபெற்ற நிலையிலாயினும இல்லாமல் போதற்கில்லை என்ற துணிவினால், கி. பி. 1947-ல் கண்ணகி பிறந்த காவிரிப்பூம்பட்டினத்தைக் காணச் சென்றேன். ஒரு நாளல்ல; ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் சென்றேன்.

## புதைந்த பூம்புகார்

உருத்திரங்கண்ணனாரும், இளங்கோவடிகளும் காட்டிய பெருவளங்கொழித்த காவிரிப்பூமபட்டினம் அங்கில்லை, மணல்மேடுகளும், வெளிகளும், சவுக்குமரக் காடுகளும், காட்சிக்கு இலக்காயின. புலம்பெயர் பரதவர், மணல் மேடுகளில் இட்ட குடிசைகளைத்தவிர, பதியெழுவறியா பழங்குடி கெழீஇய, பொதுவது சிறப்பின் புகார் பெருந்துறைப் பட்டினமோ, மருவூர்பாக்கமோ, இருத்தற்கறிகுறியாக ஏதும் புலனாகவில்லை, 'மலைத்தலைய கடற்காவிரி புனல் பரந்து பொன்கொழித்த நிலைமாறி, கடலில் புகுதற்கும் வலியின்றி,

வளமெல்லாம் வழியே வறியோர் கவர, வாழ்வு தளர்ந்து ஓய்ந்த பெருமகள் போல, குழித்து குட்டையாகி நின்றநிலை என் உள்ளத்தைத் தொட்டது. கடற்கரையில் நின்று கலக்கமுற்றேன். அறியாது, அழகிய நகரை அழித்துவிட்ட அவலத்தை நினைந்து நினைந்து ஒலிப்பதைப் போன்று அலையோசை கேட்டுக்கொண்டே இருந்தது.

**சின்னங்களும், செய்திகளும் :—**

தோலா நாவின் மேலோர், 'சொல்லால் குறித்து வைத்த புகார் நகரைப் புறக்கணிப்பதற்கில்லை. எனவே மாணவர்களுடனும், தனித்தும் பல்வேறுபட்ட வழிகளில் சென்று, ஆராய்ச்சி செய்தேன். உட்புறச் சிற்றூர்களில், சிலம்பும் மணிமேகலையும் இட்டுச் சுட்டிய இடங்களும் சுவடுகளும் பழைய பெயரில் புதிய வடிவில் இருப்பதை அறிந்தேன். கடற்கரையின் இருபக்கமும் நெடுந் தொலைவு சென்று ஆராயவும் முற்பட்டேன். அவற்றுள் ஒன்றாக இன்று தரங்கம்பாடி யென்ற பெயருடன், மாயூரவட்டத்தின் கிழக்கு எல்லையாக நிற்கும் சிற்றூரின் கடற்கரை அலைவாயிலில நின்று அழிந்துவரும், வரலாற்றுப் பழமையோடு கூடிய மாசிலாமணியம்மை கோயிலிலிருந்து வடக்கே தொடர்ந்து நடந்து சென்று, பத்துக்கல் அளவில் காவிரிபூம்பட்டினமிருந்த இடமளவும் ஆராய்ச்சி செய்தேன். புகார் துறை இருந்ததாக அறிஞர் அமைத்திருக்கும் கடற்கரையின் நெடிய விளிம்புகளில் அலை அடித்து அலசிச் செல்லும் போது களிமண் செறிவுத்தொடர்கள் காணப்பட்டன. அவற்றில் கலவையாக இடையிடையே கலந்து நின்ற, வயல்களில் நல்ல நீரில் வாழும் சிறுசங்குக் கூடுகளும், பழமைக்கு எடுத்துக்காட்டாக பழம்பொருள் ஆராய்ச்சித் திறனுடையார் பகுத்துக் காட்டியுள்ள பானையோடுகளும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. அம்மட்டில் நில்லாது, அப்பகுதிகளில் உள்ள பரதவர் இருப்பினுள் இன்முகத்தோடு சென்று அவர்கள் பேச்சின் வழியே நின்று நல்லுரை பேசிய பொழுது, அடுத்துள்ள கரைவெளிகளில் அவர்கள் மீனுணக்கலை இடும் பெருந்தாழிகளைப் புதைக்க அகழ்ந்த போது, அளவிற் பெரிய செங்கற்சுவர் இருந்ததாகக்கூறியதுடன், அதிலிருந்துஎடுக்கப்பட்ட செங்கற்களையும் காட்டினர். அவை அரிக்கன் மேட்டில கிடைக்கும் செங்கற்களின் அளவில் சற்றே தடிப்பு மிகுந்த அளவில் காணப்பட்டன. மற்றும், ஆறுகள் கடலில் கூடும் நீர்வழி அவ்வப்போது மேடிட்டு விலகி, மணலை அறுத்தோடும் போது சில இடங்களில் பழைய கட்டிடச் சிதைவுகள் காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

கடலில், அலைப்பகுதிக்கு அப்பால், கரையில் நிலவகட்டில் காணப்படுவதைப் போன்ற கற்சுவர்கள் காணப்படுவதையும் கரையிலிருந்து ஐந்து கல்லளவிலும் கடல் ஆழமின்றி இருப்பதையும் அவர்களின் வாயிலாக அறிய முடிந்தது. மீன்பிடிக்கும் முறைகளில் ஒன்றாகிய பெருவலையிடுங்கால், கடலில் கரையை நோக்கிப் படிந்து

வரும் வலையின் வாயை நீருள் மூழ்கிப் பிணைக்கும் பழக்கமுடைய 'முழுக்காளி' என்னும் சிறப்புப் பெயருடைய முதியவரொருவர் தமது அனுபவத்தில் கடலுள் கண்ட பொருள்களைப்பற்றிக் கதைகதையாகக் கூறினர். பொறுமையுடன் கேட்ட அக்கதையினுள் புகார் நகரின் சின்னங்கள் ஆங்காங்கே பொதிந்து நின்றன. மற்றும், அவர்களிடம் கிடைத்திருந்த பழங்காசுகள் பலவற்றையும் பார்த்தறிந்தேன். இவைகளெல்லாம், ஒரு காலத்தில் புகார் நகரம் இயற்கையின் வெறியாடலுக்கு இரையாகி இருக்கிறதென்பதை உணர்த்துவதற்கு ஏதுவாக அமைந்தது.

கரையில் நிலவகட்டில் கிடைக்கும் பழங்கால அழிவுச் சின்னங்களுடன், கடலுள் காணப்படும் கற்சுவர்ப் பகுதிகளையும் ஒருங்கே வைத்துச் சிந்திப்போமாயின் பரந்துபட்ட நிலையில் பல்வளங்களோடும் நின்ற புகார் நகரின் பெருமிதத் தோற்றம் ஒருவாறு ஆகக் கண்ணுக்குப் புலனுகும். கடற்கோளினுலேயே புகார் அழிந்ததென்பது பழந்தமிழ் இலக்கியச் சான்ருகும். அங்ஙனமாயின், கரையுள் சில கல் தொலையளவிலும் பழைய சின்னங்கள் அழிந்து புதையுண்டிருப்பது ஏன் ? எல்லைமீறிய பெருமழையினுல் கரையில் வெள்ளமும், வலிய காற்றின் அழுத்தத்தினுல் கடலில் கொந்தளிப்பும் ஏற்படுவதே இயற்கை எழுச்சிகளின் வெறியாடலென்பர் நிலநூல்வல்லார். இத்தகைய ஒத்த அழிவுச்செயல்கள் ஒரே காலத்தில் நிகழ்ந்ததினுலோ, மாறி மாறி ஏற்பட்டதினுலோ பூம்புகார் சிதைந்து தரையில் புதைந்தும் கடலுள் மறைந்தும் போயிற்று. பெருவெள்ளத்திற்குத் தலைமையிடமாகி நின்ற காவிரியும் அதன் கால்களும் சோழநாட்டெல்லையுள் பல காலங்களில் பெருக்கெடுத்து, பல இடங்களைப் பாழாக்கியுள்ள நிலையினை நன்கு அறிய முடிகின்றது. எடுத்துக்காட்டாக, சோழரின் தலைமையிருப்பிடமாகிய பழையாறை நகர் நிலவகட்டில் புதைந்து கிடப்பதற்குக் காரணம் ஆற்றினுல் ஏற்பட்ட அழிவேயாகும்.

எனவே, பட்டினப்பாலையும், சிலம்பும், மணிமேகலையும் வகுத்துக்காட்டிய பெரும்பரப்புடைய காவிரிப்பூம்பட்டினத்தை அகழ்ந்து காணும் முறையில் ஆராய்ச்சி செய்ய முற்படின் அதற்குரிய பகுதி, கடலிலும், கரையுடன் தொடர்ந்த பல சிற்றூர்களுள்ளிட்ட பகுதியாக அமையும். இப்பகுதியை எல்லையிட்டும் காட்டலாகும்.

ஆக்கூர் என்னும் பழம்பெயரோடு கூடிய சிற்றூரினின்றும் கிழக்கே செல்லும் சாலை மூன்று தலையிட்டுப் பிரிகின்றது. இவ்விடத்தை, 'ஆக்கூர் முக்கூட்டு' என்பர். இப்பகுதியினின்றும்

வடக்கு நோக்கிச் சீர்காழிக்குச் செல்லும் சாலையைச் சார்ந்துள்ள தலைச்செங்காடு என்னும் இடத்தை மேற்கு எல்லைக்குரிய மையமாகக் கொண்டு, அதிலிருந்து வடகிழக்கோடிய கோணமாகச் சென்று கடற்கரையை எல்லையிடும், வெண்காடு, கடைக்காடு ஆகிய சிற்றூர்களை எல்லையாகக் கொண்டும், அதே முறையில் தென்கிழக்கோடிய கோணமாக முறையே கடலூர் மயானம், தில்லையாடி ஆகிய சிற்றூர்களை எல்லையாகக் கொண்டும், கிழக்கே கடற்கரையை எல்லையாகக் கொண்டும் இடைப்பட்டுள்ள முக்கோண வடிவமான நிலப்பரப்பினையே ஆராய்ச்சி செய்தற்குரிய இடமாகக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு முக்கோண வடிவமான சூழல் முழுவதும் மலை மலையாக மணல்மேடுகள் ஆங்காங்கு தொடர்ந்து கிடக்கின்றன. வண்டல்மண் இட்ட வளமான களிமண்தரை அவற்றின் அடியில் இயல்பான தரைமட்ட அளவில் புதையுண்டு நிற்கின்றது. எனவே, இயற்கையான தரையின் மீது, காவிரிப்பூம்பட்டினத்தைச் சூழ்ந்தும், தொடர்ந்தும் உள்ளகத்தும் மணல்மேடுகள் இருப்பது ஏன்? அவைகள் மாபெரும் வெள்ளப் பெருக்கிட்ட இலச்சினைகளல்லவா? இவற்றை ஆராய்ந்து அறியின் ஆற்றினாலும், காவிரிப்பூம்பட்டினம் அழிந்து புதைந்த உண்மை நன்கு புலனாகும். அகழ்ந்து காணும் ஆராய்ச்சி என் அளவிற்கு உட்பட்டதாகாது. எனவே, அரசியல் வழியே பழம்பொருள் ஆராய்ச்சிக்கழகமே மேற்கொள்ளல் வேண்டும். (இக் கருத்தினை, சென்ற மே திங்களில் என் உதவியுடன் சில பழைய இடங்களை ஆய்வு செய்த சென்னைப்பல்கலைக்கழக வரலாற்றாராய்ச்சித் துறைத் தலைவர் திரு. டாக்டர். மகாலிங்க அய்யர் அவர்களிடமும் தெரிவித்தேன்)

இவ்வாறான, பழம்பொருள் ஆராய்ச்சி, பண்டைத் தமிழிலக்கியங்களிற் கண்ட உண்மைகட்கோர் சான்றாக நின்றமையால், இத்தகைய ஆராய்ச்சி என் உள்ளத்திற்கோர் எழுச்சியாக நின்றது,

காவிரிப்பூம்பட்டினம் நிலவகட்டிலும், கடலினுள்ளும் அழிந்த நிலையில் இருப்பதைக்கண்டு; கண்ணகியின் வரலாற்றுண்மையினையும் காணக்கூடும் என்ற வேட்கை என் உள்ளத்தில் சிற்றலையாகி எழ, புகாரிலிருந்து கண்ணகி கோவலனுடன் நடந்த பெருவழியாக சிலம்பில் குறிப்பிட்டுள்ள நெறியை, இயன்ற வழியில், தொடர்ந்த நிலையில், கைப்பொருளுக்கேற்ற வகையில், நேரிற்சென்று ஆராய்ச்சி செய்யலானேன்.

(தொடரும்)

# நான்கும் இரண்டும்

ஆசிரியர், கோ. கோவிந்தசாமி,
திருமுக்கூடல்.

நற்குடியில் பிறந்த ஒருவன் ஒழுக்கந்தவறின் அவனைப் பற்றி நன்கு அறிந்தோர் தமக்குள் உரையாடும்போது "என்னய்யா பண்புமிக்க குடியிற்பிறந்தவன் தான் ஒழுக்கம் தவறின் தன்னைப் பற்றி நான்கு பேர் என்ன சொல்வார்கள் என நினைக்காமல் இவ் விதம் நடந்து கொள்கிறான்" என்பர்.

மாந்தர் தம் வாழ்க்கையில் எங்கும் எதற்கும் நான்குபேர் என்ற சொல்லைப் பயன்படுத்துவதைக் காணலாம். அவ்விதம் சொல்வது ஓர் வழக்கமாகவும் ஆகிவிட்டது. ஊரிலுள்ள முக்கியமானவர் களையோ, அன்றி உறவினர்களில் சிலரையோ குறிக்கப் பொதுவாக, நான்குபேர் என்று கூறுவது சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. நான்கு என்ற சொல்லை எடுத்துக்கொண்டால் அதில் புதைந்துள்ள எத்தனையோ அரிய செய்திகளையும், அதேபோல் இரண்டு என்ற சொல்லிலும் இருப்பதை உணரலாம்.

தமிழ் மொழியின் அருமை பெருமைகளை அறிவதற்கு ஏற்றது இந்த நான்கும் இரண்டுமேயாகும்.

"பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்" என்பதன் மூலம் நான்கு என்பது நான்கடியைக் குறிக்கும் நாலடியாரையும், இரண்டு என்பது இரண்டடியுள்ள திருக்குறளையும் குறிப்பதை அறியலாம்.

ஆலும், வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி என்பது பழமொழி. இதில் நாலும் இரண்டும் — நாலடி யாரையும், திருக்குறளையும் உணர்த்துவதை அறியலாம். இவ் விரண்டு நூல்களும் தமிழ் மொழியிற் சிறந்தவை யாகும். தமிழ னுக்குக் கிடைத்த நன் முத்துக்களாகும்.

அறமாவது யாது? அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் ஆகிய நான்கையும் தன்னகத்தே இருந்து அகற்றி நடத்தலே அறமாகும்.

உலகத்து இயற்கை இருவேறு கூறுகளாக உள்ளது. அதில் செல்வமுடையவராக ஆதல் வேறு, அறிவுடையவராக ஆதல் வேறு என்கிறார் வள்ளுவர் பெருந்தகை.

"இருவேறு உலகத் தியற்கைத் திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

விலையுயர்ந்த அணிகள் செய்யத் தேவையானவை பொன்னும், பவளமும், முத்தும், மலையிற் பிறந்த மணியுமாகும். இந் நான்கும்

வெவ்வேறு இடங்களிற் பிறந்தாலும் அணிகள் செய்யுங்காலத்து ஓரிடத்திற் பிறந்தாற்போன்று அமைகின்றன. அதேபோல் சான்றோர் சான்றோரையே சார்வர்.

''பொன்னும் துகிரும் முத்துமன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கலமமைக் குங்காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பாலராப
சாலார் சாலார் பாலராகுபவே''

எனக் கூறுகிறது புறநானூறு.

நற்குடியிற் பிறந்த சான்றோர்க்கு உரிய பண்புகள் நான்கு: அவை முகமலர்ச்சி தன்னிடம் உள்ளவற்றைக் கொடுத்தல், இன்சொல் கூறுதல் எவரையும் இகழாமை ஆகியவைகளேயாகும்.

ஒரு நாட்டிற்கு அரண் எனப்படுபவை உயர்வு, அகலம், வலிமை, அருமை ஆகிய நான்கையும் உடைய மதிலேயாகும் என்று நூல்வல்லார் கூறுவர்.

''உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கின்
அமைவு அரண் என்று உரைக்கும் நூல்''

சைவ சமயத்தைச் சார்ந்த நாயன்மார்களில் முக்கியமானவர்கள் நால்வர். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோர் தம்சமயத்தை வளர்த்த பெரியார்களெனினும் அவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டு அளவிடற்பாலது. இவர்களின் பெருமையை எடுத்துரைப்பதற்கென்றே நால்வர் நான்மணிமாலை என்ற நூலும் எழுந்தது. இந்நூல் நால்வகை மணிகளால் கோக்கப்பட்டமாலை போன்று, வெண்பா, கட்டளைக்கலித்துறை ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்னும் நான்குவகைப் பாக்களால் அமைக்கப்பட்டிருத்தலின் இப்பெயர்பெற்றது.

பதினெண்கீழ்கணக்கு நூல்களில் ஒன்றான நான்மணிக்கடிகை இன்றியமையாத நீதிகளைக் கூறும் நூலாகும். கடைச்சங்க நூலான இதனை மாந்தர் அனைவரும் கற்றுப்பயன் பெறவேண்டியது நன்றாகும்.

''இன்னுமை வேண்டின் இரவெழுக இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்''

இன்னது வேண்டின் இன்னது செய்க என அழகாகக் கூறும் விளம்பிநாகனாரின் திறம் போற்றத்தக்கது.

நான்கெழுத்தினையுடைய ஓர் சொல்லின் முதலெழுத்தையும், இறுதி எழுத்தினையும் சேர்ப்பின் அது கடைச்சாதியைக் குறிக்கும். இரண்டாவது எழுத்தினையும், மூன்றாவது எழுத்தினையும் சேர்ப்பின் அது பரமனுக்கு வீடாகும் என ஒருபுலவர் அதனைப் பாடலாகக்கூறும் போது அப்பாடலின் நயத்தை அறிய இயலுகிறது.

" நாலெழுத்துப் பூடு நடுவே நரம்பிருக்கும்
காலும் தலையும் கடைச்சாதி மேலாக
ஒட்டு முதலெழுத்து மோது மூன்றுமெழுத்தும்
விட்டாற் பரமனுக்கு வீடு "

நான்கெழுத்தினையுடையதும், நடுவே நரம்பினையுடையது மான பொருள் புகையிலை. இதில் முதலெழுத்தையும், மூன்று மெழுத்தையும் சேர்ப்பின் அது புலை என்ற கடைச்சாதியைக் குறிக்கிறது. இரண்டாவது மூன்றாவது எழுத்தினை ஒன்று சேர்க்கும் போது பரமனுக்குரிய இருப்பிடமான கைலைமலையைக் குறிப்பதை அறியலாம். புலவரின் திறனை இப்பாடல் உணர்த்துகிறது.

மாந்தர் அனைவருக்கும் இயற்கையாக அமைந்துள்ள புலன்களில் முக்கியமானது கண். அக்கண் மாந்தருக்கு ஒன்று என இல்லை. இருகண்கள் உள்ளன. ஒன்று மட்டுமிருப்பின் தாம் எதையும் நன்கு காண இயலாது என்பதற்காகவே இரண்டு கண்கள் உள்ளன. அதே போல் எதையும் கண்டு கேட்பதற்கென இரு செவிகள் உள்ளன. எச் செயலையும் செய்வதற்கு இரண்டு கைகள். எங்கும் சென்று வருவதற்கு எளிதாக இரண்டு கால்கள் அமைந்துள்ளன. மாந்தர் நல்வாழ்விற்கு இயற்கையாக அமைந்தவை இவை.

வாழ்வில் நன்று தீது என்ற இரண்டையும் அறிந்து செயலாற்றுவதுதான் மாந்தராகப் பிறந்தோர்க்கு அழகாகும். இல்லையேல் மக்களுக்கும், மாக்களுக்கும், உள்ள வேறுபாடு அற்றவராக ஆவர்.

ஞாலத்தில் இரவு பகல் மாறிவருவதேன் ? திங்களும், மதியும் மாறி மாறித் தோன்றுவதாலன்றோ. திங்கள், மதி என்ற இரண்டுமில்லையேல் இரவு ஏது, பகல் ஏது ? உலகம் ஏது ? மக்கள் தான் ஏது ?

சாதிப்பாகுபாட்டைப் பார்க்கும் மாந்தர் பலர். இறைவன் படைப்பில் அனைவரும் ஒன்று என அவர்கள் எண்ணுவதில்லை. ஆண், பெண் என்ற பாகுபாட்டையன்றி வேறு சாதியில்லை என நவில்கின்றனர் ஆன்றோர். சாதி என்பது இரண்டுதான். பிறர்க்கு எதையும் இல்லையென்னது ஈயும் தன்மையுடையோர் பெரியோர். அவ்விதம் ஈயாதவர் இழிகுலத்தினர். இவ் வேறுபாட்டையன்றி வேறு சாதியில்லை எனக் கூறுகிறது நல்வழி.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது நான்கு எனச் சான்றோர் வகுத்துள்ளனர். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் இன்றியமையாதனவாகும்.

அறத்தில் இரண்டு பிரிவுகள் உள. இல்லறம், துறவறம் என்பன மாந்தர் வாழ்வில் இடம் பெற்றுள்ளன.

இல்லறத்தில் இன்பம் நிலவுவது போன்றே துன்பங்களும் மிகுதி, அதனுல் உள்ளம் சோர்வுருது உறுதியுடன் ஒழுக்க நெறி நின்று நற்பண்புடையோராகத் திகழின் இல்லறம் சிறப்புடையதாகும்.

துறவறம் பற்றற்ற வாழ்வு வாழ்தலாகும். துறவிலும் இருவகை உள. இளமையில் துறவு பூண்பது இல்வாழ்வில் திளைத்துப் பின் துறவு பூண்பது இதில் இளமைத் துறவே சிறந்தது என்பர் ஆன்ருேர்.

மாந்தர் தம் வாழ்வில் எச்செயலையும் நீட்டித்துச் செய்யும் செயல், மறதி சோம்பல், அளவு மீறிய உறக்கம் ஆகிய நான்கும் அவர்கள் அழிவதற்காக விரும்பி ஏறும் மரக்கலமாகும்.

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடு நீரார் காமக்கலன்"

நம் தமிழகத்திற் சிறந்து விளங்கிய புலவர் பெருமக்கள் பலர். அவர்களில் சிறந்தவர் இரட்டையர். ஒருவர் குருடர், மற்ருெருவர் முடவர்.

குருடர் தோள் மீது முடவர் அமர்ந்து வழிகாட்ட அவர் செல்வது வழக்கம். முடவர் இரண்டடி பாடி முடித்ததும் குருடர் மற்ற இரண்டடிகளைப் பாடி முடிப்பார்.

இவ்விருவரும் செல்வ ஒருவரை அணுகி, அவரைப் பலவாறு புகழ்ந்து பொருள் தருமாறு வேண்டினர். எனினும் அச்செல்வ புலவர்களின் சிறப்பை உணராமல், அவர்கட்குப் பொருள் ஏதுமளிக்காமல் அனுப்பிவிட்டார். அதனுல் வருத்தமுற்ற இரட்டையரில் ஒருவர் மூடர் முன்னே பாடல் மொழிந்தால் அப்பாடலின் சிறப்பை அவர்கள் அறிவார்களா? ஆடு எடுத்த தென்புலியூர் அம்பலவா என்ருர். உடனே மற்றவர் அந்தகன் நாயகனு மிருப்பின் ஓர் அணங்கை இலக்குமியைப்போல் சிங்காரித்து யாது பயன் என நவின்ருர்.

"மூடர் முன்னே பாடல் மொழிந்தால் அறிவாரோ
ஆடு எடுத்த தென்புலியூர் அம்பலவா—ஆடகப்பொன்
செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனு ஞல்"

பொருட்சுவை, நகைச்சுவை மிளிர எதையும் பாடும் திறன் படைத்த இரட்டைப் புலவர்கள் மறைந்தும் மறையாதவரே யாவர். அவர்கள் தமிழகத்திற்கு அளித்துச் சென்ற பாக்கள் மூலம் என்றும் நிலைத்து வாழ்வர்,

நான்கும் இரண்டும் மாந்தர் வாழ்வில் ஒன்றியிருப்பதை உய்த்துணரலாம்.

முற்றும்.

# இளங்கோவின் புரட்சி

புலவர், வி. சச்சிதானந்தம்,

'புரட்சி' என்ற சொல் தமிழகத்திற்குப் புதிரும், புதுமையுமாகிய சொல்லாகும். நாடாளும் வேந்தன் மக்களின் கருத்திற்கு மாறுக ஆட்சி செலுத்தினுல், அடக்கு முறையை அதிகமாக மேற்கொண்டால், தன்நலப் பேய்பிடித்து ஆடினுல், அறத்தையும் அருளேயும் புறக்கணித்தால், கருத்துக்கு மாறுபட்டவர்களே யெல்லாம் தருக்கிச் சிறையிலிட்டால் அப்போது மக்களின் மனம் மாறும்; உயிரைப் பொருட்படுத்தாது உறுதிகொண்டு அரசனே எதிர்ப்பர்; பெரும்பாலும் பெரும் போராகவே நிகழும். இந்நிலே என்றும் தமிழக ஆட்சியில் ஏற்பட்டதில்லே; தமிழக வேந்தரிடமும் இருந்ததில்லே. அதனுல் 'புரட்சி' என்ற சொல்லிற்கும் இடமில்லாமற் போய்விட்டது. குடிமக்களின் பழிதூற்றலுக்கு அஞ்சுகின்ற நெஞ்சுடைய அரசர்கள் ஆண்ட நாடு தமிழ்நாடு. "குடிபழிதூற்றுங் கோலேனுகுக" என்று தமிழ் வேந்தன் கூறியதினின்றும் அறியலாம். அரசர்கள் நெறிதவறி நடவாமல் அறிஞர்கள் உடனிருந்து இடித்துரைத்த நிலேமையையும் பண்டைய அரசியலில் பரக்கக் காணலாம். அரசர்களுக்குள் பகை ஏற்படினும் அதனேப்பொருது கடிந்துசென்று அறவுரை கூறி அமைதி உண்டாக்கிய நிலேமைக் கோவூர் கிழாரின் செயலால் அறியலாம். இவ்வாறு பல்லாற்ருனும் தமிழாட்சி சிறப்புற்று விளங்கியதால் மக்கள் மன்னனே எதிர்க்கும் நிலேயே ஏற்படவில்லே. மேலும் மன்னர்கள் தங்கள் வாழ்க்கையை ஆதிக்கம் செலுத்தும் வாழ்க்கையாகக் கருதாமல் அச்சம் நிறைந்த வாழ்க்கையாகவே எண்ணினர். நாட்டிலே மழைவளம் குன்றினுலும், பஞ்சமும் பதுக்கலும் ஏற்பட்டாலும், மக்களின் ஒழுக்கம் குன்றினுலும் நாட்டு அரசியலேயே, அரசர்களேயே பண்டுதொண்டு மக்கள் குறை கூறுவது உண்டு என்பதை "மழைவளங்கரப்பின் வான்பேரச்சம்; பிழையுயிரெய்தின் பெரும்பேரச்சம்" என்று சேரநாட்டு வேந்தன் செங்குட்டுவன் கூற்றிலிருந்து தெரிந்துகொள்ளலாம். முறை செய்து காப்பாற்றும் மன்னவர்கள் ஆண்டதால் மக்கள் கொதித்தெழுந்து மாறுபட்ட செயலேச் செய்வதற்கு வழி ஏற்படவில்லே, எனவேதான் பண்டை இலக்கியத்திலே "புரட்சி" என்ற சொல்லேயே காண இயலவில்லே. மக்கட்கவிஞனுகிய பாரதியே 'புரட்சி' என்ற சொல்லேப் புகுத்த ஆரம்பித்தான். உருசியாவிலே 'ஜார்' மன்னனுடைய ஆட்சி கவிழ்ந்ததும், இங்கிலாந்திலே சார்லஸ் மன்னனே வீழ்த்தியதும் மாபெரும் புரட்சியாகும்.

ஜாரின் வீழ்ச்சியையும், சார்லஸின் போக்கையும் கண்டவர்கள் 'புரட்சி' என்ருல் பெரும் அச்சம் கொள்ளுகிருர்கள். கருவிகொண்டு எதிர்ப்பதையே புரட்சி என்று கருதுகின்றனர். புரட்சி என்ற சொல் எல்லோரையும் கிளர்ச்சியடையச் செய்கின்றது. புரட்சியை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று கருத்துப் புரட்சி; மற்ருென்று

கருவிப் புரட்சி. கருத்துப் புரட்சி பன்னெடுங்காலமாகவே இருந்து வருகிறது. கருவிப் புரட்சிக்கு அடிப்படையாக அமைவது கருத்துப் புரட்சியே. பாவலர்களும், நாவலர்களும் மன்னராட்சியிலேயும் பல கருத்து மாற்றங்களை அஞ்சாது உரைத்துவந்தமையே மக்கள் உரிமையோடு வாழவும், அமைதியாக வாழவும் இடம் கொடுத்தது. கருத்துப் புரட்சியை நோக்கும்போது காலத்தின் தன்மை, மக்களின் கருத்துக்கள், சமுதாய அமைப்பு முதலியவற்றை ஆய்ந்து பார்க்கும் போதுதான் அது நமக்குப் புரட்சியாகத் தோன்றும். காலத்திற் கேற்ற புரட்சி செய்தவர்களுள் விளங்கும் புகழ் இளங்கோவடிகளும் ஒருவராவர். இளங்கோ எவ்வாறு புரட்சி செய்தார் என்பதைப் பற்றி ஆய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமுதாயத்தில் நீதிகளையும், நல்லொழுக்கங்களையும் பிறருக்குப் போதிக்கின்ற நிலையைக் காண்கின்றோம். அந்நிலைகள் அவரது வாழ்க்கையில் காண முடியாத நிலையை அறிகின்றோம். அத்தகையவர்களைப் 'பேதை' என்று கூறுகின்றார் வள்ளுவர். "ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் — தானடங்காப் — பேதை யின் பேதையாரில்" என்பது குறளாகும். ஆனால் கருத்துப்புரட்சி ஏற்படுத்திய இளங்கோ தன்னையே பெரும்புரட்சியாளராக மாற்றிக் கொண்டார். அரசவையில் அமைச்சர்களும், அரசனாகிய தந்தை யும், தன்முன்னோனாகிய செங்குட்டுவனும் அமர்ந்திருக்குங்கால் உடற்கூற்றிலக்கணம் வல்லானொருவன் இளங்கோவிற்கே அரசு ரிமை பெறும் இலக்கணம் உள்ளது என்று கூற, இளங்கோ விரைந் தெழுந்து, மூத்தவற்குரித்து அரசு என்ற முறையை நிலைநாட்டத் தவநெறியை மேற்கொண்டார். திடுக்கிட்ட தமையனின் கருத்திற் கிணங்கக் குணவாயிற் கோட்டத்திலேயே தங்கியிருந்தார் என்பதை அறிவோம். அரசபதவியைத் துறந்து ஆண்டிக்கோலம் பூண்டார். அண்ணன், தம்பியர்க்குள் பல்வேறு கருத்து மாறுபாடுகளும், பகை யுணர்வும் வளர்கின்ற சமுதாயத்தை இணைத்துப் பார்க்கும்போது, தனக்கு வந்த அரசாட்சியினை அண்ணனுக்கு அளித்து, மற்றவர்க ளைப் போலத் தாமிருந்தால் இன்றில்லை என்றாலும் என்றாவது ஒரு நாள் மனம் மாறி அரசியலைக் கைப்பற்றலாம் என்று பிறர் எண்ணு வர் என்பதை உணர்ந்து இளமையிலேயே இன்பங்களைத் துறந்தார் என்று சொன்னால் இதனைப் புரட்சி என்று சொல்லாமல் வேறென் சொல்வது ? பலரும் நம்பிக் கொண்டுவந்த, மறுக்காது போற்றி வந்த சோதிடத்தையே மறுத்தது முதற் புரட்சி, துறவு கொண்டது இரண்டாவது புரட்சி, இரு புரட்சிகள் செய்த இளங்கோ தம் இலக் கியத்தில் செய்த புரட்சி என்ன என்பதை ஆய்வோம்.

தண்டமிழ் மொழியில் தோன்றிய பண்டைய இலக்கியங்கள் நூலினை ஆரம்பிப்பதற்கு முன் கடவுள் வாழ்த்துக் கூறிச்செல் கின்றன. ஆனால் இளங்கோ இறைவழிபாடாகக் கூறாமல் இயற்கை வழிபாடாகக் கூறி மருட்கை விளைவித்தார். சங்க இலக்கியங்களிலே

நூல்களைப் படித்த பிறகுதான் கருத்தினைத் தெரிந்து கொள்ள முடியும். இளங்கோ நூல் எதற்காக எழுந்தது என்பதை முதற்கண் எடுத்து உரைக்கின்றமை புதுமையேயாகும். முப்பெரும் உண்மைகளை மக்களின் மனத்திலே பதிய வைக்கின்றார். ஒன்று அரசியலில் நேர்மை தவறி நடப்பவனை அறமே கொல்லும் என்பது; மற்றொன்று பத்தினிப் பெண்களை உயர்ந்தோர் போற்றுவர் என்பது; வேறொன்று ஊழ்வினை எங்கு சென்றாலும் தொடர்ந்துவரும் என்பதாகும். இதனை,

"அரைசியல் பிழைத் தோர்க்கு அறம்கூற்றாவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்"

என்கிற சிலப்பதிகார அடிகளால் தெளிவாக உணரலாம்.

இளங்கோ முடியாட்சிக் காலத்திலே வாழ்ந்தவர். தானும் ஓர் மன்னனின் மகன். இருப்பினும் குடியாட்சியே சிறந்தது என்பதை வலியுறுத்தவே சிலப்பதிகாரம் எழுதினார். தமிழ் நாடாண்ட மூவேந்தரின் தொடர்பும் சிலம்பிற்கு உண்டு. இளங்கோ நினைத்திருந்தால் தன் முன்னோனாகிய செங்குட்டுவன் செய்த அருஞ்செயல் கொண்டு காவியம் இயற்றியிருக்கலாம். அல்லது தவறுணர்ந்து யானரசனல்லன் எனக்கூறி அலமந்து வீழ்ந்த பாண்டிய மன்னனின பெருமையை வைத்துப் பாராட்டியிருக்கலாம். அல்லது செல்வ வளங்கொண்ட சோழநாட்டு வேந்தனைப் புகழ்ந்திருக்கலாம். செய்தாரா? பின் என் செய்தார்? குடிமக்களுள் ஒருத்தியாகிய கண்ணகியின் காற்சிலம்பை வைத்தே காவியம் பாடினார் என்றால் எளிமையான புரட்சி என்று கூறமுடியுமா? எக்காலத்தவரும் பெண்ணடிமை கொள்ளல் கூடாது என்று அறிவுறுத்தவே இக்காவியம் செய்து புரட்சியை உண்டாக்கினார் என்றாலும் குற்றமாகாது.

நாட்டிலே உள்ள பணம் படைத்தவர்களெல்லாம் நல்ல குணம் படைத்து விளங்கினால், கொள்வது தீது; கொடுப்பது நன்றால் என்ற கொள்கைப்படி வாழ்ந்தால், 'ஈயேன் என்பது இழிந்தன்று' என்பதை உணர்ந்திருந்தால் பட்டினியும், பஞ்சமும் ஏற்பட்டிருக்காது; ஏற்படவும் வழியில்லை. அறங்கூறிய பெரியோர்களும், அருமை இலக்கியங்களும் பண்டுதொட்டு இன்றுவரை கொடுக்க வேண்டும் கொடுக்க வேண்டும் என்று பறைசாற்றினாலும் ஒருசிலர் பதுக்க வேண்டும் என்று பிழை செய்வதைப்பார்க்கிறோம். எனவேதான் இளங்கோவடிகள் காவிரிப்பூம்பட்டினத்திலே உள்ள செல்வர்கள் பிறருக்குக் கொடுத்துப் புகழ்பெற்றார்கள் என்பதை அறிவுறுத்துகின்றார். காவியத் தலைவனான கோவலனின் தந்தையும், கற்பிற்கரசியாம் கண்ணகியின் தந்தையையும் அறிமுகப்படுத்தும் போது "வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்துவான்" என்றும், "மாகவான்

நிகர் வண்கை மாநாய்கன் " என்றும் கூறுகின்றார். இருவருமே பிறருக்களித்து வாழும் பெருந்தன்மை பூண்டவர்கள் என்பதை அறிவிக்கும் முகத்தான் செல்வர்கள் எவ்வாறு இருக்கவேண்டும என்பதை வலியுறுத்தியமையை அறியலாம்.

பண்டைத் தமிழகம் மூவேந்தரால் பன்னலம் பெற்று விளங்கியதை அறியலாம். தமிழ் வளர்ந்தது; தறுகண்மை சிறந்து விளங்கியது. பாட்டுப் பாடிய புலவர்க்குப் பரிசளித்து நாட்டுப் பற்றினை மக்களுக்கு ஊட்டினர். பிறநாட்டவரும் வியக்குமளவிற்குத் தமிழக அரசு சிறப்போடுதான் விளங்கியது. ஆனால் வலியவர் எளியவரை வாட்டும் நிலைமை இருந்தது மூவேந்தர்க்குள் அடிக்கடி பிணக்கும், பூசலும் ஏற்பட்டன. ஒற்றுமை குலைந்து வந்தது. இருபெருவேந்தர்கள் ஒன்றாக இருந்ததைக்கண்டு வியந்த புலவரும் உண்டு. ஒரே நாட்டை ஆண்டுவந்த நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி ஆகியவர்களுக்குள்ளும் போர் நடந்மையைப் புறநானூறு தெரிவிக்கின்றது. இவற்றையெல்லாம் கண்ட இளங்கோ சிதறுண்டு கிடந்த தமிழகத்தை ஒன்றாக்கி, மூவேந்தர்களையும் ஒன்றுபடுத்த தனது காப்பியத்தைப் பயன்படுத்திப் பெரும் புரட்சியை — மாற்றத்தை ஏற்படுத்தினார். காப்பியத் தலைவியாகிய கண்ணகி சோழநாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்திலே பிறந்தவள்; பாண்டியநாட்டு மதுரையிலே கணவனைப் பறிகொடுத்தவள்; சேரநாட்டு வஞ்சியிலே விண்ணுலகம் சென்றவள். அப்பெண்ணிற்குக் கோயிலெடுக்க வைத்தமை மூவேந்தரும் ஒன்றுபடுவதற்கான தன்மையை ஏற்படுத்தியது. தமிழ்நாட்டு வேந்தர்கள் தங்களுக்குள் போரிட்டுப் பகைகொண்டு வாழ்வர் என்ற கருத்தைப் போக்கிய பெருமை இளங்கோவிற்கே முதற் கண் உரித்தாகும்.

சமகாலத்திலே தோன்றி, எழுதிய சீத்தலைச்சாத்தனார் சமய வேறுபாட்டை இலக்கியத்தின் வாயிலாகப் புகுத்தலாம் என்று முதற் கண் வழிவகுத்து மணிமேகலை என்ற காவியத்தை எழுதியிருப்பினும், இளங்கோவடிகள் சமயப்பொதுமையைத் தமது சிலம்பிலே கூறிச் சென்றுள்ளமை பாராட்டுதற்குரியதாகும், பிறவாயாக்கைப் பெரியோன் கோயில் முதலாக பாசண்டச்சாத்தன் கோட்டம் வரை இருந்தது என்பதாலும், தன் முன்னோனாகிய செங்குட்டுவன் சைவ சமயமாக இருப்பினும் தான் சைனமதத்தவராக வாழ்ந்தமையும் சமயப் பொதுமையை உணர்த்துவனவாகும்.

தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை — என் தாய் தடுத்தாலும் விடேன் என்று தருக்கி வாழ்ந்த தமிழ்வேந்தர் ஆண்டநாடு தமிழ் நாடு, வடநாட்டு விருந்திலே காவா நாவிற் கனகனும் விசயனும் தமிழ் வேந்தரின் தறுகண்மையை இகழ்ந்து பேசியதாகக் கேள்வியுற்றான் செங்குட்டுவன். மனம் பொங்கினான். காலத்தை எதிர் பார்த்திருந்தான், கண்ணகிக்குக் கல்லெடுக்க இமயமலை நோக்கிச் சென்றபோது எதிர்த்த வடவரை வென்று, இகழ்ந்து பேசிய கனக

விசயன் தலையிலேயே கல் சுமக்கச்செய்தான் என்றுகூறி நாட்டு மக்களுக்கு ஊக்கமூட்டுவதன் மூலம் புரட்சியை உண்டாக்கினர் இளங்கோ.

அறம் வளர்த்து அன்பைப் பெருக்கும் பெண்களைச் சில தன்னலம் பிடித்தவர்கள் அடிமையாக்கி, அவர்களுக்குப் 'பொது மகளிர்' என்ற பொல்லாத பெயரைச் சூட்டிப் பொருள் கொடுப்போர்க்கெல்லாம் இழிசெயல் செய்யும் புன்மை மகளிராக ஆக்கினர். காலப் போக்கில் 'பொது மகளிர்' என்ற சாதியாகவே மாறி, இடைக் காலத்து அப் பெண்களின் இழிசெயலே அவர்களுக்குரிய அறம் எனவும் நூல்களிலே சொல்லப்பட்டு வலியுறுத்தப்பட்டது. பெண்களுக்கே கற்புடையது எனப் பேசி ஆடவர்கள் தங்கள் கற்பினை மறந்தார்கள். இவ்வாறு வழிவழியாக வந்த இழிநிலை இலக்கியத்திலும், இலக்கணத்திலும்கூட இடம்பெற்று வழக்கத்திலும் வந்த நிலைமையைக் காணலாம். பரத்தையர் பிரிவும் தலைவனுக்குரிய பிரிவுகளுள் ஒன்ருகக் கருதப்பட்டது. இவற்றையெல்லா முணர்ந்த இளங்கோ பெண்களுக்கேற்பட்ட புன்மைச் செயலை நீக்கக் கருதினர். தாழ்ந்த குலம் என்று கருதிவந்த பரத்தையர் குலத்திலே பிறந்தவளாக மாதவியைப் படைத்தார். குலப் பெண்களுக்குரிய குணங்கள் யாவும் பெற்றவளாக ஆக்கினர். ஆடல், பாடல், அழகு ஆயவற்றில் சிறந்தவளாகப் படைத்தார். பொருளை விரும்பி இழிசெயல் செய்யும் புன்மையில்லாதவளாக ஆக்கினர். மாதவியைக் குலப் பெண்களிடத்திலே உள்ள கூடலும், ஊடலும் கொண்டு வாழ்ந்தவளாகக் காட்டினர். இதனைக் "கூடலும் ஊடலும் கோவலற்களித்து" என்ற சிலம்புவரியாலறியலாம். மாதவியின் கானல் வரிப்பாட்டால் மனம் வேறுபட்டு 'மாயப்பொய் பலகூட்டு மாயத்தாள்' எனப் பேசி கோவலன் பிரிந்து சென்ருன், மாதவி கலங்கினள்; மாலை வாரா ராயினும் காலை வருகுவர் எனக் கருதியிருந்தாள். ஆனல் கடைசி வரை கோவலன் வரவில்லை. மதுரையிலே கோவலன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்டுத் துறவு பூண்டாள். அதுமட்டுமா? தனது மகள் மணிமேகலையும் துறவுபூணச் செய்தமையை நோக்கும் போது குலமகளும் செய்யாத செயலைச் செய்து சிறப்புற்றதாக மாதவியைக் கூறலாம் என்று சொல்லத் தோன்றுகிறது. பெண்ணடிமை கடிந்து, பொதுமகளிர் எனப் பேசும் இழிசெயலை நீக்கி, தாழ்ந்த குலத்தினராயினும் உயர்ந்த செயலால் சிறப்படையலாம் எனக் கூறி, பரம்பரை முறையை மாற்றியமைத்துக் குலமகளாகிய கண்ணகிக்கு நிகராகப் பொதுமகளாம் மாதவியைப் படைத்து மாபெரும் புரட்சியை ஏற்படுத்தினர் இளங்கோ என்று அறியும் போது உள்ளமெல்லாம் வியக்கத்தான் செய்கின்றது.

கண்ணகியைப் படைத்த இளங்கோ கற்புடையவளாக, கணவனுடைய இன்பத்தையே தம் இன்பம் என்று கருதி வாழ்ந்தவளாக, வேருெருத்தியிடம் (மாதவி) கணவன் சென்று விடுதலறியா விருப்ப

மொடு வாழ்ந்தபோதும் எதிர்த்துப்பேசாது அடக்கமாக வாழ்ந்தவளாக, குன்றமனைய செல்வம் தொலைந்தபோதும் சிலம்புஉள கொள்ளுங்கள் என்று கூறிக் கொடுக்கும் தன்மையுடையவளாகப் படைத்தபோதும், அமைதியுடையவளாக, அகழ்வாரைத் தாங்கும் நிலம்போன்ற பொறையுடையவளாகப் படைத்தார். மதுரைமாநகரத்து மாதரியின் வீட்டிலே தங்கியிருந்தபோது, பலநாட்களுக்குப் பிறகு தன் கணவனுக்கு உண்டி சமைத்து உண்ணச் செய்கிறாள். இவளது செயல்கண்ட கோவலன் தன் மனைவியைப் பார்த்துப் பிரிந்திருந்த நாளில் எவ்வளவு வருந்தியிருப்பாய்? என்று கேட்டான். கோவலன் மாதவி வீடு சென்று, பல்லாண்டு வாழ்ந்து மனம் வேறுபட்டுத் திரும்ப வந்துசேரும் வரையிலே ஒரு வார்த்தைகூடப் பேசியறியாத கண்ணகி, கணவனே தன் தவற்றையுணர்ந்து கசிந்துருகிக் கேட்டபோது தான் தன் உள்ளக்குமுறலைச்சிறிது வெளிக்காட்டினாள். அப்பொழுதும் அறவோர்க் களித்தலும், அந்தணரோம்பலும் துறவோர்க்கெதிர்தலும் தொலலோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்ததாகக் கூறினாளே தவிர தான் துன்பப்பட்டதாகக் கூறவேயில்லை. அத்தகைய கண்ணகி, கணவன் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொலையுண்ணப்பட்டான் என்ற செய்தியைக் கேட்டதும் கொதித்தெழுந்தாள். மண்மகளறியா மலர்ச் செஞ்சீரடியினளாய கண்ணகி மதுரைமாநகரத்து வீதிவழியே சென்றாள். மன்னனிடம் சென்று வாதாடினாள். தான் பெண் என்பதை மறந்தாள். அரசனாயிற்றே என்றும் அஞ்சாது சென்றாள். தெளிவில்லாத அரசனே! என விளித்தாள். காவியுகுநீரும் கையில் தனிச் சிலம்பும் உடைய கண்ணகியைக்கண்ட அரசன் 'அறிவில்லாதவன்' என்று விளித்ததைக்கேட்டும் பொறுமையோடிருந்து, உண்மையுணர்ந்து, தன் தவறறிந்து உயிரைவிட்டான். வேற்று நாட்டுக் குடிமகள் ஒருத்திக்காகப் பாண்டிய நாட்டு வேந்தன் தன்னுயிரைப் பலி கொடுத்ததையை அறியும்போது கண்ணகி செய்த புரட்சி காலம் கடந்தும் போற்றும் புரட்சியாக விளங்குவதைக் காணலாம்

நாட்டிலே உள்ள ஒவ்வொரு பெண்ணும் தனக்காகவன்றித் தனது குலத்திற்காக—தன் இனத்திற்காகத் தொண்டு செய்ய வேண்டும்; பழியேற்படின் நீக்க வேண்டும்; அதற்காகப் புரட்சி செய்யவும் வேண்டும் என்று அறிவுறுத்துகின்ற முறையில் இளங்கோ தன் காவியத்தை எழுதியிருக்கின்றார்.

கண்ணகியின் புரட்சி பாண்டியனின் உயிரைக்குடித்தது. உள்ளத்தே பொங்கியெழுந்த சினம் மதுரைமாநகரத்தையே எரியும்படிச் செய்தது. பின்னர் வஞ்சிமாநகரம் சென்றாள். கண்ட மலைவாழ் மக்கள் தன் மன்னனிடம் கூறினார்கள். மன்னன் கண்ணகியின் வரலாறுணர்ந்து சிலைவடித்துச் சிறப்புச் செய்தான். நாடாளும் வேந்தன் குடிமக்களின் உயர்விற்காகப் போற்றுதல் வேண்டும்; சிறப்புச்செய்தல் வேண்டும் என்ற மரபைச் செங்குட்டுவன் மூலமாக

ஏற்படுத்துகிறார் இளங்கோ. ஆட்சி செய்கின்ற காரணம்பற்றி ஆணவங் கொண்டு, அதிகார வெறிபிடித்துப் பிறரை அல்லற்படுத்துவதையே தொழிலாகக் கொண்டு வாழாமல் குடிமக்களின் குறைகளைக்கேட்டு, நீதியுடன் அரசு செய்ய வேண்டும் அரசன் என்பதனைப் பாண்டிய, சேரமன்னரின் வாயிலாகக் கூறிப் புரட்சி செய்கின்றார் இளங்கோ.

இதுகாறும் கூறியவாற்றால் இளங்கோ கருத்துப்புரட்சி செய்தவர்களிலே சிறந்தவர் என்பதும், கருத்துப் புரட்சியே கருவிப் புரட்சிக்கு விதையாகும் என்பதும், இளங்கோ தன்னையே புரட்சியாளராக மாற்றிக் கொண்டார் என்பதும், இறைவாழ்த்திற்கு மாறாக இயற்கை வாழ்த்துக் கூறிப் புரட்சி செய்தார் என்பதும், பலரும் பின்பற்றாத—தான் மட்டுமே கூறிய நூலின் உட்கருத்தைக் கூறிப் புதுமையையேற்படுத்தினார் என்பதும், முடியாட்சிக் காலத்திலேயே குடியாட்சிதான் சிறந்தது என்பதை உணர்த்திப் புரட்சி செய்தார் என்பதும், தாழ்ந்தவர்களையும் உயர்ந்தவர்களாக ஆக்க வேண்டும் என்பதை மாதவி மூலம் விளக்கினார் என்பதும், அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற நால்வகைக் குணங்களோடு அடங்கி வாழும் பெண்களாக இருந்தாலும் நெறிமுறை தவறும் போது கடிந்துரைத்துப் புரட்சி செய்ய வேண்டும் என்பதைக் கண்ணகியின் வாயிலாகப் பெறவைத்தார் என்பதும், நாடாளும் வேந்தர்களாயினும் குடிமக்களின் கருத்திற்கு மதிப்பு கொடுத்துத் 'தவறு' என்றால் திருந்தி நடக்க வேண்டும் என்பதைப் பாண்டிய மன்னன், செங்குட்டுவன் ஆகியோரின் மூலமாக விளக்கிக் கருத்திலே மாற்றம் விளைத்துப் புரட்சி செய்தார் என்பதும் தெற்றென விளங்கும்.

சிலப்பதிகாரம் முத்தமிழிலக்கியமட்டுமல்ல; முற்காலத் தமிழனின் தனிச்சிறப்பை விளக்கிக் காட்டும் நூலுமாகும். பண்டைத் தமிழரின் பண்பாட்டை விளக்கும் சின்னமாக, குறள் கண்ட வாழ்விற் கிலக்கியமாக, நெஞ்சையள்ளும் காவியமாக இலங்குகிறது சிலம்பு. இதிகாசங்களின் கதைகள் இந்நாட்டிலே பரவிய அளவு இந்தச் சிலம்பின் கருத்துக்கள் பரவியிருந்தால்—பரப்பியிருந்தால் தமிழுணர்ச்சி பெருகியிருக்கும். எல்லா வளத்திலும் சிறந்த தமிழ் உலக நலத்திற்கே பாடுபடும் அளவிற்குப் பெருகியிருக்கும். எல்லாம் தமிழால் முடியுமா ? என்ற ஏளனப் பேச்சுக்கும் இடமிருந்திருக்காது.

வளர்க தமிழுணர்ச்சி.

# இலக்கியத்தில் திங்கள்

தி. வேங்கடராமன் பி. ஏ., பி. டி., சேலம்.

## நிலாக் காட்சி

எல்லையிலாததோர் வானக்கடலிடை இன்பம் அளித்து இலங்குவது வெண்ணிலவு. அவ்வெண்ணிலவெனும் மோகினியாள் சிரித்து நெளிந்து வான வெளியிலே உதித்து விட்டால் காண்போரின் கண்கள் அகங்கொள்ளைக் காட்சியிலே கட்டுண்டு விடுகின்றன. அது மட்டுமா? மெல்லிய மேகத் திரைக்குள் மறைந்து மறைந்து தன் மேனியழகினைக் காட்டும் அந்நிலவின் காட்சி—அப்பப்பா! அதன் அழகினை என்னென்று உரைப்பது.

எழில்மிக்கு விளங்கும் தண்ணிலவின் காட்சி நாளும் நாம் காண்கின்ற காட்சி. அக்காட்சியைக் காண்கின்றது ஒரு குழவி அக்காட்சியிலே அதன் உள்ளம் உவகை கொள்கின்றது. அந்நிலவின் காட்சியினை நாம் காண்கின்றோம் அதன் அழகில் மெய்மறந்து நிற்கின்றோம். கவிஞன் காண்கின்றான். அதன் அழகினைச் சுவைக்கின்றான், கற்பனை உருவாகின்றது, உள்ளத்தைக்கொள்ளை கொள்ளும் கவிதைகளை உருவாக்குகின்றான். கலைஞன் அதற்கோர் வடிவம் சமைக்கின்றான், அறிவியல் அறிஞன் அவற்றின் இயல்புகளை ஆராய்கின்றான்.

குழவி, கலைஞன், கவிஞன், அறிவியல் ஆகிய இவர்கள் கண்ட காட்சி ஒன்றுதான். அது நிலாக்காட்சி காட்சியிலே இவர்கள் ஒன்றுபட்டாலும் கருத்திலே - எண்ணும் எண்ணத்திலே வேறுபட்டவர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திலிருந்து பார்க்கின்றார்கள். அதனால் கருத்து வேறுபடுகின்றது. குழந்தை விளையாட்டு உள்ளம் கொண்டு காண்கின்றது. கவிஞனும், கலைஞனும், கற்பனை, கலைக்கண்கள் கொண்டு காண்கின்றனர். அறிவியல் அறிஞன் அதில் காணும் புதுமைகளைக் காணும் ஆவலோடு பார்க்கின்றான்.

மனிதனின் உள்ளம், நோக்கம் மனப்பான்மை இவைகளுக்கு ஏற்ப காட்சிகள் மாறுபடுகின்றன. காதல் கண்கொண்டு தண்ணிலவின் காட்சியினைக் காண்கின்றது ஒரு கவிஞன் உள்ளம். அருள் உள்ளம் கொண்டு காண்கின்றது மற்றொரு கவிஞன் உள்ளம் தத்துவக் கண்கொண்டு பிறையைக் காண்கின்றது தத்துவ அறிஞர் உள்ளம். அறிவியல் கண்கொண்டு அறிவியல் அறிஞர் உள்ளம் காண்கின்றது. காதல்கண்கொண்டு அந்நிலவுக் காட்சியினைக் காண்பவர் அங்கு காதல் காட்சியை காட்சியாகக் காண்கின்றார். தத்துவக்கண்கொண்டு காண்பவர் தத்துவக் காட்சியினை அந்நிலவில் காண்கின்றார். அறிவியல் அறிஞர் அறிவியல் காட்சியினை அதில் காண்கின்றார்.

கவிஞர்களும், கலைஞர்களும், தத்துவ அறிஞர்களும், அறிவியல் அறிஞர்களும் பல்வேறு கோணங்களில் நிலவினைக்கண்டு தாங்கள் கண்ட காட்சிகொண்ட கருத்துகளை இலக்கியங்களில் கொட்டி வைத்திருக்கின்றனர்

குழவிகண்ட காட்சி :

குழந்தை விளையாட்டு உள்ளம் படைத்தது. அதற்கு காண்பவை எல்லாம் விளையாட்டுப் பொருளாகவே தென்படும். மாலை நேரத்தில் நிலாமுற்றத்தில் இருந்து தாய் தன் சேயினை இடுப்பில் அமர்த்திப் பால் சோறு ஊட்டுகின்றாள். நிலவினைக்காட்டி. சேய் அக்காட்சியினைக் காண்கின்றது. அக்காட்சியினைக் கண்டவுடன் அதன் உள்ளம் உவகை கொள்கின்றது, தங்கக் கரங்களை நீட்டித் தாவி அந்நிலவினை விளையாட்டுப் பொருளாகக் கருதி பிடித்திட எண்ணுகிறது.

"நிலா நிலா ஓடிவா
நில்லாமல் ஓடிவா"

என்று தண் கதிரோனைத் தன்னுடன் விளையாட அழைக்கின்றது,

புலவர்கண்ட காட்சி :

வானத்தில் நிலவு தோன்றும் காட்சி பலரும் பலமுறை பல்வேறு நிலையில்கண்ட காட்சிதான். அத்நிலவின் காட்சியினை நாம் காணும் நிலைவேறு. கவிஞன் காணும் நிலைவேறு. அக்காட்சியினை நாம் அரைகுறையாகக் கண்டு உணர்ந்து மறந்து போகின்றோம். ஆனால் கவிஞனோ அதன் அழகினை நன்கு தெளிவாக உணர்கின்றான். காட்சி இன்பத்தில் தான்கண்டவற்றினைப் பாடலின் வாயிலாகப் புலப்படுத்துகின்றான்

'அந்தியிரு ளாற்கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான்கண்டேன் திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ. நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை எல்லாம்
சேகரித்துக் குளிர்ஏற்றி ஒளியும் ஊட்டி
இந்தோஎன் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணம் தானோ?

என்ற பாடலின் பாவேந்தர் பாரதிதாசன் தான்கண்டு, இன்புற்று, சுவைத்த காட்சியினை நன்கு உணர்ந்து அந்நிலவின் காட்சியினை நம் மனத்தில் நன்கு படியும் வண்ணம் அக்காட்சியினை நன்கு சித்திரித்துக் காட்டுகின்றார்.

வெண்ணிலவின் காட்சியிலே உளந்தோய்ந்து அதனைச் சுவைத்த பாரதியார் தன் உள்ளக் கிளர்ச்சியை எழில்மிக்க பாடலாக வடித்துச் சமைக்கின்றார்.

சொல்லையும் கள்ளையும் நெஞ்சையும் சேர்த்திங்கு
வெண்ணிலவே! நின்றன்
சோதிமயக்கும் வகையது தானென் சொல்
வெண்ணிலவே!'

சீத மணி நெடுவானகை குளத்திடை
வெண்ணிலவே! நீ
தேசு மிகுந்தவெண் தாமரை போன்றனை
வெண்ணிலவே!'

மேல்லிய மேகத் திரைக்குள் மறைந்திடும்
வெண்ணிலாவே! உன்றன்
மேனியழகு மிகைப் படக் காணுது
வெண்ணிலாவே!'

புலவரின் உள்ளத்தில் நிலவினைக்கண்ட காட்சியில் எழுந்த உள்ளக் கிளர்ச்சியில் அவரை அறியாமலே எழுந்த இனிய இசையுடன் கூடிய பாடலே இது.

**காதலன் கண்ட காட்சி**

அந்தி சாயும் நேரம். வானத்து மோகினியாள் தண்ணொளி பரப்பிக்கொண்டிருக்கும். நிலா முற்றத்தில் நெஞ்சைப் பறிகொடுத்த தலைமகன் கண்ணிற்கினிய கருத்திற்கிசைந்த காதலியின் நலத்தையும், குணத்தையும் புகழ்ந்து அழகுபெறக்கூறி அகமகிழ்கின்றான். அங்ஙனம் அகமகிழ்ந்து காதலன், பெண்ணென்றும் பெருந்தகையாளிடம் அமைந்த அழகினைப் புகழ்ந்து கூறுகின்றான். இடையே தண்ஒளி வீசுதற்குக் காரணமான நிலவினைக் காண்கின்றான். மதியையும் தன் மாதின் முகத்தினையும் ஒப்பிட்டு நோக்குகின்றான் மறுவுற்று விளங்கும் மதியினைப் பார்க்கிலும், மறுவற்று விளங்கும் என் காதலியின் முகமே சிறந்தது என்று கூறுகின்றான். இன்னும் மதியினைப்பார்த்து 'நீ இம்மலரன்ன கண்ணாள் முகம்போல மறுவற்று விளங்கவேண்டுமாயின் அவள்போல பலர் காணத் தோன்றாது எனக்குமட்டும் தோன்றுவாயாக. அங்ஙனம் தோன்றுவாயாயின் உன்னிடமுள்ள மறு ஒழியும். உன்பாலுள்ள மறு ஒழிந்தால் இம்மாதர் முகம்போல விளங்குவாய். மாதர் முகம்போல யான் மகிழும்வகை ஒளிவீசுவாயாயின் நீயும் என் காதலுக்கு உரியாய், எனக் கூறுவான்.

திங்களைக் காதல் கண்கொண்டு கூறுவதாக வள்ளுவர் இவைகளைத் தலைமகன் வாயிலாகக் குறிக்கின்றார்.

'மாதர்முகம் போலொளிவிட வல்லையேற்
காதலை வாழிமதி' (குறள்—1118)

என்னும் வள்ளுவர் பாடல் காதல் கண்கொண்டு நிலவினைக் கண்டு உணர்ந்த காட்சியினை விளக்கும்.

**அருளோன் கண்ட காட்சி:**

மன்னன் கடமை மக்கள் நலிவுறுவண்ணம் காத்தல் ஆகும். இதற்கு அறிகுறியாக அமைவது அரசரின் அரியணைமீது அழகுற அமைந்திருக்கும் வெண் கொற்றக்குடை. மக்களை நலிவுறுவண்ணம் காத்தற்கு அருள் பண்பு வேண்டுமன்றோ? இவ்வருள் செய்யும் பண்பினைப்பால் கதிரோனின் பண்போடு ஒருங்கே வைத்து எண்ணு வது தமிழ் மரபு.

'நீண்டு தோன்று உயர்குடை நிழலெனச் சேர்ந்தார்க்குக்
காண்தகு மதியென்னக் கதிர்விடு தன்மை'

என்று அருள் உள்ளங்கொண்ட ஒரு புலவர் மதிநிழலைக் குடைநிழ லுக்குக் கூறியுள்ளதை இலக்கியத்தில் காணலாம்.

வெண் கொற்றக்குடை குளிர்ச்சியூட்டும் நிழல்போல மன்னன் நாட்டை, நாட்டு மக்களைக் காக்கவேண்டும் என்பதற்காக ஏற்பட்ட குடை. நாட்டு மக்கள் குறைவின்றி நலிவின்றி நிழலைப்போல குளிர்ந்து காணப்படவேண்டும் என்பதன் விளக்கம் இக்குடை.

மந்திர மலையைக் காம்பாகவும், நீலவானம் முழுமையும் ஓலை யாகவும் திங்களை நடுவட்டமாகவும் கொண்டு விளங்கும் குளிர்ச்சி யூட்டும் குடையைப் போலத் தண்ணளியன் கிள்ளிநீர் சூழ்ந்த இவ் வுலகம் முழுமையையும் நிழல்போல் நலிவின்றிக் காப்பான் என்று

'மந்தரம் காம்பா மணிவிசும்பு ஓலையாத்
திங்கள் அதற்கோர் திலதமா — எங்கணும்
முற்றுநீர் வையம் முழுதும் நிழற்றுமே
கொற்றப்போர்க் கிள்ளி குடை'

இப் பாடலில் கிள்ளியின் குடைநிழல் மதிநிழல் போல் இருந்த தனைக் குறிக்கின்றார்.

**அறிவியலறிஞர் கண்ட காட்சி**

நாம் காணும் நிலா நாளும் நாளும் தேய்ந்து பின் நாளும் நாளும் வளர்கின்றது. இக்காட்சி புதுமையல்ல. நாம் காணும் காட்சிதான். கதிரவன் இங்ஙனம் தேய்வதில்லை, நிலா தேய்ந்து வளருகிறது. இதனைக் காண்கின்றார் கவிஞர். 'கதிரவனைத் தேயா மண்டலம்' எனவும், நிலவினை 'தேயும் மண்டலம் மண்டலம்' எனவும் கூறுகின்றார். 'மதியிற்றேய்வன' என்று மதுரைக் காஞ்சியும், 'தேய்த லுண்மையும் என்று புறநானூறும் குறிப்பிடுகின்றன.

நாள்முதிர் மதியம்:— கதிரவனிடமிருந்து தெரித்துப் பின் மண்ணுலகத்திலிருந்து தெரித்துச் சென்ற உருண்டையே திங்கள். திங்கள் கதிரவனைச் சுற்றுகிறது. பூமியையும் சுற்றுகிறது. திங்கள் கதிரவனோடு ஒன்று சேர்வதும், பின் பிரிந்து நேர் எதிர்ப்பக்கத்தை அடைவதும் ஆகும் போது அதன் ஒளி நாளுக்கு நாள் வளர்ந்து முழு வட்டமாகக் காணப் பெறுகின்றது.

'மாக விசும்பின் வெண்டிங்கள்
மூவைந்தான் முறைமுற்ற' (புறம் 400—1—2)

இங்ஙனம் திங்கள் பதினைந்து நிலைகளை அடைகிறது. பதினைந்து கலைவளர்வதை வளர்பிறை எனவும், பதினைந்துகலை தேய்வதைத் தேய்பிறை எனவும் கூறுகின்றோம். முழுநிலவினை அஞ்ஞான்று 'உவவுமதி' 'நாள்முதிர் மதியம்' என்றழைப்பர்.

நாள்முதிர் மதியநாளில் இரவு பகல் போன்று காட்சியளிக்கும்.

'நாள்முதிர் மதியந் தோன்றி நிலாவிரிபு
புகலுரு வுற்ற இரவுவா நயந்தோர்" (மது. 548—49)
"பகலுரு வுறழ் நிலாக் கான்று விசும்பின்
அகல்வாய் மண்டில நின்று விரியும்மே' (அகம், 122-10-11)

என்று புலவர் அக்காட்சியைக் கண்டு புகல்கின்றார்.

பௌர்ணமிநாள். கதிரவன் மறையும் நேரம், முழுநிலாவும் கதிரவனும் எதிர் எதிராகத் தோன்றுகின்றன. சற்றைக்கெல்லாம் கதிரவன் மறைந்து விடுகின்றான். இக்காட்சியினை வேறு எந்த நாளிலும் காணமுடியாது. பௌர்ணமி அன்றுதான் காணமுடியும். இக்காட்சியை ஒரு புலவர் காண்கின்றார். கண்ட புலவர் பாடுகின்றார்.

'உவவுதலை வந்த பெருநாள் அமையத்து
இருசுடர் தம்முள் நோக்கி ஒருசுடர்
புன்கண்மாலை மலை மறைந்தாங்கு' (புறம்)

**அறிவியல் வளர்ச்சியும் பாடல் கருத்துக்களும்.**

பண்டைக்காலத்தில் இராகு கேது என்னும் பாம்புகள் மதியையும் சூரியனையும் விழுங்க முயல்வதாக மக்கள் கருதினர்.

'அகலிரு விசும்பின் அரவுக் குறைபடுத்த
பசுங்கதிர் மதியம் (நற். 377)
"அரவு நுங்கு மதி" (அகம்)

என்று புலவர்கள் இக் கருத்தினைப் பாடிச் சென்றுள்ளனர். அறிவியல் வளர்ச்சியால் இன்று இக்கருத்து மாறிவிட்டது. பூமியின் நிழலால் ஏற்படும் நிகழ்ச்சி இது என இன்றைய அறிஞர்கள் கூறு

வர். எனவே முன் கருத்தை இன்றைய புலவர் யாரும் இன்று பாடுவதில்லை, காரணம் அறிவு வளர்ச்சியே எனலாம்.

திங்களில் முயல் இருக்கிறது என்ற நம்பிக்கை பண்டு இருந்தது.

'குறுமுயன் மறுதிறங் கிளர்மதி (அகம்)

'வம்பறு மறுவைப் பற்றி முயலென்வாங்கும் வண்ணம்' (கம்ப) என இக்கருத்தை அகப்பாடலடியும், இராமாயணப் பாடலடியும் விளக்கிக் கூறுகின்றது. அன்றியும் பிற்பக்கத்து மதி அமரர்க்கு உணவாதல் என்ற நம்பிக்கை இருந்ததனை

'வழியது பக்கத் தமரருண்டி (பரி. 11—35)

'பிறைவளர் நிறைமதி உண்டு' (பரி. 3—53)

என்ற பரிபாடலடிகளால் அறிய முடிகிறது. இக்கருத்துக்களை இன்றைய பாடல்களில் காண முடிவதில்லை. யாரும் இப்பழங் கருத்துக்களையும், அறிவுக்கு ஒவ்வா நிகழ்ச்சிகளையும், கருத்துக்களையும் பாடுவதுமில்லை. ஏனெனில் அறிவியல் வளர்ச்சியால் கருத்துக்கள் மாறுபடுகின்றன.

**கன்னிப்பெண்கள் கண்ட காட்சி**

கன்னிப் பெண்கள். இளமை எழில் கொழிக்கும் மணமாகா மங்கைகள். அக் கன்னிப் பெண்கள் காட்சியிலே நிலவு தெய்வமாகக் காட்சியளிக்கும். தெய்வமாகக் காட்சியளிக்கும் அந் நிலவினை பிறைச்சந்திரனைப் பண்டு மணமாகாக் கன்னிப் பெண்கள் தொழுது நல்ல கணவரைத் தரும்படிக் கேட்டுகொள்வர். தாம் விரும்பியதைப் பிறையிடம் வேண்டிப் பெறுவோமென்ற நம்பிக்கையில் கன்னிப் பெண்கள் 'புல்லென்னும் மாலையில் உயர் பிறையைத் தொழுதனர்:

'ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம
புல்லென் மாலை' (அகம் 231)

என ஒரு புலவர் கன்னிமகளிர் பிறையை வழிபட்டனர் என்பதனைக் குறிக்கின்றார்.

சிவபெருமான் சடைமீது குடியேறியிருக்கும் பெருமையும் பதினெண்கணங்களும் வணங்கும் சிறப்புங்கொண்ட மதியைத் தொழுது காணும் பண்டைய வழக்கத்தைப் புலவர்கள் 'தொழுதுகாண் பிறை' என்று பாடுவர் கடம்பனூர்ச் சாண்டிலியன் என்ற புலவர்

"வளையுடைத் தனையதாகிப் பலர் தொழச்
செவ்வாய் வானத் தையெனத் தோன்றி
இன்னுப் பிறந்தன்று பிறையே' (குறுந். 307,

என்று பிறை வணக்கத்தை புகல்கின்றார்.

கன்னிப் பெண்கள் காதலனை அடைந்து விடுவாளாயின் அவள் பிறையைத் தொழுதல் மரபன்று. காதலன் அவள் தெய்வம். ஆதலால் அவள் வேறு தெய்வத்தை வழிபடுதல் முறையன்று. தமிழிலக்கியத்தில் கோவை யென்னும் பிரபந்தத்தில் 'பிறைதொழு கென்றல்' என்ற துறையில் பல பாடல்களைப் புலவர்கள் பாடியிருக்கின்றனர்.

திங்களை வழிபடத் தனிக் கோயில்கள் அமைத்தனர் பண்டைத் தமிழர். அதனை நிலாக்கோட்டம் என்று அழைத்தனர். பூம்புகார் நகரில் இத்தகைய கோயில் இருந்ததாக இளங்கோவடிகள் கூறுகின்றார்.

### பிரிவால் வருந்தும் காதலி கண்ட காட்சி

இரவு வந்துவிட்டது! நிலவும் வந்துவிட்டது. அந்நிலவு தண்ணளி வீசுகிறதாம் சிலருக்கு. நெருப்பை உமிழ்கிறதாம் சிலருக்கு. என்ன பைத்தியக்காரத்தனம்! அப்படித்தான் பிதற்றுகின்றாள் ஒருத்தி. 'கண்ணிலே நெருப்பை வைத்துச் சுடுபவருடன் கூடி தண்ணிலவாகிய நீயும், காதலனைப் பிரிந்தாரைச் சுட்டுச் சுட்டு விண்ணிலே நெருப்பை வைத்தாய்'' என்று கூறுவதோடு மட்டுமல்லாமல் 'தண்ணிலாக் கொடும்பாவி' என்றும் திட்டுகிறாள்.

'கண்ணிலே நெருப்பை வைத்துக் காந்துவா
 ருடன்கூடக் காந்திக் காந்தி
விண்ணிலே நெருப்பை வைத்தாய் தண்ணிலாக்
 கொடும்பாவி வெண்ணிலாவே' (குற்றாலக் குறவஞ்சி

அதோடு மட்டுமல்லாமல்

'தண்ணமுதுடன் பிறந்தாய் வெண்ணிலாவே
 தண்ணளியை யேன்மறந்தாய் வெண்ணிலாவே
பெண்ணுடன் பிறந்ததுண்டே வெண்ணிலாவே யென்றன்
 பெண்மைகண்டுங் காயலாமோ வெண்ணிலாவே.

என்று காதல் பிரிவால் வருந்தும் நாயகியின் கூற்றினையும் காண்க.

இதுகாறும் கவிஞர், அருளோன், காதலன், அறிவியல் அறிஞர் இவர்கள் கண்ட காட்சிகளை இலக்கியவாயிலாகக் கண்டோம். இனி திங்களைப்பற்றி நூல்களில் காணப்பெறும் வேறு சில செய்திகளைக் காண்போம்.

**திங்கள்—திருமால்:—** எல்லா கோள்களுக்கும் நடுவிலிருந்து தனது கவர்சக்தியால் அவைகளைப் பிணித்து நிற்கின்ற கதிரவன் மண்டிலம் கொடிநிலை எனப்படும். இரவில் பயிர்களுக்கு உயிர் தரும் திங்கள் மண்டிலம் வள்ளி எனப்படும். நெருப்பு மண்டிலம் கந்தழி எனப்படும். கதிரவன் மண்டிலத்திற்கு உரியவன் பிரமன், திங்கள் மண்டிலத்திற்கு உரியவன் திருமால், நெருப்புமண்டிலத்

திற்கு உரியவன்; உருத்திரன் எனப் பண்டைய அறிஞர்கள் கூறியுள்ளனர். உலகங்கள் எல்லாவற்றையும் அடக்கிநிற்கும் சக்தி மண்டிலத்துக்குத் தலைவர் கடவுள் என்று ஏற்றுப் பண்டையோர் கூறியுள்ளனர்.

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' (தொல்)

எனவே பண்டு கதிரவனையும், திங்களையும், நெருப்பினையும் வணங்கி வந்தனர் என அறியவாம்.

**திங்களைப் போற்றுதும் :**

புலவர்கள் நூல் தொடங்கு முன் கடவுள் வணக்கம் பாடித் தொடங்குவர். காரணம் அந்நூல் இனிதே தடையின்றி முடிவுபெற வேண்டும் என்ற எண்ணமே யாகும். கடவுளை அன்றியும் இயற்கையை வணங்கியும் சில நூல்கள் தொடங்கப்பட்டுள்ளன. காரணம் இயற்கையின்பால் அந்நூல் இயற்றிய புலவர் கொண்ட ஆழ்ந்த பற்றுதான்.

'திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்
கொங்கு அலர்தார்ச் சென்னிகுளிர் வெண்குடை போன்றுஇவ்
அம்கண் உலகு அளித்தலான்'

என்று இளங்கோவடிகள் திங்கள் வணக்கத்துடன் நூல் தொடங்குகின்றார்.

**திங்களும் உரோகிணியும் :**

அக்கால மக்கள் திருமணம், உலக வறுமை, மழை பொய்த்தல் முதலிய இயற்கை நிகழ்ச்சிகள் கோள்களின் இயக்கத்தால் நடைபெறுகின்றன என்று நம்பினர். இதனைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

குறிஞ்சிநில மக்கள் திங்களைச் சுற்றி பரிவேடம் உண்டாகும் காலத்தில் திருமணம் செய்துகொள்வர். உரோகிணி நாள் மீனும் திங்களும் கூடிய நாள். வதுவைக்குச் சிறந்தது எனப் பண்டையோர் உணர்ந்து அந்நாளில் மணம் செய்தனர்.

"கோல்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப் புகழ் நாடலை வந்தென" (அகம்–86)
திங்கட் சகடம் மண்டிய துகடீர் கூட்டத்து
..........................................
வதுவை மண்ணிய மகளிர் (அகம்–136)

என்ற அகப் பாடல்கள் இதற்குச் சான்றுகளாகும்.

**உவாநாளும் மீன் பிடிக்கச் செல்லாமையும் :**

பண்டைப் பரதவர் உவா நாளில் மீன் பிடிக்கச் செல்லார். அந்நாளில் கடலில் அலைகள் அதிகம் என்பது யாவரும் அறிந்த உண்மை. அன்று கட்டுமரமேறி கடலில் சென்று வேட்டையாடுதல் இன்னல் விளைப்பது இதனைப் பட்டினப் பாலையால் அறியலாம்.

# வீர மைந்தன்

(ஆத்தூர்-வித்துவான், ஐ. நாராயணன்)

பொன்னிலங்கிப் புகழ்பரப்பும் தென்னிலங்கைக் கோமானின் மனைவியாகத் திகழ்ந்த மண்டோதரியின் மணி வயிற்றில் பிறந்த வீர மைந்தன்தான் மேகநாதன் என்னும் பெயரமைந்தோன். வெம்மை சான்ற வீரக் கொழுந்தாக விளங்கிய இவ் வீரமைந்தனின் வில்லாண்மையைக் கண்டு அரக்கரும் வியந்தனர்

அனுமானால் தம்பி அரக்கன் இறந்தான் என்பதை அறிந்து மேனி வெதும்பி வியர்க்க வெஞ்சினங் கூறிய மேகநாதன் தம்பியை உன்னுந்தோறும் தாரை நீர் ததும்புங் கண்ணனவனானான். 'மரக் கொம்பில் திரிந்து விளையாடும் அற்பக் குரங்கினால் தாழாத வலி படைத்த என் தம்பியோ தேய்ந்தான்? என் தந்தை புகழன்றோ தேய்ந்தது?' என்று எண்ணி வருந்தினான். பின், தன்னிகரில்லாத தார்வேந்தனாகிய தன் தந்தையை அடைந்து தாளில் வீழ்ந்து, கலங்கிய மனத்தோடு தம்பி மாண்டதைத் தெரிவித்தான்.

இலங்கை நாதன் கரைந்துருகும் தன் மைந்தனைக் கைகளால் வாரி எடுத்து, மார்பில் அணைத்துக்கொண்டான், தந்தை நிலையில்! மன்னன் நிலையில் அயலாரை அடக்கும் பொருட்டு அவ்வீர மைந்தனிடம், 'வலிமைபெற்ற குரங்கினிடை ஆழ்ந்து ஆயாமல் அதனிடம கூட்டம கூட்டமாகப் படையை அனுப்பினாய்! ஆதலால் கொன்றனை நீயே யன்றோ அரக்கர்தம் குழுவை!' என்றான். இராகவனின் பணியைச் சிரமேற்கொண்டு, கருங்கடலைக் கடந்து இலங்கையில்

---

283-பக்கத தொடர்ச்சி

'பாய்இரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது
உவவு மடிந்து உண்டு ஆடியும்' (பட்—92-93)

என்பது அவ்வடிகள்

**திங்களின் பிறபெயர்கள் :**

திங்களை (சந்திரன்) அழைக்க பல பெயர்கள் தமிழ் நாட்டில் வழங்குகின்றன. அவைகள் நிலவு, களங்கன், பிறை, கலையினன், உருவின் வேந்தன், அலவன், அம்புலி, தண்ணவன், மதி, இராக் கதிர, அல்லோன், விது. குமுத நண்பன், வேந்தன், ஆலோன், முயலின் கூடு, பசுங்கதிர்த்தே என்பவாம். இப்பெயர்களைக் கொண்டு பண்டைத் தமிழர் திங்களை எவ்வளவு தூரம் ஊன்றிக் கவனித்திருக்கின்றனர் என்பது நன்கு விளங்கும்.

இதுகாறும் கூறிய கருத்துக்களை நோக்குமிடத்து திங்களிடத்து தமிழர் கொண்டிருந்த பற்றினை நன்கு உணரலாம் கலைஞர், கவிஞர், அறிவியல் அறிஞர் இவர்கள் கண்ட காட்சிகளையும், இலக்கியத்தில் திங்களைப் பற்றி கூறியுள்ள கருத்துக்களையும் நோக்குமிடத்து தமிழர்கள் சிறந்த வானநூல் புலமை பெற்றிருந்தனர் என அறியலாம்.

அரக்கரையும் அக்கனையும் அறிந்து ஆர்ப்பரித்த அனுமானைப் பிரிக்க வேண்டும் என்று எண்ணிய வீர மைந்தன் தந்தையின் சொல்லால் மனந்தாளாது, சொல்லின் செல்வனை அனுமானை வில்லின் செல்வனை இம்மேகநாதன் பாசத்தாற் பிணித்தான் என்றால் இவன்து வீரந்தான் என்ன!

நிகும்பலையில் வண்டுருவங்கொண்டு பகைவருக்கு ஏற்றவகை யமைத்த விபீடணனை நோக்கி,

எழுதியோர் அணிந்த திண்தோள்
இராவணன் இராமன் அம்பால்
புழுதியே பாய லாகப்
புரண்டநாள் புரண்டு மேல்வீழ்ந்(து)
அழுதியோ? நீயுங் கூட
ஆர்த்தியோ? இவனை வாழ்த்தித்
தொழுதியே? என்னே செய்யத்
துணிந்தனை? விசயத் தோளாய்!
மனிதருக்(கு) அடிமை யாய்நீ
இராவணன் செல்வம் ஆள்வாய்!
இனியுனக்(கு) என்னே மானம்
எங்களோ(டு) அடங்கிற் றன்றே!

எனப் பலவாறுகூறி இகழ்ந்தான். இஃது காட்டிக்கொடுக்கும் கயவர் கும்க்குச் சாட்டையடி யன்றோ?

இறுதியில் இளையவன் கணைகளால் மாள்வது திண்ணம் என் அறிந்த மேகநாதன் தந்தைபால் சென்று சூழ்நிலையினை எடுத் தோதினான். பின்னர்,

ஆதலால் அஞ்சி னேனென்(று)
அருளலை ஆசை தான்அச்
சீதைபால் விடுதி யாயின்
அனையவர் சீற்றம் தீர்வர்!
போதலும் புரிவர் செய்த
தீமையும் பொறுப்பர்! உன்மேல்
காதலால் உரைத்தேன்!' என்றான்
உலகெலாம் கலக்கி வென்றான்!

மானத்தை எண்ணிய மன்னவன் ஆணையால் மீண்டும் போர்க்களம் புகுந்தான்மேகநாதன்! இலக்குவனின் கணையால் வீர மைந்தனின் தலை,

விண்டலத் திலங்கு திங்கள்
இரண்டொடு மின்னு வீசுங்
குண்டலத் துணைக் ளோடுங்
கொந்தளக் குஞ்சிச் செங்கேழ்ச்
சண்டவெங் கதிரோன் செக்கர்த்
தழலொடும் மருவித் தாம
மண்டலம் விழுந்த தென்ன
விழுந்தது தலையும் மண்மேல்! என்று

கம்பனின் கவி காணுமாறு தாரணியில் தவழ்ந்தது. அரக்கர் கோனின் அருந்தவப்புதல்வனான மேகநாதன் அமரருலகுஅடைந்து அமர வாழ்வடைந்தான்.

அஞ்சாத ஆண்சிங்கம் வெஞ்சமரில் மாண்டது என்பதை அறிந்த இலங்கை வேந்தன் அமர்க்களம் அடைந்தான். எண்திக்கு ஆண்டவனும் ஏழிசை மன்னனுமான இலங்கை நாதனின் மெய் கிடந்த விழிவழி நீரும் மொய்கிடந்த சிலையொடு மூரிமா மைந்தனின் கை கிடந்ததைக் கண்களால் கண்டான். வெங்கண் நாகமெனப் பொலியும் கையைச் செங்கையால் எடுத்து சிரஞ்சேர்த்தி, விடுநெடு மூச்சிட்டு நைந்து உள்ளம் உருகினான்!

மைந்தன் மாண்டான் என்பதைக் கேட்டு வெருண்டு நிலை குலைந்த மண்டோதரி கதறி அழுது கொலையின்மேல் குறித்த வேடன் கூர்ங்கணை உயிரைக்கொள்ள, மலையின்மேல் மயில் வீழ்ந் தென்ன மைந்தன்மேல் மறுகி வீழ்ந்தாள். தலையில்லாத் தன் மகனின் உடலைக்கண்டு, 'உலக மூன்றுகக்கு ஒருவனே செருவல் லோனே! முளரியன்ன நின்முகம்காணு யான் உய்வனோ?' என்று வாய்விட்டு அலறி, 'கலையினால் திங்கள்போல வளர்கின்ற காலத்தே, உன் சிலையினால் அரியை வெல்லக் காண்பதோர் தவமுன் செய் தேன்! தலையிலா வாக்கைக்காண எத்தவம் செய்தேன் அந்தோ! என்று அரற்றினள்.

தன்னகத்தே பத்துத் திங்கள் சுமந்துபெற்ற தாய், இறந்து கிடக்குவ சேயை வாரியெடுத்து,

அம்புலி அம்ம வாவென்(று)
அழைத்தலும் அவிர்வெண் திங்கள்
இம்பர்வந் தானே அஞ்சல்
எனஇரு கரத்தின் ஏந்தி
வம்புறு மறுவைப் பற்றி
முயலென வாங்கும் வண்ணம்
எம்பெருங் களிறே! காண(வே)
சற்றேன் எழுந்தி ராயோ?

என்று நெஞ்சுருகக் கேட்கும் தாயின் உணர்வு பிணைப்பின் கொடு முடியை அடைகின்றதன்றோ? இத்துயரை நேரில் காட்டும் கம்பன் கவிக்கு நாம் செய்யும் கைமாறுதான் என்ன?

வில்லின் செல்வனான வீரமைந்தனின் தலையைக்கண்ட வல்வில் இராமனே, 'என்தலை எடுக்கலானேன்! இனிக் குடை எடுப்பேன் என்றால் மேகநாதனின் வீரத்தை என்னென்று உரைப்பது?

இங்ஙனம், இலங்கையில் வளர்ந்த இந்திரசித்து என்னும் வீர மைந்தன், பிஞ்சுளங்கொண்ட நெஞ்சத்தனாகி அஞ்சாமற் கொஞ்சி, வஞ்சகரை வாய்விட்டு வைது வெஞ்சமரில் மாண்ட வீர வரலாற்றுப் பெருமையை எண்ணுறுந்தோறும் எண்ணுறுந்தோறும் நம்மை வியக்கச் செய்யுமன்றோ?

# ஏர்க்களமும் போர்க்களமும்

— 'தமிழவேள்' —

வானத்தில் முகிற்கூட்டங்கள் குழுமுகின்றன. மின்னல் தோன்றுகிறது. சிறிது நேரத்திற்கெல்லாம் இடிமுழக்கம் கேட்கின்றது. இடியோசை கேட்ட பாம்புகள் தங்கள் புற்றுகளிலிருந்தவாறே அஞ்சி நடுங்குகின்றன. பெருங்காற்று சுழன்று அடிக்கின்றது. மழைபெய்கிறது. மழையால் நிலம் ஈரமாகிறது.

உழவன் ஏருடன் சென்று நிலத்தை உழுது வைக்கிறான், பின்னர் விதைகளைக் கொண்டு சென்று விதைக்கிறான். விதைகள் முளைத்து வளர்ந்து பயிராகின்றன. பயிர்கள் கதிர்களை ஈனுகின்றன. கதிர்கள் முற்றித்தலை சாய்த்து விளங்குகின்றன.

கதிர்கள் நன்கு முற்றிவிட்டது கண்ட உழவன் பல வினையாளர்களுடன் போந்து அறுவடை செய்கிறான். கதிர்மணிகள் அடித்துப் புடைத்துக் குவிக்கப்படுகின்றன, நெற்போர் அழகுறப் பொலிகிறது. அதன் அருகே உழவன் உவகை நிறைந்த உள்ளத்தோடு அமர்ந்திருக்கிறான். உடன் உழைத்த வினையாளர்களுக்கும் தன்னை விரும்பி வருவோர்க்கும் நெல்லை வாரி வாரி வழங்குகிறான். இது ஓர் ஏர்க்களத்தே காணக் கூடிய காட்சியாகும்.

இந்த ஏர்க்களக் காட்சியோடு ஒரு போர்க்களக் காட்சியை ஒப்பிட்டுக் காட்டுகிறார் பரணர் என்னும் புலவர். (புறம். 369)

கரிய பெரிய யானைக் கூட்டங்கள் மேகங்களைப் போன்று குழுமியுள்ளன. படைவீரர்கள் ஒருவர்மேல் ஒருவர் எறிவதற்காக உயர்த்தும் வாட்கள் மின்னலைப் போன்று ஒளிவிடுகின்றன. முழங்குகின்ற போர் முரசம் இடிமுழக்கம் போன்றுள்ளது. இடியொலி கேட்ட நாகம் போன்று, பகையரசர் தம் பாசறையில் இருந்தபடியே போர் முரசு கேட்டு அஞ்சுகின்றனர். குதிரைப்படைகள் பெருங்காற்று வீசுவதுபோல் விரைந்து போரிடுகின்றன. மறவர்களின் விற்களிலிருந்து புறப்பட்டுவரும் அம்புகள் மழைத்துளிகளைப் போன்று எண்ணிறந்த அளவில் விழுகின்றன. போரில் மடிவோரின் உடல்களினின்று ஒழுகும் செந்நீரால் நிலம் ஈரமாகிறது.

அரசன் தன் தேர் ஏறிப் போர்க்களத்தே செல்வது உழவன் ஏரால் தன் நிலத்தை உழுவது போன்றுள்ளது. வில், அம்பு, வேல், வாள் முதலான போர்க்கருவிகள் ஒடிந்து விழுந்து விதைகளைப் போன்று நிலத்தில் ஊன்றி விடுகின்றன. பின்னர்ப் பிணங்களாகி விழும் மறவர்கள், யானைகள், குதிரைகளின் தலைகள், கதிர்கள் முற்றி விளைந்த பயிர்களைப் போன்று சாய்ந்து விழுகின்றன.

போர்க்களத்தே இறந்து குவியும் பிணங்கள் நெற்களத்தே விளங்கும் நெற்போர்களைப் போன்றுள்ளன. அப்பிணங்களை இழுத்துச்செல்லும் நரிகளும் கழுகுகளும், உழவன் நெல்லை வாரி வழங்க எடுத்துச் செல்லும் வினையாளர்களையும் பரிசிலர்களையும் போல் தோன்றுகின்றன. போர்க்களத்துக்கு அருகில் பாசறை அமைத்து அரசன் வெற்றிக்களிப்புடன் அமர்ந்திருப்பது, உழவன் நெற்களத்தே உவகையோடிருப்பதைப் போன்றுள்ளது.

இங்ஙனம் போர்க்களத்தை ஏர்க்களத்தோடு ஒப்பிட்டு அரசனை உழவனோடு ஒப்ப வைத்துப் பாடுகிறார் பரணர். பாடப்பட்ட மன்னன் சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் என்னும் பெருவேந்தன், பேரரசன் ஒருவனை உழவன் ஒருவனோடு ஒப்பிட்டுப் பாடுவது என்றால், அப்பாட்டைக் கேட்டு அம்மன்னன் மகிழ்வது என்றால், ஏர்க்களத்துக்கு—உழவுத் தொழிலுக்கு—அக்காலத் தமிழகத்தில் எத்தகைய உயர்வு சிறப்பு இருந்திருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றுள்ளும் ஏர்த்தொழில் உயர்வாகவே போற்றப்பட்டுள்ளது.

பெரிதும் பண்புகளைப் பற்றியே அதிகாரங்களை வகுத்துள்ள திருவள்ளுவர் 'உழவு' என்று தொழிலைப்பற்றிய ஓர் அதிகாரத்தையும் வகுத்திருக்கிறார் அந்த அதிகாரத்தின் முதற் குறளிலேயே "உலகம் பல தொழில்களைச் செய்து உழன்றாலும் ஏர்த்தொழிலின் பின்னால் தான் நிற்கிறது, எனவே அதைவிடச் சிறந்த தொழில் வேறில்லை" என்கிறார். மேலும் பல இடங்களில் அவர் உழவின் உயர்வைப் பற்றிக் குறிப்பாகக் கூறிச் செல்கிறார். போர் மறவனை "வில்லேர் உழவன்"—வில்லை ஏராக உடைய உழவன் என்று குறிப்பிடுகிறார். அங்ஙனமே ஒரு புலவனை—சொல்லை ஏராக உடைய உழவன்—"சொல்லேர் உழவன்" என்று சொல்கிறார். செங்கோன்மை என்னும் அதிகாரத்தில் கொடியவர்களை அரசன் கொலைத் தண்டம் விதித்துத் தண்டிப்பது உழவன் தன் பயிருக்குத் தீங்கு விளைக்கும் களைகளைக் களைந்தெறிவதற்கு ஒப்பான செயலாகும் என்று கூறுகிறார்.

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் மன்னனைக் குறுங்கோழியூர் கிழார் என்னும் பெரும்புலவர் பாடியிருக்கிறார். அப் புறநானூறறுப் பாடலில் (புறம்—20) அவர் அரசனை நோக்கிக் கூறுகிறார்: "அரசே! உன்னுடைய நாட்டு மக்கள் சோறு ஆக்கும் தீயாகிய வெம்மையோடு ஞாயிற்றினுடைய வெம்மையை அன்றி வேறு வெம்மையை—தெறலை—அறியமாட்டார்கள். வானத்தே எழிலுறத் தோன்றும் வானவிலலை அன்றி, கொலைத்தொழில் புரியும் மறவர் வில்லை அறியமாட்டார்கள், ஏராகிய படைக்கலத்தை அன்றிப் போர்வினைக் கலங்களை அறியமாட்டார்கள்" என்கிறார்.

பத்துப்பாட்டில் ஒன்றான மலைபடுகடாம் என்னும் பாட்டில் இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் என்னும் புலவர் "இசை நுவல் வித்தி நசை ஏர் உழவர்" என்று பரிசிலர்களைக் குறிப்பிடுகிறார். அஃதாவது தாம் பிறரைப் புகழ்ந்து உரைத்தலாகிய விதையால், அவர்கள் தமக்குப் பொருள் கொடுக்க வேண்டும் என்று விரும்புதலாகிய ஏரை உடைய உழவர்கள் என்கிறார்.

இவ்வாறெல்லாம் அரசர்களையும் புலவர்களையும் பரிசிலர்களையும் மறவர்களையும் உழவர்களாகக் கண்ட ஒரு காலம் தமிழகத்தே இருந்திருக்கிறது. உழவன் என்று தன்னைக் கூறிக்கொள்வதில் ஒவ்வொருவரும் பெருமையடைந்திருக்கிறார்கள், போர்க்களத்தை விட ஏர்க்களமே பெரிதும் போற்றப்பட்டு வந்திருக்கிறது.